# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 09
குவிப்பு - 06
பக்கங்கள் - 20
விலை ரூபா 20.00
ஜூன் 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


### யாழ்ப்பாண மற்றும் மன்னார் ஆயர்கள் வன்னியில் பேச்சுவார்த்தை

## பெரும் போர் மூளும் அபாயத்தைத் தடுக்கும் முயற்சியில் தமிழ் ஆயர்கள்!

## சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தத் திருச்சபையின் பங்களிப்புப் பற்றி ஆராய்வு!

### மன்னார் மாவட்டத்தை வன்முறைகள் அற்ற பிரதேசமாக அங்கீகரிக்கும்படி மன்னார் ஆயர் கோரிக்கை!

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களும் மே மாதம் 22ந் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தினர்.

ஒரு பெரும் கொடிய யுத்தத்திற்கு இட்டுச்செல்லும் வகையில் மிகுந்த துயரம் விளைவிக்கும் மனிதக் கொலைகள் மற்றும் வன்முறைகள் நாளாந்தம் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் தற்போதைய தேக்க நிலையை மாற்றியமைத்து சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் திருச்சபை எப்படியான பங்களிப்பை ஆற்றமுடியும் என இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

பொது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாகவும் பொது மக்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுவது குறித்தும் ஆயர்கள் வெளிப்படையாகப் பேசவேண்டும் என்பதையே தாம் ஆயர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாகத் தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பின்போது குறிப்பிட்டார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பதன் ஊடாக மன்னார் மாவட்டத்தை வன்முறைகளற்ற பிரதேசமாக உருவாக்கவேண்டுமென்ற தனது கோரிக்கையை விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்காக மன்னார் ஆயர் விடுத்தார். இதன் மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்டுவதையும் சமாதானம் அருகிலேயே உள்ளது என்ற செய்தியையும் வழங்க முடியும் என ஆயர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கோரிக்கையை தாம் அரசாங்கத்திற்கும் முன்வைக்க இருப்பதாகவும் இரு தரப்பினரும் இதை ஏற்றுக்கொண்டு இதற்கு இணங்கும்பட்சத்தில் இதை நடைமுறைப்படுத்த அனுசரணையாளர்களை ஈடுபடுத்தலாம் எனவும் மன்னார் ஆயர் அவர்கள் இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

---

*நம்மட பாதருக்கும் மாற்றமா?*
*எங்க பாப்பம் ....!*

### மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான பணி மாற்றங்கள்

*மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான பணிமாற்றங்கள் பற்றிய விபரங்களை மன்னார் ஆயர் அவர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.*
*அதன் விபரத்தை 3ம் பக்கத்தில் காணலாம்.*

---

*மடுத் திருத்தலத்தின்*
*யூலைத் திருவிழா*



மடுத்திருத்தலத்தின் யூலைத் திருவிழா வழமைபோல யூன் மாதம் 23ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி யூலை மாதம் 2ந் திகதி நடைபெறும். இவ்வாறு மடுத்திருப்பதியின் தற்காலிகப் பரிபாலகராகிய சேவியர் குருஸ் அடிகளார் மன்னாவுக்கு தெரிவித்தார்.

---

### மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக
## அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக (Vicar General) அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 25 ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக இருந்து அரும்பணியாற்றிய அருட்பணியாளர் சேவியர் குருஸ் அடிகளார் தனது பணியில் இருந்து ஓய்வுபெறுவதை அடுத்தே இவர் இப்பொறுப்பை ஏற்கின்றார்.

யாரையும் எளிதில் புண்படுத்தாத - அனைவரோடும் இணைந்து செயலாற்றக்கூடிய சுபாவமும், இளமைத் துடிப்பும், பணியார்வமும் கொண்ட விக்ரர் அடிகளாரை மன்னா தனது வாசக அன்பர்கள் சார்பாக வாழ்த்தி வரவேற்கின்றது. தனது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்து நிற்கின்றது. இவர் ஓகஸ்ட் மாதம் 19ம் திகதி தனது பணிப்பொறுப்பை ஏற்க இருக்கின்றார். (அடிகளாரின் வாழ்வு மற்றும் பணி பற்றிய விரிவான பார்வையை 7ம் பக்கத்தில் காணலாம்.)

---

### திருத்தந்தையின் உருவம் பொருந்திய
## யூரோ நாணயங்கள்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரின் உருவம் பொருந்திய யூரோ நாணயங்களை வெளியிட வத்திக்கான் முடிவுசெய்துள்ளது. வத்திக்கானின் நாணயத்துறை இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் அங்கமாக உள்ள வத்திக்கானுக்கு அதன் தனித்தன்மையுடன் கூடிய யூரோ நாணயங்களை வெளியிட உரிமையுள்ளது. இவை 2000ஆம் ஆண்டில் ஐரோப்பிய யூனியன் உருவான பின்பு வெளியிடப்படும் 6வது செட் நாணயங்களாகும்.

வத்திக்கான் நாணயங்கள் நாணயம் சேகரிப்போர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறும் என்பதால் இரண்டு செட் நாணயங்களாக இவை விற்பனைக்கு விடப்படும்.

கடந்த ஏப்ரல் 2005இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் உருவத்துடன் யூரோ நாணயங்கள் வெளியிடப்பட்டன.

---

### அமைதி நதியைத் திருப்பிவிடு தாயே!

*கேட்ட வரம் அளிக்கும்*
*கீர்த்தி பெற்ற சீமாட்டி!*
*காட்டில் குடியிருக்கும்*
*கருணை யுள்ள என்தாயே!*
*பாட்டில் மலர் தொடுத்தேன்*
*பாலோடு தேன் எடுத்தேன்*
*நாட்டில் அமைதி என்ற*
*நதியைத் திருப்பிவிடு.*

(புலவர் - அமுது)

---

### 500வது ஆண்டு விழாக் காணும்
## வத்திக்கான் புனித பேதுரு பேராலயம்



வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தின் 500வது ஆண்டு நிறைவைத் திருச்சபை இவ்வாண்டு நினைவுகூருகின்றது. கிறிஸ்தவ உலகில் மிகப்பெரிய தேவாலயம் இதுவாகும்.

இந்த ஆண்டு வத்திக்கான் வரலாற்றில் முக்கியமான ஆண்டாகும். 1506ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் திருத்தந்தை இரண்டாம் ஜுலியஸ் அவர்களால் புனித பேதுரு தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. திருத்தந்தை யூலியஸ் வத்திக்கான் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்த விரும்பினார். அத்துடன் பார்ப்பவரை மலைக்க வைக்கும் ஒரு நினைவுச் சின்னத்தையும் எழுப்ப விரும்பினார். அது கத்தோலிக்க திருச்சபையின் மகத்துவத்தையும் வல்லமையையும் உலகிற்கு உணர்த்த வேண்டும் என்பதிலும் உறுதியாய் இருந்தார். அவ்வுறுதிப்பாட்டின் வெளிப்பாடே தற்போது கம்பீரமாக ஓங்கி நிற்கும் வத்திக்கான் புனித பேதுரு பேராலயமாகும்.

---

### செபமாலைத் தாசர் சபையின்
## புதிய அதி உயர் தலைவராக
### அருட்பணியாளர் ஏ. எம். ஸ்ரீபன் (செ.தா.)



செபமாலைத் தாசர் சபையின் புதிய அதி உயர் தலைவராக (Superior General) அருட் பணியாளர் ஏ. எம். ஸ்ரீபன் அடிகளார் தெரிவுசெய்யப் - பட்டுள்ளார். கடந்த மாதம் இந்தியாவில் நடைபெற்ற சபையின் பொது அமர்வின்போதே அடிகளார் தேர்வுசெய்யப்பட்டார்.

அவரின் ஆலோசகர்களாக இந்தியாவைச் சேர்ந்த முன்னைய உயர் தலைவர் அருட்தந்தை கே. பி. சேவியர் அடிகளும், அருட்தந்தை லோறன்ஸ் அடிகளும், அருட்சகோதரர் தோமஸ், அருட்சகோதரர் அமல்ராஜ் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செபமாலைத் தாசர் சபையின் பொறுப்புவாய்ந்த முக்கிய - புதிய பணியை கையேற்கும் ஸ்ரீபன் அடிகளாரை அன்போடும் மகிழ்வோடும் மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

(அடிகளாரின் பணிவாழ்வு பற்றிய விரிவான கண்ணோட்டம் பக்கம் 20ல் இடம்பெறுகிறது.)

---

### 40வது உலக சமூகத் தொடர்பு தினம்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் 40ஆவது உலக சமூகத்தொடர்பு தினச் செய்தியை அண்மையில் வெளியிட்டுள்ளார். இத்தினம் மே மாதம் 28ஆம் திகதி உலகெங்கிலும் கொண்டாடப்பட்டது. இலங்கையில் யூன் மாதம் 25ம் திகதி இது கொண்டாடப்படவுள்ளது. திருத்தந்தை தமது உலக சமாதானத் தினச்செய்திக்கு ***"ஊடகம் - தொடர்புகளின் வலைப் பின்னல் - ஒன்றிப்பும் ஒத்துழைப்பும்"*** என்று தலைப்பிட்டுள்ளார்.

2ம் வத்திக்கான் சங்கத்தின் 40 ஆண்டுகள் நிறைவாகின்ற வேளையில் கொண்டாடப்படுகின்ற இச்சமூகத் தொடர்பு தினத்தை சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக திருத்தந்தை கருதுகிறார். தூய பவுல் அப்போஸ்தலருடைய "இவரே நமக்கு அமைதி அருள்பவர் இவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை தமது உடலில் ஏற்று துன்பத்தின் வழியாகத் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார்" என்ற வசனத்தை மேற்கோள்காட்டி இத்தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும்படி திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

---

### எதிர்பாருங்கள்...!

மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயரும் இன்றைய யாழ் ஆயருமான மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தனது ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார்.

அத்துடன் மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வராகக் கடந்த 25 ஆண்டுகளாக அரும்பணியாற்றிய அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் தனது குருமுதல்வர் பணியில் வெள்ளிவிழாக் கண்டு ஓய்வுபெறுகிறார்.

இவர்கள் இருவரின் வெள்ளிவிழா நிகழ்வுகளையொட்டி மன்னா தனது அடுத்த பொழிவை (யூலை மாதம்) தோமஸ் ஆண்டகை மற்றும் சேவியர் குரூஸ் அடிகளாரின் வெள்ளிவிழாச் சிறப்பிதழாக வெளிக்கொணர உள்ளது.

(பதிப்பாசிரியர்)

# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## குருக்கள் நம்முடையவர்களே!

இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் குருக்களைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது, மறைமாவட்ட வரலாற்றில் முதல் தடவையாக எட்டுப் பேர் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இரண்டாவது 40 குருக்கள் இடமாற்றம் (பணிமாற்றம்) பெறுகின்றனர். இந்த இரண்டு நிகழ்வுகளையும் கண்முன் வைத்து இறைமக்களின் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்குமாக சில கருத்துக்களை முன்வைக்க முனைகின்றேன்.

### அழைத்தல் ஆண்டவரின் அருட்கொடை

இயேசு மலைமேல் ஏறித் தாம் விரும்பியவர்களை அழைத்தார். அவர்கள் அவரிடம் வந்தனர். தம்மோடு இருப்பதற்கும், பேய்களை ஓட்டும் அதிகாரத்தோடு தூது அறிவிக்கத் தாம் அனுப்புவதற்குமெனப் பன்னிருவரை ஏற்படுத்தினார். (மாற்கு 3: 13 - 15) இயேசு தாம் விரும்பியவர்களையே அழைக்கின்றார். என்ன அடிப்படையில் ஆண்டவர் பணிவாழ்வுக்கு மனிதர்களை அழைக்கின்றார் என்பதற்கு விடை, "தனது விருப்பத்தின் அடிப்படையில்" என்பதேயாகும்.

### மக்களிடமிருந்து தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்

"ஒவ்வொரு தலைமைக் குருவும் மக்களிடையே நின்று தேர்ந்துகொள்ளப்பட்டு மக்களுக்காகவே, கடவுளைச் சார்ந்தவற்றுக்கென ஏற்படுத்தப்படுகிறார்." (எபி. 5: 1) இந்த உண்மையை, "இறைவன் தம் குருக்களை எப்போதும் குறிப்பிட்ட மானிட, திருச்சபையைச் சார்ந்த சூழல்களிலிருந்தே அழைக்கின்றார். கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக அதே சூழல்களுக்குள்ளே அனுப்பவும் செய்கின்றார்" என (மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன் - அப்போஸ்தலிக்க ஊக்கவுரை எண். 5 இல்) திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் குறித்துக் காட்டுகின்றார்.

### அனைத்துக் கண்களும் பார்க்கின்றன

குரு ஒருவர் கிறிஸ்தவ சமுகத்தின் மையமாக இருந்து செயற்படுகின்றவர். எனவே அவருடைய ஒவ்வொரு அசைவும் அனைவராலும் அவதானிக்கப்படுவது இயல்பானதே. "தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்றுநோக்கியிருந்தன" (லூக். 4: 20) என லூக்காஸ் நற்செய்தியாளர் இயேசுவைக் குறித்துக் கூறியது இன்றைய குருக்களுக்கும் பொருந்துவதாகவே உள்ளது. எனவே ஒரு குரு ஒரு சமுகத்தில் உள்ள, அல்லது ஒரு பங்கில் உள்ள அனைவரதும் கவனத்தை இயல்பாகவே ஈர்ப்பவராக Centre of the Atraction) இருக்கின்றார். இது தவிர்க்க முடியாத யதார்த்தமாக உள்ளது. இந்நிலையில் அனைவரதும் அவதானத்திற்கும் விமர்சனத்திற்கும் உரியவராக இருக்கின்றார்.

### குற்றப்படுத்துவதில் குறியாக இருக்காதீர்கள்

"குரு எப்போதும் தவறானவர்" ("A Priest is always wrong") என்ற தலைப்பில் ஒரு சிந்தனைப் பிரசுரம் ஒன்று உள்ளது. இது நகைச்சுவையாக எழுதப்பட்ட ஒன்று. அது நகைச்சுவையாக எழுதப்பட்டிருந்தாலும் சிந்தனைக்குரிய செய்திகளும் உள்ளன. அதில் ஒரு குருவானவர் எப்படி நடந்தாலும் அவர் பிறர் கண்களுக்கு தவறானவராகவே தெரிவார் என்ற உண்மை பல உதாரணங்கள் மூலம் காட்டப்படுகின்றது. "சரியான நேரத்திற்கு திருப்பலியை ஆரம்பித்தால், 'மக்களைப் பற்றி அக்கறையில்லாதவர்' என்பார்கள். மக்கள் எல்லோரும் வந்துசேரும் வரை காத்திருந்து தொடங்கினால் 'நேரமுகாமைத்துவம் சற்றேனும் இல்லாதவர்' என்று சொல்வார்கள்." "பங்குமனையிலேயே இருந்து பணிசெய்துகொண்டிருந்தால் 'மக்களை சந்திக்காமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறார்' என்பார்கள். வெளியில் அடிக்கடி போய் வீடுகளை சந்தித்தால் 'பங்குமனையில் இருக்காமல் சுற்றிக்கொண்டு திரிகிறார்'என்பார்கள். ..." இப்படி அந்த பிரசுரம் தொடர்கிறது.

### அன்போடு அறிவுரை கூறுங்கள்

குருக்களும் மனிதர்கள்தான். அவர்கள் வழுவாவரம் பெற்றவர்கள் அல்ல. அவர்களும் தவறக்கூடியவர்கள்தான். அவர்களின் மனிதத் தவறுகளை, பிழைகளை மற்றவர்களிடம் சொல்லித்திரிவதைவிட, ஆவலாதி - அவதூறு பேசுவதைவிட சம்மந்தப்பட்ட குருவை நேரடியாக அணுகி அன்போடு, அக்கறையோடு அறிவுரை கூறுவதே முறையானது.

### கனிவோடு கடிந்துகொள்ளுங்கள்

குருக்கள் நம்முடையவர்கள். அவர்களுடைய வளர்ச்சியும் தளர்ச்சியும் நம்முடையதே. இறைமக்கள் சமுகத்தில் இருந்தே அவர்கள் உருவானவர்கள். இறைமக்கள் சமுகத்திலேயே அவர்கள் தொடர்ந்தும் பணிசெய்கின்றார்கள். அவர்களின் தவறுகளை நேரடியாக தனிமையில் சுட்டிக்காட்டி, கனிவோடு கடிந்துகொள்வது இறைமக்களின் கடமையாகும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

**அன்புடன், அருட்பணியாளர் நேசன்**
**மன்னா - பதிப்பாசிரியர்**



# வாசகர் எண்ணங்கள்



### மன்னாவின் தரம், அமைப்பு படு ஜோர்!

அன்பின் அருட்தந்தைக்கு,

கொழும்பு தேசிய மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்ற வந்த நாள்முதல் 'மன்னா'வை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. இப்பத்திரிகையை பாராட்டி எழுத வேண்டும் எனப் பலமுறை எண்ணினாலும் வேலைப்பளு, நேரமின்மை ஆகியன அதனை செயல்படுத்தும் சந்தர்ப்பத்தை எனக்குத் தரவில்லை.

எவ்வளவுதான் அணைகட்டி அடக்க நினைத்தாலும் அதனையும் மீறி வழிந்தோடும் தண்ணீரைப் போன்று பாராட்டுதலைக் கட்டுப்படுத்த முடியாமல் என் வேலைகள் அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு இதனை எழுதுகிறேன்.

மன்னா பத்திரிகையின் தரம் மற்றும் அமைப்பு படு ஜோர்! ஆக்கங்கள், அட்டை, பலதரப்பட்ட விடய உள்ளடக்கம் அனைத்துக்குமே ஒரு சபாஷ். இளமைத் துடிப்போடும், முதிர்ந்த அறிவோடும் பத்திரிகையை கச்சிதமாக, கவர்ச்சியாக, சுவையாக வடிவமைக்கும் பதிப்பாசிரியரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆக்கங்கள் தந்து பத்திரிகையின் தரத்தை உயர்த்தும் எழுத்தாளர்களையும் மறக்க முடியவில்லை. அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

மன்னாருக்கு வரமுடியவில்லையே என்ற ஆதங்கம் மறைய அங்கு நடைபெறும் மறைமாவட்டச் செய்திகளை அறியத் தருவதற்கும் நன்றிகள் பல. உங்கள் பணி வளர எனது செபங்களும் வாழ்த்துக்களும்.

மறையாசிரியர் கௌரவப் பட்ட பரீட்சைக்கு உதவும் நூல்களின் வரிசையில் 'மன்னா' பத்திரிகையையும் இணைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*அருட்சகோதரி ரஞ்சி. (தமிழ் பிரிவு பொறுப்பாளர்)*
*தேசிய மறைக்கல்வி நிலையம். கொழும்பு - 8*

### அறிவை மாதந்தோறும் தருகின்றாய்!

அன்பின் மன்னாவே, நீரூற்றுப்போல, அறிவை மாதம் தோறும் நீ தருகின்றாய். வாசகர் நெஞ்சங்களாகிய நாம் பெற்றுள்ளோம் உன் சேதியை. அகில மாந்தர் மக்களின் சிறந்த சேதித் தாயாய் சீரும் சிறப்புமாய் நீ இடம் பிடித்துள்ளாய்! சிறப்பான மன்னாவே நீ வாழ்க! தித்திக்கும் உள்ளங்களில் ஊடுருவி தீராத போதை என்பதை நீக்கி, சூடான தகவல்களைத் தருவதற்குள் குளிரான வாசகர் உள்ளங்கள் உனக்கே.

*ஏ. தர்ஷிக்கா, மணற்குளம், உயிலங்குளம்.*

### புயலாய்ப் பரவிவரும் மன்னா

மன்னார் மண்ணில் மணம் வீசும் மாமலராய் - புயலாய் பரவி வரும் மன்னா என்னும் மலரே, நீ மாந்தர்களை தேடிவந்து மகிழ்விக்கின்றாய்.

முதல் பக்கம் படங்களைப் போட்டு அசத்தி விடுகின்றாய். வாசகர் எண்ணங்களைக் கேட்டு வெட்கப்படுகின்றாய். கருத்துக் களங்களைத் தந்து சிந்திக்க வைக்கின்றாய். சிறுவர்களை மகிழ்விக்கின்றாய். குட்டிக் கதைகளில் சிரிக்க வைக்கிறாய். வரப்போகும் நிகழ்வுகளை அறியவைக்கிறாய்.

சிறுகதையில் மனதை சிதறடிக்கின்றாய். கவிதைக் களத்தில் கண்ணீர் வர வைக்கிறாய். கைக்கூ கவிதையில் மனதை தொலைக்க விடுகிறாய்.

நூல் வெளியிடுபவர்களை அறிமுகப்படுத்துகிறாய். கதையும் கருத்தும் களமும் சொல்லி மனதை சுறண்ட வைக்கிறாய். புதிய விளம்பரப் பலகையை தந்து வாழ்க்கையை சிந்திக்க வைக்கிறாய். வித்தான காவியத்தில் மனதை முளைக்க வைக்கிறாய். இளைஞரை சீர்வழிக்குக் கொண்டுசெல்கிறாய். மாணவரை நெறிப்படுத்துகிறாய். அன்பின் கங்கையைப் பற்றி சொல்லி ஆட வைக்கிறாய். உங்களுக்கு தெரியுமா? என்று சொல்லி பிரமிக்க வைக்கிறாய். குடும்பக் குவலயத்தில் கூத்தாட வைக்கிறாய். மருத்துவம் தந்து நோயைக் குணப்படுத்துகிறாய், சமைத்துப் பார்த்து ருசிக்க வைக்கிறாய்.

கிழட்டுப் பதில்களை சொல்கிறாய். நீங்காத நினைவுகளில் சோகத்தை மீண்டும் வரவைக்கிறாய். குறுக்கெழுத்தில் விவிலியத்தில் வலைவீச வைக்கிறாய். பாராட்டுக்களை சமர்ப்பித்து உன் வீட்டுப் பொருட்களை வாங்க கடைசிப் பக்கம் அழைத்து முற்றுப்பெற வைக்கிறாய். இந்த மன்னா என்னும் மாண்பை நெறிப்படுத்தும் அன்புக்குரிய அருட்பணியாளர் நேசன் அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள்.

*ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

### மனம் மகிழ வருகின்றாய்

மன்னார் மறைமாவட்டத்தில் ஒரு மாதத்தில் ஒரு தடவை மனம் மகிழவரும் மன்னாவே, உலகில் நடப்பவைகளை உடனுக்குடன் தாங்கி வந்து மனம் மகிழ வைப்பாயே.

சிலர்தான் உன்னை வாசித்து மனம் மகிழ்ந்து வருகிறார்கள். எனவே அந்த ஒரு சிலருக்காகவாவது மன்னாவை உருவாக்கி வரும் எழுத்தாளர்களே உங்களை வாழ்த்துகின்றேன். பரிசுத்த ஆவி வழிநடத்த வேண்டுகிறேன்.

*மரிசால் லின்ரா,*
*பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.*

## கருத்துக் களம்.... கருத்துக் களம்.... கருத்துக் களம்....

# நமது காணிக்கைகள்?

**அருட்பணியாளர் ஜெயந்தன் அ.ம.தி.**

'அர்த்தமுள்ள காணிக்கை' என்ற சொல்லை முதன் முறை கேட்டபோது, அர்த்தம் புரியாமல் விழித்தேன். பின்பு அதற்கான அர்த்தத்தைக் கேட்டு அறிந்துகொண்டேன். 'காசு, இரசம், ஒஸ்ரி போன்ற வழக்கமாக காணிக்கையாக வழங்குகின்ற பண்டங்களல்லாமல் மலர், ஒளி, உப்பு, வேதாகமம் போன்ற அநேகமாக - காணிக்கைக்கென்று, பணம் கொடுத்து, கொள்வனவு செய்திருக்காத பொருட்களைக் காணிக்கையாக்கி அது குறித்துக் காட்டுகின்ற பொருளை விளக்கிக்கூறி, இறைவனின் பீடத்தில் சமர்ப்பிப்பது பொதுவாக அர்த்தமுள்ள காணிக்கை என அழைக்கப்படுகின்றது.

இது அர்த்தமுள்ள காணிக்கை என்றால், 'வழமையான காணிக்கை' அர்த்தம் இல்லாத காணிக்கையா? என்ற வினா எழுகிறது. ஆனால் அந்த விளக்கத்தின் அடிப்படையில் அல்லாமல் சாதாரண நடைமுறையில் இவ்வாறான ஒரு வழிபாட்டு செயலுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஒரு 'பெயர்'தான் இந்த அர்த்தமுள்ள காணிக்கை.

பொருத்தமான எப்பொருளாயினும், சுத்த கருத்தோடு ஆண்டவரின் திருச்சந்நிதியில் படைக்கப்பட்டால், அந்தக் காணிக்கை அர்த்தமுள்ள காணிக்கையே. எதுவும் பொருளின் தன்மையில் அல்லாது வழங்குகின்ற திருக்கூட்டத்தின் மனநிலையில்தான் தங்கி உள்ளது. ஒரே காணிக்கைப் பண்டம் ஒரே வழிபாட்டில் ஒன்றுக்கொன்று முரணான அர்த்தங்களைத் தரக்கூடும்.

ஜெருசலேம் தேவாலயத்தில் உண்டியலிலே பலரும் காணிக்கைப் பணத்தைத் திணித்தனர். ஆனாலும், விதவைப் பெண்ணின் ஓரிரு செப்புக் காசுகள்தாம் ஆண்டவர் இயேசுவின் கவனத்தைக் கவர்ந்தன. தம் உழைப்பின் பயனை வழங்கிய முதற் சகோதரர்களின் காணிக்கைப் பொருட்களில் ஆண்டவருக்குகந்ததாக இருந்தது காய்மகாரக் காயினின் காணிக்கையல்ல.

என்ன வழங்கப்பட்டது என்பது முக்கியமல்ல. ஏன், எப்படி வழங்கப்பட்டது என்பதில்தான் 'அர்த்தம்' தங்கியுள்ளது.

இறைசந்நிதியில் வழங்கப்படுகின்ற அத்தனையும் சில சமயங்களில் இறைவனுக்காக வழங்கப்படுவது கிடையாது. அன்பிற்காக வழங்கப்படுவதில்லை. நன்றிக்காக வழங்கப்படுவதில்லை. சில சமயங்களில் இவை மனிதர் பார்க்க வேண்டும் என்பதற்காக வழங்கப்படுகின்றன. தற்பெருமைக்காக வழங்கப்படுகின்றன. சுயதிருப்திக்காக வழங்கப்படுகின்றன. பண்டமாற்றாக வழங்கப்படுகின்றன. போட்டிக்காக வழங்கப்படுகின்றன.

'மற்றவர்கள் பார்க்க வேண்டும்', 'மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்' என்னுடைய விஷேசத்திற்கு அவன் காணிக்கைப் பவனியில் கலந்துகொண்டான். ஆகவே அவனுடைய விஷேசத்திற்கு நான் காணிக்கை கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றேன், காணிக்கைப் பவனியின் நீளத்தில்தான் வழிபாட்டின் சிறப்பு அடங்கியிருக்கின்றது போன்ற தப்பான விளக்கப் புலத்தில் காணிக்கை செலுத்தப்படும்.

இந்த இடத்தில் இன்னுமொன்றையும் குறித்துக் காட்ட வேண்டும். கையில் காசு (அல்லது சில்லறைக் காசு) இல்லாததனால் வழிபாடுகளுக்குப் பின்னடிப்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய வழிபாட்டு விளக்கம், இறைவனைப் பற்றிக்கொண்டிருக்கின்ற கருத்து சரியானதுதானா?

இறைவன் என்னை இந்தளவிற்கேனும் ஆசீர்வதித்திருக்கின்றார் எனவே நான் என் நன்றியை ஏதோ ஒரு வழியில் வெளிப்படுத்த வேண்டும் என்று நினைப்போரின் நடுவில், 'இறைவன் என்னை ஆசீர்வதித்தால் நான் நன்றியாக நடந்து கொள்வேன்' அல்லது 'நான் ஆண்டவருக்கு நேர்த்திக்கடன் செய்தால் ஆண்டவர் என்னை ஆசீர்வதிப்பார்' என விளக்கம் கொள்வது தவறானது.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

சிரிக்க.. சிந்திக்க ....

## இறையியல் அறிவு

ஒருமுறை சிறு பையனொருவன் குருவானவரின் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றிருந்தான். குருவானவர் தமது அருளுரையில் '*ஆத்துமா*' என்ற பதத்தை அடிக்கடி உபயோகித்தார். ஆனால் சிறுவனுக்கு இது என்னவென்று விளங்கவில்லை. பிரசங்கம் நிறைவடைந்ததும் தன்னுடன் வந்த தாயாரிடம் 'ஆத்மா என்றால் என்ன அம்மா?" என்று கேட்டுவைத்தான்.



தாய்க்கும் தகுந்த விடை கூறமுடியவில்லை.

அவள் பையனிடம், "நான் கோதுமை மா, ஆட்டா மா எனப் பல மாவுகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது ஒரு புது ரகமான மாபோல் இருக்கிறது. வா நாம் போய் அந்தப் பலசரக்குக் கடையில் விசாரிக்கலாம்" என்றாள். இருவரும் கடைக்காரரிடம் விசாரித்தனர். கடைக்காரர் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டார். பின்னர் ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு "ஐயோ அம்மா நேற்றுத்தான் இருந்ததெல்லாம் விற்றுத் தீர்ந்தது. நாளைக்கு வந்துவிடும்" என்றானே பார்க்கலாம்!

எப்படியிருக்கிறது நம்மவரின் இறையியல் அறிவு!?

**புனிதர் பொன்மொழி**

விவிலியத்தைவிட சிறந்த செல்வம் இல்லை.
- புனித எரோணிமுஸ்.

**கிறிஸ்தவ நம்பிக்கையைச் சிதறடிக்கும் சர்ச்சைக்குரிய திரைப்படம்**

## 'த டாவின்சி கோட்' திரைப்படத்திற்கு உலகெங்கும் பலத்த எதிர்ப்பு!

# இலங்கையில் இத்திரைப்படம் திரையிடத் தடை!

சர்ச்சைக்குரிய 'த டாவின்சி கோட்' (The Da Vinci Code) என்ற திரைப்படம் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திரைப்படம் திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் திரையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 24ந் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். உலகம் முழுவதும் சென்றவாரம் திரையிடப்பட்ட இந்தத் திரைப்படம் இலங்கையில் திரையிடப்படவில்லை.

இலங்கையில் மொத்த சனத்தொகையில் 7.5 சதவீத மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். பல கிறிஸ்தவர்கள் இந்தப் படத்தின் கருத்தை எதிர்க்கின்றனர். இத்திரைப்படம் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையையும் உணர்வுகளையும் காயப்படுத்துகிறது என்று கத்தோலிக்க ஆயர் பேரவையின் சார்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படி என்னதான் இந்தத் திரைப்படத்தில் உள்ளது என்றுதானே நீங்களும் கேட்கின்றீர்கள்? அடுத்த மாத (யூலை) மன்னாவில் இந்தத் திரைப்படம் கிறிஸ்தவர்களால் எதிர்க்கப்படுவதற்கான விரிவான விளக்கம் இடம்பெறும். எதிர்பாருங்கள்.




### புதுப்பித்தல் நிகழ்வுகள் ஒத்திவைப்பு!

மன்னார் மறைமாவட்டத்தில் நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்த குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினருக்கான புதுப்பித்தல் நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறை மற்றும் பதட்டமான சூழ்நிலை காரணமாகவே இந்த முடிவை மேற்கொண்டதாக யூபிலி விழாக்குழுச் செயலர் விக்ரர் சோசை அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

### திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுக்கான புதிய தேசிய இயக்குனர்

திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுக்கான (Pontifical Missions Socities - P. M. S) புதிய இயக்குனராக அருட்பணியாளர் றெஜினோல்ட் சப்ரமாது அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஏப்ரல் 27ந் திகதி புதிய இயக்குனர் தனது பணிகளைப் பொறுப்பேற்றார். கடந்த 11 வருடங்களாக இதன் இயக்குனராக இருந்து அருட்பணியாளர் ரொனி மாட்டீன் அவர்கள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கொழும்பு மறைமாவட்டக் குருமுதல்வர் ஜோ அடிகள் மாரடைப்பால் காலமானார்!



கொழும்பு மறைமாவட்டக் குருமுதல்வர் ஜோ விக்கிரமசிங்க அடிகளார் கடந்த மே மாதம் 7ந் திகதி மாரடைப்பால் காலமானார். இவரது இறுதிக் கிரிகைகள் பமுனுகம புனித ஜோசப் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆயர்கள் குருக்கள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் மறைந்த அருட்தந்தைக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார். இவர் 'ஞானார்த்த பிரதீபாய' என்ற சிங்களக் கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியராகவும் (1968 - 1974), கொழும்பு பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் கல்லூரியில் 16 வருடங்கள் அதிபராகவும் (1978 -1994) பின்னர் இறக்கும்போது கடந்த 10 வருடங்களாக (1996 - 2006) கொழும்பு மறைமாவட்டக் குருமுதல்வராகவும், ஆயரின் சிறப்புப்பணி முதல்வராகவும் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர்களின் நண்பராகவும், மனிதாபிமானம் நிறைந்தவராகவும் அடிகளார் விளங்கினார் என இவருக்கு புகழாரம் சூட்டப்பட்டது.

### திருப்பாலத்துவ சபை சிறுவர்களுக்கான சின்னம் வழங்கும் நிகழ்வுகள்

மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபைச் சிறார்களுக்கான சின்னம் வழங்கும் நிகழ்வுகள் மறைக்கோட்ட மட்டங்களில் நடைபெற்றன. கடந்த மார்ச் மாதம் 4ந் திகதி மடு மறைக்கோட்டத்தில் 402 உறுப்பினர்களும், 11ந் திகதி முருங்கன் மறைக்கோட்டத்தில் 605 உறுப்பினர்களும், 14ந் திகதி மன்னார் மறைக்கோட்டத்தில் 550 உறுப்பினர்களும், 18ந் திகதி வவுனியா மறைக்கோட்டத்தில் 360 உறுப்பினர்களும், திருப்பாலத்துவ சபை நிரந்தர உறுப்பினருக்கான சின்னங்களைப் பெற்றனர். சின்னம் வழங்கும் நிகழ்வுகளை திருப்பாலத்துவ சபையின் மன்னார் மறைமாவட்ட இயக்குனர் ச. வி. அவிதப்பர் தலைமையில் மறைக்கோட்டப் பொறுப்பாளர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தனர்.









### புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட முருங்கன் பங்கு மேய்ப்புப்பணிச் சபை உறுப்பினர்கள்



**நம்மட பங்குக்கு எந்தப் பாதர் வாறாராம் .... ?**

## மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான பணி மாற்றங்கள்

*கீழே உள்ள பணி மாற்றங்கள் ஜூன் மாதம் 15ம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் மூன்றாவது வாரத்தில் இருந்து நடைமுறைக்கு வரும். புதிய பணித்தளங்களை பொறுப்பேற்கவுள்ள அருட்பணியாளர்களை மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது. - பதிப்பாசிரியர்*

| | |
|---|---|
| 1. அருட்பணியாளர் ஜே.பி. தேவராஜா | - ஓய்வு பெற்ற குரு; வவுனியா மாவட்டத் துறவிகளுக்கான ஆன்மீக வழிகாட்டி. |
| 2. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ் | - இணை மேய்ப்பர் - சிலாவத்துறை / அரிப்புப் பங்கு; மன்னார் மாவட்டத் துறவிகளுக்கான ஆன்மீக வழிகாட்டி. வதிவிடம் - சிலாவத்துறை. |
| 3. அருட்பணியாளர் எஸ். கிறிஸ்ரியன் வாஸ் | - பங்குத்தந்தை - பள்ளிமுனைப் பங்கு. |
| 4. அருட்பணியாளர் பி. யேசுராஜா - | - இயக்குனர் - ஆரம்பக் குருத்துவக் கல்லூரி; இறை அழைத்தல் ஊக்குனர். |
| 5. அருட்பணி. பி. அருள்நாதன் (அமதி) | - பங்குத்தந்தை - தேவன்பிட்டி பங்கு. |
| 6. அருட்பணி. டி. வின்சன் பற்றிக் (அமதி) | - செயலகத் தலைமைச் செயலர் (Chancellor); இயக்குனர் - மது மற்றும் போதை ஒழிப்பு மையம்; இயக்குனர் - பல் சமய உரையாடல் ஆணைக்குழு. (மேய்ப்புப்பணி சார்ந்த உதவிப் பங்குத்தளம் - தோட்டவெளி.) |
| 7. அருட்பணி. எஸ். எமிலியானுஸ்பிள்ளை | - பரிபாலகர் - மடுத்திருத்தலம், முதல்வர் - மடு மறைக்கோட்டம். |
| 8. அருட்பணி. ஏ. இராயப்பு - | - பங்குத்தந்தை - தோட்டவெளிப் பங்கு, - பரிபாலகர் - வேதசாட்சிகள் இராக்கினி திருத்தல ஆன்மீக மையம், தோட்டவெளி. |
| 9. அருட்பணி. ஏ. செபமாலை - | - பங்குத்தந்தை - வவுனியாப் பங்கு, முதல்வர் - வவுனியா மறைக்கோட்டம். |
| 10. அருட்பணி. எஸ். வி. அவிதப்பர் - | - பங்குத்தந்தை - தலைமன்னார் பங்கு, இயக்குனர் - திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள். |
| 11. அருட்பணி. எஸ். கே. தேவராஜா | - பங்குத்தந்தை - மறைமாவட்டப் பேராலயம், முதல்வர் - மன்னார் மறைக்கோட்டம். |
| 12. அருட்பணி. எல். செபஸ்ரியான் குரூஸ் (தி.ச) | - பங்குத்தந்தை - பண்டிவிரிச்சான் பங்கு |
| 13. அருட்பணி. எஸ். ஜே. பெப்பி சோசை | - இயக்குனர் - வாழ்வுதயம், (மேய்ப்புப்பணி சார்ந்த உதவிப் பங்குத்தளம் - உயிலங்குளம்) |
| 14. அருட்பணி. எஸ். ஸ்ரீபன் ராஜா - | - பங்குத்தந்தை - முருங்கன் பங்கு |
| 15. அருட்பணி. ஏ. விக்ரர் சோசை - | - குருமுதல்வர். |
| 16. அருட்பணி. செலஸ்ரின் ம. (அமதி) | - பங்குத்தந்தை - செட்டிகுளம். |
| 17. அருட்பணி. ஏ. ஞானப்பிரகாசம் - | - பங்குத்தந்தை - வங்காலை, இயக்குனர் - இளைஞர் ஆணைக்குழு. |
| 18. அருட்பணி. சி. அந்தோனிதாஸ் டலிமா | - இயக்குனர் - பொதுநிலையினர் மற்றும் குடும்பப்பணி ஆணைக்குழு, இயக்குனர் - சமூகத் தொடர்புகள் மற்றும் கலாச்சார ஆணைக்குழு. |
| 19. அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம் - | - நிதியாளர், இயக்குனர் - வழிபாட்டு ஆணைக்குழு. |
| 20. அருட்பணி. டி. அலெக்சாண்டர் சில்வா | - விரிவுரையாளர் - புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| 21. அருட்பணி. எம். ஜெயபாலன் - | - உயர்கல்வி - கென்ற், இலண்டன். (2006 - 2008) |
| 22. அருட்பணி. எஸ். மாக்கஸ் - | - இரத்தினபுரி மறைமாவட்டத்தில் பணி (ஒரு வருடம்) |
| 23. அருட்பணி. என். பாக்கிய ரஞ்சித் | - இயக்குனர் - இயேசு சபை அகதிப்பணிகள், மேய்ப்புப்பணி சார்ந்த உதவிப் பங்குத்தளம் - கற்கிடந்தகுளம். |
| 24. அருட்பணி. எஸ். மரியதாசன் லியோன் | - பங்குத்தந்தை - வஞ்சியன் குளம் பங்கு |
| 25. அருட்பணி. ஆர். அகஸ்ரின் புஸ்பராஜ் | - பங்குத்தந்தை - பேசாலைப் பங்கு |
| 26. அருட்பணி. ஜீ. அருட்பிரகாசம் - | - உயர்கல்வி - பெரதெனிய, கண்டி (2006 - 2008) |
| 27. அருட்பணி. எஸ். ஜெயபாலன் - | - பங்குத்தந்தை - சிலாபத்துறை /அரிப்புப் பங்கு |
| 28. அருட்பணி. எஸ். அன்ரன் - | - பங்குத்தந்தை - பம்பைமடுப் பங்கு |
| 29. அருட்பணி. எம்.ஏ. ஜெயசீலன் - | - பங்குத்தந்தை - நானாட்டான் பங்கு |
| 30. அருட்பணி. எஸ். சத்தியராஜ் - | - பங்குத்தந்தை - விடத்தல்தீவு பங்கு |
| 31. அருட்பணி. பிரான்சிஸ் மெரி டி கோல் | - பங்குத் தந்தை - கீளியன் குடியிருப்புப் பங்கு |
| 32. அருட்பணி. எஸ். சுரேந்திரன் ரெவல் | - ஆயரின் செயலர் |
| 33. அருட்பணி. எவ். யூட்ஞானராஜ் குரூஸ் | - உதவிப் பங்குத்தந்தை - வவுனியாப் பங்கு |
| 34. அருட்பணி. எஸ். சவுல்நாதன் - | - உதவிப் பங்குத்தந்தை - பேசாலைப் பங்கு |
| 35. அருட்பணி. இ. செபமாலை - | - உதவிப் பங்குத்தந்தை - மறைமாவட்டப் பேராலயம். |
| 36. அருட்பணி. இ. டெனி கலிஸ்ரஸ் | - உதவிப் பங்குத்தந்தை - மறைமாவட்டப் பேராலயம். |
| 37. அருட்ணி. எஸ். லக்கோன்ஸ் பிகிறாடோ | - பதுளை மறைமாவட்டத்தில் பணி (ஒரு வருடம்) |
| 38. அருட்பணி. ஜீ. அ. அருள்ராஜ் குரூஸ் | - உதவிப்பங்குத் தந்தை - பம்பைமடுப் பங்கு |
| 39. அருட்பணி. எஸ்.டக்லஸ் மில்ரன் லோகு | - உதவிப்பங்குத் தந்தை - வங்காலைப் பங்கு உதவி இயக்குனர் - இளைஞர் ஆணைக்குழு. |
| 40. அருட்பணி. ஏ. ஆரோக்கியம் - | - உதவிப் பரிபாலகர் - மடுத்திருத்தலம் |
| 41. அருட்பணி. பி. கிறிஸ்து நேசன் - | - இயக்குனர் - மறைத்தூதுப் பணிகள். (ஏற்கனவே உள்ள பணிகளோடு சேர்த்து. - அதாவது இயக்குனர் - மறைக்கல்வி, கல்வி மற்றும் விவிலிய ஆணைக்குழு, பதிப்பாசிரியர் - மன்னா பத்திரிகை) |
| 42. அருட்பணியாளர்கள் சி. அ. டலிமா, ஏ. யூட் குரூஸ், பி. கிறிஸ்து நேசன். | - (தோட்டவெளியில் உள்ள வேதசாட்சிகள் இராக்கினி ஆன்மீக மைய பரிபாலகருக்கு உதவிசெய்யும் குழு) |

## தேசிய சமூகத் தொடர்பு தினம் - ஜுன் 4ம் திகதி

# மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குனர்

## அந்தோனிதாஸ் டலிமா அடிகளாரின் செய்தி

உருளும் உலகை ஊடுருவிச் செல்லும் ஊடகக் கலாச்சாரம் இன்றைய உலகை இயக்கும் ஒரு நெம்புகோலாக மாறிவருவதை நாம் இன்று வெளிப்படையாகவே காண்கின்றோம்.

மாற்றங்களும், அதனைத் தொடர்ந்து வரும் ஏற்றங்களும் மனித வாழ்வின் இயக்கங்களாக மாறிவிட்டன. மனித வாழ்வின் மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும், அவலங்களும், அழுகுரல்களும், வளர்ச்சியும், தளர்ச்சியும் உலகத்திற்கு பல்வேறு வகையிலே பிரசன்னப்படுத்தப்படுகின்றன. இந்தச் செயலாக்கத்திற்கு ஊடகங்களே முக்கியமான காரணமென்பது உலகறிந்த உண்மை. எனவேதான் ஊடகங்களும், அவை ஒன்று சேர்ந்து உருவாக்கும் கலாச்சாரமும் சாரமேற்றப்பட்ட உப்பாகவும், இருள் நீக்கும் ஒளியாகவும் அமைய வேண்டுமென்பது அனைவரினதும் ஏக்கமாகவும் எதிர்பார்ப்பாகவும் அமைகின்றது. ஊடகங்கள் உருவாக்கும் கலாச்சாரம் மனித வாழ்வை நெறிப்படுத்தி, அவ்வாழ்விற்கு வளமையையும், செழுமையையும் கொடுக்க வேண்டும். குறிப்பாக வன்முறையும், தீய செயல்களும், உணர்வுகளை உசுப்பிவிட்டு அதன் வழியாக ஊதியம் தேடிக்கொள்ள முனையும் மனப்போக்குகளும், பாவ வாழ்வே வலிந்து நியாயப்படுத்தப்பட்டு பரிசுத்தம் என்று கருதப்படும் நிலைகளும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் நிலையில் ஊடகங்கள் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்பது அனைவரினதும் ஏகோபித்த குரலாக அமைகின்றது.



இவை எல்லாவற்றையும் உற்றுநோக்கிய நமது திருச்சபை "ஊடகங்கள் சமாதானக் கலாச்சாரத்திற்கே" என்னும் அழைப்பை நம்முன்னே முன்னிலைப்படுத்தி அதனை ஆழமாகச் சிந்திக்கவும், செயற்படுத்தவும் நம் ஒவ்வொருவரையும் தூண்டுகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் கலைப்பணியையும், ஊடகப் பணியையும் முன்னெடுத்துச் செல்லும் பணிக்குழு "திருக்கலையருவி" என்னும் பெயரோடு இயங்கி வருகின்றது.

"உண்மையை எடுத்துரைப்பதே என்பணி. இதற்காகவே நான் பிறந்தேன்"(யோவா 18:37) என்ற இயேசுவின் இலட்சியக் கொள்கையை இன்றைய கத்தோலிக்க ஊடகங்கள் முக்கியமாகக் கொண்டிருக்க வேண்டும்.

கத்தோலிக்க ஊடகங்கள் அனைத்தும் உண்மைக்காகவும், நீதிக்காகவும், ஏப்புரவுக்காகவும், மனித மாண்பையும், மனித நேயத்தையும் உருவாக்கும் பணிக்காகவும் தம்மை அர்ப்பணித்து அமைதிக் கலாச்சாரத்தை உருவாக்கும் பொறுப்பில் சிறப்பாகச் செயற்படுவதே நமது பணியைத் தனித்துவமுள்ளதாக்கி, கிறிஸ்துவின் நற்செய்தியை உலகறியச் செய்வதாக அமையும்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## இறை இரக்கப் பக்தி

# விசுவாசத்தின் இணையற்ற அங்கம்

### திருத்தந்தை கூறுகின்றார்



இறை இரக்கப் பக்தி கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் செபத்தின் இணையற்ற அங்கம் என்று ஏப்ரல் 23ஆம் திகதி புனித பேதுரு தேவாலயத்தில் கூடியிருந்த 50 ஆயிரம் மக்களுக்கு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். ஏப்ரல் 23ஆம் திகதி இறை இரக்க ஞாயிறு அகில உலக கத்தோலிக்கத் திருச்சபையில் நினைவுகூரப்பட்டது. 1905 – 1938 ஆகிய ஆண்டுகளில் வாழ்ந்த சகோதரி பௌவுஸ்ரீனாவால் இந்த இறை இரக்கப் பக்தி வளர்க்கப்பட்டது. 2000 ஏப்ரல் 30ஆம் திகதி சகோதரி பௌவுஸ்ரீனாவிற்கு புனிதர் பட்டம் அளித்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பாஸ்கு காலத்தின் இரண்டாம் ஞாயிறை இறை இரக்க ஞாயிறாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவித்தார். 2002ஆம் ஆண்டு கார்கோவில் இறை இரக்க ஆலயத்தைத் திறந்து வைத்தார் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்.

"விசுவாசம் இறை இரக்கம் எந்த கிறிஸ்தவ பக்தி முயற்சிக்கும் இரண்டாம் தரமானதல்ல. மாறாக இறை இரக்கப் பக்தி கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் செபத்தின் இணையற்ற அங்கமாகும்" என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். "இறை இரக்கத்தைவிட மனிதனுக்கு நம்பிக்கையூட்டக்கூடியது வேறு ஒன்றுமில்லை" என்றும் திருத்தந்தை கூறினார்.

## திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரின் சுற்று மடல்

# உலகெங்கிலும் புகழப்படுகிறது!



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரின் முதல் சுற்று மடலான "அன்பே கடவுள்" உலகெங்கிலும் அன்பை மையப்படுத்திய அன்பு மடலாக வரவேற்கப் படுகிறது. இது உலகின் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆங்கிலத்திற்கு அடுத்த படியாக தமிழ் மொழியில் தமிழக ஆயர் பேரவையின் 'நம் வாழ்வு வெளியீடு' மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. இத்தாலிய மொழியிலான சுற்று மடலின் தொடக்க உரையில் கர்தினால் ஆஞ்சலோ ஸ்கோலா "இந்தச் சுற்று மடலுக்கு முன் வத்திக்கான் ஆசிரியம் வெளிப்படையாகவும், முழுமையாகவும் அன்பை மையப்படுத்தி எதையும் வெளியிடவில்லை" என்று கூறியுள்ளார். முதல் முறையாக அன்பு பற்றிய கேள்விக்கு நேரடியாகவும், வெளிப்படையாகவும் சுற்று மடலில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் கூறுகையில, "இச்சுற்றுமடல் எளிமையானவர்களுக்கு எளிமையான முறையில் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுமடல் அன்பு பற்றிய முழு அறிவுக்கு இட்டுச் செல்கிறது" என்றும் கூறியுள்ளார். இச்சுற்றுமடல் ஒவ்வொரு விசுவாசியையும் சென்றடைய வேண்டும் என்பது திருத்தந்தையின் விருப்பமாகும்.

# பங்குத்தள சங்கதிகள்

## முருங்கனில்

### மேய்ப்புப்பணிச் சபை அங்குரார்ப்பணம்

முருங்கன் பங்கின். மேய்ப்புபணிச்சபை 19.. 03.2006 அன்று சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயத்தில் மன்னார் மறை மாவட்டக் குடும்பப் பணியக இயக்குனர் அருட்பணி விக்டர் சோசை அடிகளாரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. செ. அன்ரன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முருங்கன் பங்கைச் சார்ந்த 10 ஆலயங்களைச் சேர்ந்த இறைமக்கள் கலந்துகொண்டனர். மேய்ப்புப்பணிச் சபையினரின் கடமைகள் இறைபணிகள் பற்றி அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரால் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

*தகவல் : செயலாளர் ஏ. டி. தேவதாசன் அல்மேடா*

## முருங்கனில்

### ஊனமுற்றோர் விடுதிக்கான அடிக்கல்

ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான விடுதி ஒன்று முருங்கன் பகுதியில் மன்னார் - மதவாச்சி பிரதான வீதிக்கு அருகாமையில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 25-04-2006 அன்று நடைபெற்றது. அவுஸ்ரேலியா உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறுவப்படவிருக்கும் இவ்விடுதிக்கான அடிக்கல்லினை நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு. விஸ்வலிங்கம் மற்றும் குடும்பப் பணியக இயக்குனர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் நட்டு வைத்தனர். முருங்கன் மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் அமையவிருக்கும் இவ்விடுதி மூலமாக இப்பகுதிகளிலுள்ள ஏராளமான ஊனமுற்ற - மனவளர்ச்சி குன்றிய வறிய பிள்ளைகள் பயனடைவரென எதிர்பார்க்கப்படுகின்றது.

*தகவல் :ஏ. டி. தேவதாசன் அல்மேடா*



### மன்னார் பேராலயப் பங்கில் அன்னையர் தினம்

கடந்த 21.05.2006 ஞாயிறு அன்று மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அமதி) அடிகளாரும், பேராலயப் பங்குத் தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரும் இணைந்து சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். *அன்னைக்கு அழகு அன்புதான்* என்று அன்னையர்களைப் பிள்ளைகள் கௌரவித்து பரிசுப்பொருட்களை வழங்கினார்கள். வீடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுகளையும் அன்னையர்கள் பகிர்ந்து உண்டு அன்றைய நாளை மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

தகவல் : செல்வி. புவனேஸ்வரி, மன்னார்.

### செட்டிகுளத்தில் கல்வி நிலையத் திறப்பு விழா

செட்டிகுளப்பங்கில் கடந்த 01.02.2006 அன்று புனித அசிசி கல்வி நிலையத் திறப்பு விழா இடம்பெற்றது. மாணவர்கள் ஆசிரியர்கள் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவரும் அருட்சகோதரர்களின் பணிமனையில் ஒன்றுகூடினர். பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளாரின் இறைவணக்க ஆசியுடன் அருட்சகோதரர் நியூட்டன் நாடாவை வெட்டி கல்விக்கூடத்தை திறந்து வைத்தார். பங்குத் தந்தை, செட்டிகுளம் மகாவித்தியாலய அதிபர் எஸ். யேசுதாசன், அருட்சகோதரர் நியூட்டன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அருட்சகோதரர் மில்றோய் அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

## மன்னார் மறைமாவட்ட குருக்கள் பேரவை உறுப்பினர்கள்

## Members of the Presbyteral Council (2006 – 2011)

### பணி நிலை உறுப்பினர்கள் ( Ex Officio)

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை - குருமுதல்வர்
2. அருட்பணியாளர் பி. கிறிஸ்துநாயகம் - நிதியாளர்
3. அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா கொடுதோர் - மன்னார் மறைக்கோட்ட முதல்வர்
4. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை - மடு மறைக்கோட்ட முதல்வர்
5. அருட்பணியாளர் ஏ. செபமாலை - வவுனியா மறைக்கோட்ட முதல்வர்
6. அருட்பணியாளர் பி. எவ். டெஸ்மன் குலாஸ் - முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்

### தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் (Elected)

7. அருட்பணியாளர் எஸ். வி. அவிதப்பர்
8. அருட்பணியாளர் எஸ். ஜெயபாலன் குரூஸ்
9. அருட்பணியாளர் ஏ. ஞானப்பிரகாசம்
10. அருட்பணியாளர் எல். ஞானாதிக்கம்
11. அருட்பணியாளர் ஆர். அகஸ்ரின்
12. அருட்பணியாளர் எஸ். அன்ரன்
13. அருட்பணியாளர் எஸ். ஸ்ரீபன் ராஜா
14. அருட்பணியாளர் பி. கிறிஸ்து நேசன்
15. அருட்பணியாளர் பி. ஜேசுராஜா

### நியமன உறுப்பினர்கள் (Noninated)

16. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ்
17. அருட்பணியாளர் டீ. வின்சன் பற்றிக் (அமதி)
18. அருட்பணியாளர் டிக்சன் (ச.ச)
19. அருட்பணியாளர் எஸ். மரியதாஸ்
20. அருட்பணியாளர் எஸ். ஜே. பெப்பி சோசை
21. அருட்பணியாளர் சி. அந்தோனிதாஸ் டலிமா
22. அருட்பணியாளர் ஏ. யூட் குரூஸ்

## ஆயரின் ஆலோசகர் குழாம்

## College of Consultors (2006 - 2011)

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை
2. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ்
3. அருட்பணியாளர் பி. ஜேசுராஜா
4. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
5. அருட்பணியாளர் டி. வின்சன் பற்றிக்
6. அருட்பணியாளர் எஸ். வி. அவிதப்பர்
7. அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா
8. அருட்பணியாளர் பி. எவ். டெஸ்மன் குலாஸ்

## இளைப்பாறிய குருக்களுக்கான நிதிக்குழு உறுப்பினர்கள்

## (Committee Members of the Diocesan Priests' Retirement Fund)

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை
2. அருட்பணியாளர் பி. கிறிஸ்து நாயகம்
3. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
4. அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா
5. அருட்பணியாளர் எஸ். வி. அவிதப்பர்

## மடுத்திருப்பதியின் ஆன்மீக மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்குழு உறுப்பினர்கள்

## (Committee for the Spiritual and Infrastructural improvement of the Madhu Shrine)

1. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
2. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ்
3. அருட்பணியாளர் பி. யேசுராஜா
4. அருட்பணியாளர் எஸ். வி. அவிதப்பர்
5. அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா
6. அருட்பணியாளர் எஸ். ஜே. பெப்பி சோசை
7. அருட்பணியாளர் எஸ். ஸ்ரீபன் ராஜா
8. அருட்பணியாளர் ஏ. ஞானப்பிரகாசம்

## குருத்துவ மாணவர்களின் உருவாக்கத்திற்கான குழு உறுப்பினர்கள்

## Committee for the formation of Seminarians

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை - குரு முதல்வர்
2. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ்
3. அருட்பணியாளர் பி. ஜேசுராஜா
4. அருட்பணியாளர் ஆர். அகஸ்ரின் புஸ்பராஜா

## வேறு குழுக்கள்

### குருக்களின் ஆக்க நலன் சார்ந்த குழு

### (Priests' Welfare Board)

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை
2. அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ்
3. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
4. அருட்பணியாளர் ஏ. செபமாலை
5. அருட்பணியாளர் எஸ், கே. தேவராஜா
6. அருட்பணியார் பி. எவ். டெஸ்மன் குலாஸ்

### நிதிக்குழு (Finance Commitee)

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை
2. அருட்பணியாளர் பி. கிறிஸ்து நாயகம்
3. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
4. அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா

### நிதி தற்சார்புடைமை மற்றும் கட்டுமானப் பணிக் குழு

### Committee for Financial self Reliance and Construction Work

1. அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை
2. அருட்பணியாளர் பி. கிறிஸ்து நாயகம்
3. அருட்பணியாளர் எஸ். எமிலியானுஸ்பிள்ளை
4. அருட்பணியாளர் பி. ஜேசுராஜா

வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை...

# யார் இந்தத் துணையாளர்?

**இம்மாதம் (ஜூன்) 4ந் திகதி தூய ஆவியின் பெருவிழா. இதை ஒட்டி இச்சிறப்புக் கட்டுரை இடம்பெறுகிறது**

## சொல்லும் பொருளும்

'பராக்கிளேத்தோஸ்' என்னும் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் ஐந்து முறைதான் வருகிறது. இது யோவானுடைய எழுத்துக்களில் மட்டும் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1யோவான் 2:1இல் இச்சொல், மானுடத்தின் பாவங்களுக்குக் கழுவாயாக மாறி, இறைத் தந்தையிடம் பரிந்து பேசுபவராக இயேசுவைக் குறிக்கிறது. மற்ற நான்கு முறையும் யோவான் நற்செய்தியில் உள்ள பிரியாவிடைப் பொழிவில் இடம் பெறுகின்றன. (4:16, 26, 15:26, 16:7). *துணைபுரிய அழைக்கப்பெற்றவர், வாதாடுபவர், வழங்குபவர், சட்ட ஆலோசகா* என்றெல்லாம் இச்சொல் பொருள்படும். 'பராக்கிளேத்தோஸ்' என்னும் கிரேக்கச் சொல் குறிக்கும் அனைத்துப் பணிகளையும் துணையாளர் என்னும் தமிழ்ச்சொல் குறிப்பதில்லை என்றாலும், இதுவே அதற்குச் சிறந்த இணையாகத் தோன்றுகிறது.

## துணையாளரின் பணிகள்

பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவைபற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை எனத் துணையாளர் எடுத்துக்காட்டுவார். இவ்வாறு உலகினரின் குற்றத்தை மெய்ப்பிக்கும் வழக்குரைஞர் போல இவர் செயல்படுவார்.

துயரத்தில் மூழ்கியிருக்கும் சீடர்களுக்கு ஆறுதல் அளிப்பார் (16:6-7). உண்மையை வெளிப்படுத்தி இயேசுவைப் பற்றிச் சான்று பகரச் சீடர்களுக்கு ஊக்கமூட்டுவார் (15:26-27). சீடர்களோடு என்றும் இருக்குமாறு அனுப்பப்படும் இவர் (14:16), இயேசுவுக்குப் பதிலாக அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். அவர்களுக்கு அனைத்தையும் கற்றுக்கொடுப்பார். இயேசு கூறிய அனைத்தையும் அவர்களுக்கு நினைவூட்டுவார்(14:26). உண்மையை வெளிப்படுத்துவதோடு (14:17, 15:26) முழு உண்மையை நோக்கிச் சீடர்களை வழிநடத்துவார். வரப்போகிறவற்றை அவர்களுக்கு அறிவுறுத்துவதன் வழியாக இயேசுவை மாட்சிப்படுத்துவார் (16:13). இவ்வாறு பல வகையிலும் அவர்களுக்குத் துணைபுரியும் காரணத்தால், துணையாளர் என்னும் பெயர் அவருக்கு முற்றிலும் பொருந்தும்.

## துணையாளரும் இயேசுவும்:

இறைத் தந்தையின் தொடர்ச்சியாக இறை மைந்தன் இயேசு செயல்படுகிறார். இயேசுவின் தொடர்ச்சியாக அவருடைய உடல் பிரசன்னத்தைத் தொடரும் முறையில் துணையாளர் செயல்படுகிறார். இதனால் சீடர்களை அனாதைகளாய், திக்கற்றவர்களாய் விட்டுவிடாது பார்த்துக்கொள்கிறார். இவ்வாறு இயேசுவின் இறப்புக்குப் பிறகு அவருடைய பிரதிநிதியாய் விளங்குகிறார் (14:16).

கற்பிக்கும் பணியில் இயேசுவின் வழித்தோன்றலாய்ச் செயல்படுவதோடு (14:26), அவர் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தவற்றைச் சீடர்களுக்கு நினைவூட்டுகிறார் (16:12-14). இயேசுவுக்குச் சான்று பகர்கிறார் (15:26, காண் மத் 10:19-20, மாற் 13:11-12). உலகுக்குத் தீர்ப்பு வழங்குகிறார் (16:7-11). இவ்வாறு இயேசுவுக்கும் துணையாளருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

இயேசுவே சீடர்களுக்குத் துணையாளராய் விளங்குகிறார். துணையாளர் ஆற்றும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுகிறார். இயேசு தம் சீடர்களோடு இல்லாத நேரத்தில் துணையாளர் அவருடைய பணியைத் தொடர்ந்து ஆற்றுகிறார். இதனாலன்றோ மற்றொரு துணையாளரை அனுப்புவதாக இயேசு வாக்குறுதி அளிக்கிறார் (14:16). அதேநேரத்தில் இயேசுவே தந்தையிடமிருந்து துணையாளரை அனுப்புவார் என்றும் கூறப்பட்டுள்ளது (15:26, 16:7).

## துணையாளரும் தூய ஆவியாரும்

துணையாளருக்கும் தூய ஆவியாருக்கும் இடையே மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது. துணையாளரே உண்மையை வெளிப்படுத்துவார் (14:17, 15:26, 16:13). இவரே தூய ஆவியார். "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" (15:26). இருவருமே உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கின்றனர் (15:26). சீடர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றனர் (14:26), சீடர்கள் சார்பாக நின்று, அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகின்றனர் (16:8-11). இவ்வாறு துணையாளரும் தூய ஆவியாரும் ஏறக்குறைய ஒரே வகையான பணிகளைச் செய்வதாக யோவான் குறிப்பிடுகிறார்.

## யார் இந்தத் துணையாளர்?

யோவான் குறிப்பிடும் துணையாளரை இனம் கண்டுகொள்வதில் விவிலிய அறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் இன்றும் நிலவுகின்றன. வானதூதர், திரும்பிவரும் இறைவாக்கினர் எலியா, ஆளுருப்பெற்ற ஞானம் என்றெல்லாம் விளக்கப்படுவதால், துணையாளர் இன்னார் என உறுதியிட்டுக் கூறுவது மிகக் கடினம்.. இருப்பினும் யோவான் குறிப்பிடும் துணையாளர் தூய ஆவியாரே என்னும் கருத்து இன்று அறிஞரிடையே செல்வாக்குப் பெற்றுவருகிறது. "என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" (14:26). இவ்வுண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், யோவான் சமூகத்தின் சூழ்நிலைகளையும் தேவைகளையும் நாம் அறிந்திருப்பது அவசியம்.

நான்காம் நற்செய்தி எழுதப்பட்ட காலம் கி.பி. 90-100 என்பர். இதற்குள் இயேசுவை நேரடியாகப் பார்த்திருந்த திருத்தூதர்களும் சீடர்களும் இறந்துவிட்டார்கள். இதனால் இயேசுவுக்கும் கிறிஸ்துவ சமூகத்துக்கும் இடையே இருந்த உறவு துண்டிக்கப்பட்டுவிட்டது போன்ற அச்ச உணர்வு இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களை அலைக்கழித்தது. இயேசுவின் மனநிலைக்கு ஏற்ப மக்களை வழிநடத்தத் தகுந்த தலைவர்கள் இல்லையே என்று அவர்கள் அங்கலாய்த்தார்கள். இயேசு கோடிட்டுக் காட்டிய வாழ்க்கை முறைகள், உண்மைகள் ஆகியவற்றுக்கு இனி முறையான விளக்கம் கிடைக்குமா என்று ஐயுற்றார்கள்.

இந்நிலையில் யோவான் சமூகத்தினரின் அச்சத்தையும் அங்கலாய்ப்பையும் ஐயத்தையும் அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இயேசுவின் போதனைகளையும், சாதனைகளையும், திருத்தூதர்களே சரியாகப் புரிந்து கொண்டார்களில்லை. இயேசு உயிர்பெற்றெழுந்தபின் தூய ஆவியாரின் ஏவுதலால்தான் புரிந்துகொண்டார்கள் (2:22, 12:16, 14:9). அந்த ஆவியார் இன்றும் இருக்கிறார். தொடர்ந்து செயலாற்றுகிறார். எனவே கிறிஸ்தவச் சமூகத்துக்கும் வரலாற்று இயேசுவுக்கும் இடையே நிலவிய உறவு தொடர்கிறது. தூய ஆவியாம் துணையாளர் அதைத் தொடர்ந்து வழிநடத்துகிறார். நேரிய வழியில் நெறிப்படுத்துகிறார் என விளக்கப்படுகிறது.

இயேசுவின் இரண்டாவது வருகை வெகு விரைவில் நிகழும், தாங்கள் இறப்பதற்கு முன் அது நிகழும் என்று தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்தார்கள் (1தெச 1:13-15, மாற். 13:30). ஆனால் அது உடனடியாக நிகழவில்லை. இதனால் கிறிஸ்தவ நம்பிக்கை பற்றிப் பல ஐயப்பாடுகள் எழுந்தன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முறையில் துணையாளரின் பணி அமைகிறது.

இயேசுவின் இரண்டாம் வருகையின்போது நடைபெற வேண்டிய தீர்ப்பு, நிலைவாழ்வு முதலியன துணையாளரின் செயல் வழியாக நிகழத் தொடங்கிவிட்டன. அவர் வழியாக இயேசுவின் இரண்டாம் வருகை நிகழ்ந்துகொண்டிருக்கிறது. துணையாளர் வடிவில் கிறிஸ்து ஏற்கனவே கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் வந்து விட்டார் என்பதை நற்செய்தி நூல் தெளிவுபடுத்தி வலியுறுத்துகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்கு, கிறிஸ்துவின் விழுமியங்களான உண்மை, நீதி, அன்பு போன்றவற்றுக்குச் சான்று பகர வேண்டியவர்கள். இப்பணியில் துணையாளர் நமக்கு என்றும் துணையாய் இருப்பாராக! ■

(நன்றி : தோழன் 1998 ஜனவரி)

# தூய ஆவியின் கனிகள்

அந்தோனிப்பிள்ளை மேரி அன்னா,
விடத்தல்தீவு.

மனிதனுடைய வாழ்வு நிறை மகிழ்வும், பொலிவும், இறையமைதியும் பெற்றுவிளங்க தூய ஆவியானவர் எம் இதயங்களில் அருட்கொடைகளை வழங்குகிறார்.

நாம் இவ்வுலகிலே வாழ பௌதிகக் காரணிகள், பொருளாதாரம் நமக்குத் தேவைப்படுகிறது. இதேபோல் ஆவியில் நாம் செழிப்புற்று வாழவே தூய ஆவியின் கனிகள் தூய ஆவியால் வழங்கப்படுகிறது. மரம் கனிந்தால் பழம் ஆகிறது. அதுபோல் பரிசுத்த ஆவி நம்மில் உறைந்தால் அவரின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவை மலர்கின்றன. (கலா 5:22)

"நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் விளங்குவதே என் தந்தைக்கு மகிமை" (அரு.15:8) என்கிறார் இயேசு. தூய ஆவியின் கொடைகளையும், வரங்களையும் பொது நன்மைக்காகப் பயன்படுத்தும்போது நாம் நற்கனி கொடுக்கும் மரங்களாகிறோம். இக்கனிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இதில் அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் இவை மூன்றும் இறைவனோடு உள்ள உறவைப் பற்றியும், பொறுமை, பரிவு, நற்குணம் ஆகியன பிறரோடு உள்ள உறவையும், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பன எமது தனிப்பட்ட தொடர்புகளையும் குறித்து நிற்கிறது.

***அன்பு:*** இறைவனை அன்பு செய்வதும் நிறைகுறைகளோடு பிறரை ஏற்றுக்கொள்வதும், சுயநலமின்றித் தியாகம் செய்வதுமே அன்பாகும். குற்றம் ஒன்றும் செய்யாத இவருக்கு ஏன் இந்தத் தண்டனை என இரக்கப்பட்ட குற்றவாளியை யேசு ஏற்றுக்கொள்கிறார்.

***மகிழ்ச்சி:–*** இறைவன் எம்மை ஏற்றுக்கொண்டபடியினால் இது உருவாகிறது. எமாவுஸ் வழியில் சீடர்களோடு வழிப்போக்கராய் வந்தவர் யேசு என்று அறிந்தபின் சீடர்கள் அளவில்லாத மகிழ்ச்சி கொண்டனர்.

மற்றவர்களை மன்னிக்கும்போது, உதவி செய்யும்போது, நீதிக்காகக் குரல் கொடுக்கும்போது, இறையரசுக்காக உழைக்கும்போது ஏற்படுகின்ற நிலையே மகிழ்ச்சியாகும்.

***சமாதானம்:*** பாவசங்கீர்த்தனத் தொட்டியில் பாவ அறிக்கை செய்து முடிந்தபின் குருவானவர், "சமாதானமாய்ப் போய்வா" எனும்போது என் பாவம் மன்னிக்கப்பட்ட நிலையில் ஆன்மா சமாதானம் பெறுகிறது. உண்மையான பாவ அறிக்கை செய்தவரின் மனதில் இது கட்டாயம் கிடைக்கிறது. விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட பெண் இயேசுவின் முன் பதற்றம் அடைகிறாள். இயேசுவின் இனிய பதில் அவள் உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்துகின்றது.

**இவை மூன்றும் இறைவனோடு சம்பந்தப்பட்டவையாகும்.**

***பொறுமை:–*** என்பது மற்றவர்களோடு உறவாடும்போது ஏற்படும் கசப்புக்களைச் சகித்து வாழுதலாகும். விவிலியத்தில் வரும் யோபுவின் கதை இதை எமக்கு விளக்குகின்றது. ஏதாவது காரியத்தில் தலையிட்டால் அது முடியும்வரை விடாமுயற்சியோடு பொறுமையாய் இருந்து செயற்படுதல்.

***பரிவு:–*** பல்வேறு தாக்கங்களினால் மனமுடைந்து துன்புற்று வேதனை அனுபவிப்போருக்கு நாம் தேடி உதவி செய்வது பரிவாகும். உதாரணமாக யேசு மாத்தா, மரியா வீடு சென்று துயர் துடைத்தார். அன்னை திரேசா தொழுநோயாளருக்கு உதவியது.

***நற்குணம்:*** நாமும் நன்மைத்தனத்தில் வளர்தல், மற்றவரையும் வளரச் செய்தல். நமக்கு நிந்தை, அவமானம் ஏற்பட்டாலும் பிறருக்கு நற்காரியம் செய்தல் நற்குணமாகும். இவையாவும் பிறரோடு சம்பந்தப்பட்டவை.

***விசுவாசம்:*** இறைவனோடும், மற்றவர்களோடும் விசுவாசமாயிருப்பதற்கு நம்மில் விசுவாசம் கொள்ள வேண்டும். நேர்மையும், இறைவன்மீது ஆழ்ந்த பற்றும் கொள்ள வேண்டும். இதில் கானானேயப் பெண்ணின் கதையை நினைவில் கொள்வோம். (மாற் 7: 24-29). உலகை நம்பினால் வாழ்வு வந்துவிடாது, மாறாக இறைவனில் அசையாத நம்பிக்கைகொண்டு வாழ்வதால் நிலைவாழ்வு உண்டு என்பதை இது விளக்கி நிற்கிறது.

***சாந்தம்:–*** தனக்கு நஷ்டமோ, பிரச்சினையோ எது ஏற்பட்டாலும் மற்றவர்கள் மட்டில் கரிசனை கொள்ளல் சாந்தமாகும். (மத்:1825)

***இச்சையடக்கம்:*** எமது உடை, உணவு, வேலைகளில் ஈடுபடுவது எதுவாயினும் எல்லாவற்றிலும் தனது உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தி நேரிய பாதையில் வாழுதல் தன்னடக்கம்.

(தானி 2:1-65) சூசன்னா அழகு மிக்க திருமணமான பெண். இவள் தனிமையாக இருந்தவேளையில் இரு முதியவர்கள் அவளை இச்சைக்கு இசையுமாறு கேட்டபோது அவள் இணங்கவில்லை. ஏனெனில் அவள் இறைப்பற்றும், ஒழுக்கமும், தன்னை அடக்கும் பக்குவமும் கொண்டிருந்தாள். இதனால் வெட்கமடைந்த மனிதர்கள் இவள்மேல் பொய்க்குற்றம் சாட்டி சாவுக்குத் தீர்ப்பிட்டனர். அவ்வேளை தானியேல் என்ற இளைஞன் இறை ஆவியினால் தூண்டப்பெற்று, விசாரணை செய்து உண்மையான நிலையைக் கண்டுபிடித்தான்.

நாம் இறைவனோடு நெருக்கம் கொள்ளும்போது இக்கனிகள் எமக்குள் வளர்ச்சியடையும். இவற்றைச் செய்வதற்கு இறைவனுடைய அருளும் உதவியும் தேவை. "நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராயிருப்பதே என் தந்தைக்கு மகிமை" (யோவான் 15:8) ■



# தூய ஆவி எப்போது வருவார்?

ஒருமுறை ஒரு ஆயர் ஒரு பங்கிலே உறுதிப்பூசுதல திருவருட்சாதனம் கொடுக்கச் சென்றபோது சிறுவர் சிறுமியரைப் பார்த்து, "தூய ஆவி எப்போது வருவார்?" என்று கேட்டார். சிறுவர் சிறுமியர் அனைவரும் அமைதியாக இருந்தனர். ஒரு சிறுவன் எழுந்து தைரியமாக, "மூன்று வருடத்திற்கு ஒருமுறை தூய ஆவி வருவார்" என்று சத்தமாகச் சொன்னான். இது எப்படித் தெரியும் என்று கேட்க அவன், "மூன்று வருடத்திற்கு ஒருமுறைதான் ஆயர் வருகிறார். அதனால் அப்போதுதான் தூய ஆவியும் வருவார்" என்று சொன்னான். இது தூய ஆவியைப் பற்றிய குறைவான அறிவைக் குறிக்கின்றது.

ஆனால் இக்காலங்களில் பல பங்குகளில் பரிசுத்த ஆவிக் கூட்டத்துக்கோ, அருங்கொடை இயக்கத்திற்கோ, முழு இரவு வழிபாட்டிற்கோ, நற்செய்திக் கூட்டத்துக்கோ பஞ்சமில்லை.

இன்று ஆவியானவர் பணம் சுரக்கும் அமுதசுரபி ஆகிவிட்டார். "அல்லேலூயா" சொன்னால் மட்டும் போதும் அனைத்தும் நடக்கும் என்று சொல்லிக்கொண்டு, பிரிவினைச் சக்திகள் பிறக்கும் பிறப்பிடமாக ஆவிக் கூட்டங்கள் உள்ளன. இத்தகையோர் சாமானிய மக்களை சாத்தான்களாகப் பார்க்கும் எதார்த்தம் மற்றொன்று.

ஆவியானவர் பூமியின் உருவாக்கத் தொடக்கத்திலிருந்தவர் (தொ.நூல் 1:2). இஸ்ரேயல் மக்களை வழிநடத்திய தலைவர்கள் தெபோரா, சத்யோன் மேல் இருந்தார். திருமுழுக்கு யோவானிடத்திலும், யேசுவிடத்திலும் குடிகொண்டு இருந்தார் (லூக் 4:18-19). திருத்தூதர்கள் தங்கள் கைகளை மக்கள் மேல் வைக்கும்போது இறங்கி வருகின்றார் (திரு.ப 8:17, 6:6). திருத்தூதர்கள் பிறர்மேல் ஆவியை ஊதும்போதும் ஆவியானவர் இறங்கி வருகின்றார் (யோவான் 20:22).

அதே ஆவியானவர்தான் நமக்கு இறைவனை 'அப்பா' என்று அழைக்கும் உரிமையைப் பெற்றுத்தருகின்றார். (கலா 4:6) இதே ஆவியானவர்தான் இறையரசின் மதிப்பீடுகளை வாழ முடியாமல் நம்பிக்கையிழந்து துவண்டுபோன சீடர்களுக்கு துணிவையும், தன்னம்பிக்கையையும் கொடுத்து யேசுவிடம் பெற்றுக்கொண்ட நற்செய்தி அடங்கிய இறையரசை அறிவிக்க அழைப்பு விடுத்தார் (திப.2:1-11). ■

# சிறுவர் பொழிவு

## இரும்பு முட்டை
### - சிறுவர் கதை -



கீழ்நாட்டு இளவரசன் தனக்கு நியமிக்கப்பட்டிருந்த பெண்ணிற்கு ஒரு வெகுமதி அனுப்பினான்.
அது இரும்பினால் செய்யப்பட்ட முட்டை. அதை அவள் வாங்கி பார்த்ததும் "இரும்பையா வெகுமதியாக அனுப்புவது?" என்று கோபத்துடன் கீழே எறிந்துவிட்டாள். எறியவும் அது உடைந்து விட்டது. அதற்குள் வெள்ளியினால் செய்யப்பட்ட வெள்ளைக் கரு போன்ற ஒன்று வெளிப்பட்டது. அதை எடுத்துப் பார்க்கும்போது அதற்குள்ளிருந்து ஒரு தங்கக் கோழிக்குஞ்சு தோன்றியது. அதற்குள் ஒரு இரத்தின மூடி இருந்தது. அதனுள் ஒரு வைர மோதிரம் இருந்தது. அதுதான் கல்யாண வாக்கு மோதிரம்.

*நம் வாழ்க்கை இரும்பு முட்டை போன்றது. இலக்கை நோக்கி பொறுமையுடன் ஓடினால் பேரின்ப வாழ்வாகிய வைர மோதிரத்தைப் பெறலாம். கடவுள் நமக்குக் கொடுக்கும் கடின அனுபவங்களுள் விலையேறப்பட்ட நன்மைகள் பதுங்கியுள்ளன.*

*பி. டயானி, புதுக்கமம், உயிலங்குளம்.*

## கடவுளின் கருணை



பாவி ஒருவன் கடவுளைப் பார்த்து "இறைவா என் பாவங்களை மன்னித்துவிடும்" என்று மன்றாடினான். இறைவனோ அவனிடம், "எந்தப் பாவத்தை மன்னிக்கச் சொல்கின்றாய்?" என்றார். அதற்குப் பாவி, "ஓகோ நான் எத்தனையோ பாவங்களை அடுக்கடுக்காய் செய்திருக்கின்றேன். அதில் எந்தப் பாவத்தை மன்னிக்க" என்று கடவுள் கேட்டார் என நினைத்தான்.
ஆனால் இறைவனோ, "ஆம் மகனே, எந்தப் பாவத்தை மன்னிக்கச் சொல்கின்றாய்? நீ உன் பாவங்களுக்காய் மனம் வருந்தியபோதே நான் உன் பாவங்களை எல்லாம் மன்னித்து மறந்து விட்டேன். ஆகவே எந்தப் பாவத்தை மன்னிக்கச் சொல்கின்றாய்?" என்றார். அதைக் கேட்ட அந்தப் பாவி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

*ஆம்! கடவுளின் கருணை கற்பனைக்கு எட்டாதது. இதை உணராது வாழும் நாம் மிக மிக முட்டாள்கள் என்பதை இந்தக் கதை உணர்த்துகின்றது.*

*ஓ. சுதர்சன் டிக்செனி, வடக்கு வீதி, நானாட்டான்.*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-19



**73.** எண்ணற்ற பாவிகளை அவர் மனந்திருப்பியதால், சாத்தான் கோபத்தால் வெகுண்டு எழுந்தான். ஒருமுறை இரவு மனித உருவில் வந்து அவர்மேல் விழுந்து, அவரது கழுத்தை நெரித்தான். அந்தோனியாருக்கு மூச்சுத் திணறியது. அவர் மரிக்கப் போகிறாரா? இல்லை! தேவ அன்னையை நோக்கிச் செபித்தார். விண்ணகத் தாயும், அரசியுமான அவள் உடனே அவரது உதவிக்கு வந்து சாத்தானை விரட்டியடித்தாள்.

**74.** அந்தோனியார் மீண்டும் தனது மறையுரைகளை எழுத ஆரம்பித்தார். மிகவும் பலவீனமாய் இருப்பதை உணர்ந்தார். மேலும் அவரது நோய் அவரை மிகவும் துன்புறுத்தியது. அவருடைய அதிபர்கள் அவரைப் பதுவையிலிருந்து கிராமப் புறமாக இருந்த ஒரு மடத்திற்கு ஓய்வுக்காக அனுப்பினார்கள்.

**75.** அவரது உற்ற நண்பரான டீசோ இளவரசன் இருந்த ஒரு கிராமத்திற்குச் சென்றார். டீசோ மிகவும் மரியாதையுடன் வரவேற்று, "தாங்கள் எனது மாளிகையில்தானே இருக்கப் போகிறீர்கள்?" என்றார். 'அல்ல' – 'மடத்திலா'? – "அங்கும் அல்ல. – வாருங்கள் இடத்தைச் சுற்றிப் பார்ப்போம்" என டீசோ அவரை ஒரு சிறிய வனத்துக்கு இட்டுச் சென்றார். அங்கு அந்தோனியார் ஒரு பெரிய வாதா மரத்தைக் கண்டார்.

**76.** "துறவிகளும் - பறவைகளும் சகோதரர்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் ஒளியை விரும்பி, வானத்தை நோக்கிப் பறக்கத் துடிக்கின்றனர்." என்று குறிப்பிட்டார். பிறகு வியப்பில் மூழ்கியிருந்த டீசோவிடம் அந்த மரத்தின்மீதே, பலகைகள், மரக் கிளைகளினாலான ஒரு சிறிய அறையைக் கட்டச் சொன்னார். இளவரசரே முன்னின்று தன் கையாலேயே அத்தகைய அறையைக் கட்டிக் கொடுத்தார். அப்பொழுது முதல், அந்தோனியார் அங்கேயே தங்கியிருந்து, செபித்துக் கொண்டும், இறைபுகழ் பாடிக்கொண்டும் இருந்தார்.

(தொடரும்)

## மெல்லச் சிரிங்க...!



**ஆசிரியர்:** யேசு, காந்தி, புத்தர் மூவருக்கும் என்ன தொடர்பு உள்ளது?
**மாணவன்:** மூன்று பேரும் லீவு நாளில் பிறந்தவர்கள்.

*ச.கிறிஸ்ரின், படகுதுறை, இலுப்பைக்கடவை.*

**நோயாளி:** ரொம்ப பலவீனமாக இருக்கு டாக்டர். சத்து மருந்து கொடுங்க.
**டாக்டர்:** இந்த மாத்திரையை சாப்பிடுங்க. ஒரு யானையை தூக்கி எறியும் பலம் வரும்.
**நோயாளி:** அப்போ பாதி மாத்திரை போதும் டாக்டர்.
**டாக்டர்:** ஏன்?
**நோயாளி:** என் மனைவி அந்தளவு நிறை இருக்க மாட்டாள்

*அ. ஜெனிஸ்ரன், பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம்.*

**கம்பர்:** ஐயோ இவன் வடிவு என்பதோ அழியா அழகுடையவன்
**இம்பர்:** ஏன் பவுடர் பூசியதாலா

*ஜெ. கிறிஸ்ரி பெனான்டோ, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*

**மனைவி:** அய்யய்யோ... யாருங்க உங்கமேல வெத்தில போட்டு துப்பினது?
**கணவர்:** அதை ஏன் கேக்கிற. பஸ்சில் இருந்தவர்கிட்ட 'இந்த பஸ் எங்க போகிறது' என்று கேட்டேன். அவர் வெத்தில போட்டிருந்த வாயத்திறந்து 'தூத்துக்குடி' என்டு சொல்லிட்டாரு.

***************

**மேனேஜர்:** ஆப்பிசில இருக்கிறது பத்துப் பேர்தான் அதுல அஞ்சு பேர் லீவு போட்டா என்ன ஆகும்?
**கிளாக்:** குறட்டைச் சத்தம் குறைந்திடும் சார்.

*ஆ. டயாளினி, மாதிரிகிராமம், நானாட்டான்.*



**தகப்பன்:** ஏன் அவனை 'போடா நாயே' என்று திட்டினாய்?
**மகள்:** எங்கிட்ட வாலாட்டினான். அதுதான்.

**********

**அலுவலக கிளாக்:** நம் இன்சுரன்ஸ் ஒவ்விசுக்கு ஒரு பொண்ணிட்ட இருந்து போன் வந்திருக்கு சார்.
**மனேஜர் :** என்னவாம்?
**கிளாக்:** 'மாமியார் மருமகள் சண்டைக்கு விபத்துக் காப்புறுதி உண்டானு?' கேக்கிறா சேர்.

*ச. மேர்சி தனுஜா, பாலையடிப் புதுக்குளம்.*

**கணவன்:** எதிர்வீட்டுக்கு புதுசா குடிவரப் போகிற குடும்பத்தில் அழகான வயசுப் பெண் ஏதாவது இருக்கிறாளா?
**மனைவி:** ஆமாம். ஏன் கேட்கிறீங்க?
**கணவன்:** நம்ம பையன் அவங்க லொறியிலிருந்து சாமான்கள் இறக்க உதவிக்கிட்டிருக்கானே பார்.

*************

**ஒருவர்:** 'நரகம் ஒன்று கிடையாது' என்கின்றான் என் மகன் ஆனால் சொர்க்கம் இருப்பதை மட்டும் ஒப்புக்கொள்கின்றான்.
**மற்றவர்:** கல்யாணம் ஆனால் நரகம் இருப்பதை தானாக தெரிந்து கொண்டு விடுவான்.

*அ. றொபின்சன், பெரியமுறிப்பு, முருங்கன்.*



**ராமு:** மச்சான் எனக்கு மோட்சம் நிச்சயமடா!
**சோமு:** அது எப்படிடா சொல்கிறாய்?
**ராமு:** அதுதான்டா 'அந்நியன்' படம் பார்த்தேன்.
**சோமு:** டேய்.. அதுக்கும் மோட்சத்துக்கும் என்னடா சம்பந்தம்
**ராமு:** நீ வேற, பைபிளில் இருக்குத் தானே 'நான் அந்நியனாய் இருந்தேன் பார்க்க வந்தீர்களா?' என்று.
**சோமு:** ஹீ...... ஹீ...... ஹீ...... ஹீ....

*இ. டயாளினி, உப்புக்குளம், மன்னார்.*

## கவிதைப் பூக்கள்

### அன்பு

அகராதி திறக்கும்போது
அதில் அமைந்த முதல் வார்த்தை
அன்புதான்! ஏங்கிடும் எனக்கு
நிறைவான அன்பு நிஜமாய் கிடைக்குமா

*க. அவன்யூட், எழுத்தூர்.*

### கல்வியை வீணே இழக்காதீர்

பள்ளிக்கு செல்லும் வேளையிலே
சின்னஞ்சிறிய பிஞ்சுகளே
கள்ளம் போட்டு நிற்காதீர் - உமது
கல்வியை வீணே இழக்காதீர்!

அள்ளிக் கொடுத்தால் - குறைவற்ற
கல்விச் செல்வம் அழியாது!
உள்ளத்தில் நன்றே நிலைத்திருக்கும்
உண்மையாய் அது நிலைத்திருக்கும்.
நல்லொழுக்கம் பலவற்றை நன்கே
நாளாந்தம் உம்மிடம் விளைவிக்கும்
கல்வியை வீணே இழக்காதீர் - பின்
கவலை கொண்டு வாடாதீர்.

*ஜீ. சிறிஷாந்தா (குயின்சி), சாளம்பன்.*

### தாய்

தாயாம் தாய்! அவள் யார்?
நம்மைப் பத்து மாதம் சுமந்து
பகல் இரவாய் கண் விழித்து
எத்தனை போர் மத்தியிலும்
எம்மைக் காப்பாற்றினாளே
அவள்தான் தாய்!

### இறப்பு

உழைத்து உழைத்து
சோர்ந்து போன
மனிதனுக்கு நிலம்
கொடுத்த ஓய்வு!

*மா. பனித்திரா, அன்பின் சகோதரி இல்லம், செட்டிகுளம், வவுனியா.*

### அம்மா

உயிர் உள்ளவரை இருப்பவள்
அன்பாய் என்னைக் காப்பவள்
உயிரை எனக்காய்க் கொடுப்பவள்
கல்வி அறிவைப் புகட்டுபவள்
என்றும் என்னைக் காப்பவள்
கண்ணில் இமையாய் இருப்பவள்.
என்றும் என் இதயத்தில் இருப்பவள்.
என் அம்மா!

*அ. கொன்சி, சிதம்பரபுரம், 21/3, வவுனியா.*

### கல்வி

அம்மா என்னும் மூன்றெழுத்தில் ஆரம்பித்து
கல்வி என்னும் முதற் படியில் கால் பதித்து
அன்பு என்னும் விதை விதைத்து
அறிவு எனும் செடி வளர்.

*அ. சர்மிலி, சிதம்பரபுரம், 21/3, வவுனியா.*

### வெண்புறா புறா

புறா புறா வெண் புறா
சமாதானம் கொண்டு வா
எம் தேசத்தின் விலங்கொடிக்க
சட சட வென பறந்து வா
சமாதானம் கொண்டு வா
சமர் நிறுத்த ஓடி வா!

வெண்மை நிறம் நீ கொண்டாய்
எம் தேசத்தைச் சுற்றி வட்டமிட்டாயோ
இங்கு ஓடும் இரத்த ஆறைப் பார்த்தாயோ
எம் மக்களின் கல்லறையைப் பார்த்தாயோ
இன்னும் ஏன் தாமதம்
சமாதானம் கொண்டு வா...
சிறுவர் சிரித்து விளையாட
எம் மக்கள் இறைவனில் இன்புற்றிருக்க
இளம் மங்கையர்கள் மகிழ்ந்திருக்க
நாளை எம் மண்ணில் சமாதானத்தை
நீ கொண்டு வாராயோ...

*யோ. வக்சலா (டெலா), படகுதுறை, இலுப்பைக்கடவை.*

### எனது தாய்

பத்துமாதம் சுமந்தவள்
பத்தியம் பல காத்தவள்
பற்றுடனே பிள்ளையை
பரிவுடனே வளர்த்தவள்.
பாசத்துடன் ஒழுக்கத்தை
பாலுடனே ஊட்டினாள்.
பாவங்கள் செய்திட்டால்
பக்குவமாய்த் திருத்துவாள்.
கண்ணயர்ந்து தூங்காது
காணும் துன்பம் ஏற்காது
காப்பாற்றும் உத்தமி.
கண் கண்ட தெய்வம் என்று
முதியோரின் சொல்தனை
முத்தெனப் போற்றியே - நாம்
முடிவுவரை வாழ்ந்திடுவோம்.

*தி. லக்சிக்கா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.*

## பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியரும் ஊடகத் துறை ஆர்வலருமான

# அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்

## மன்னாவுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்

*யூன் மாதம் 25ம் திகதி இலங்கையில் தேசிய ரீதியில் 40வது உலக சமுகத்தொடர்பு தினம் கொண்டாடப்படுகிறது. தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் சமுகத் தொடர்பியல், ஊடகவியல், பத்திரிகைவியல் என்பன இன்னும் ஒரு புதிய துறையாகவே இருக்கின்றது.*

*ஈழத்துத் தமிழ் குருக்களுக்கிடையில் ஊடகத்துறையில் ஆர்வம்கொண்டு அர்ப்பணிப்போடு உழைத்து வருபவர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார். 40வது உலக சமுகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு அவருடன் மேற்கொண்ட நேர்காணலை மன்னா வாசக அன்பர்களுக்காகத் தருகின்றோம்.*

*பதிப்பாசிரியர்)*

***கேள்வி :* குருத்துவப் பணியோடு ஊடகப் பணியையும் ஆற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணக்கருவை எப்போது பெற்றீர்கள்?**

*பதில் :* என்னுடைய சிறுவயதில் ஒவ்வொரு நாள் மாலையிலும் நான் செய்யவேண்டிய ஒரு கட்டாய வேலை ஈழநாடு பத்திரிகையை பக்கத்து வீட்டில் இருந்து வாங்கி வந்து, எனது தந்தையாரிடம் கொடுப்பதாகும். 5ஆம், 6ஆம் வகுப்புப் படிக்கும் போதே இவ்வேலையை நான் செய்வதுண்டு.

எனது தந்தையார் கைவிளக்கில் ஒவ்வொரு நாளும் ஈழநாடு பத்திரிகையைப் படிப்பார். சில நாட்களில் என்னைச் சத்தமாக வாசிக்கும்படியும் அவர் சொல்வதுண்டு. விடயத்தை முழுமையாகப் புரியாவிடினும் நான் வாசிப்பதுண்டு. பாதுகாவலன் பத்திரிகை வாராவாரம் தபாலில் வீட்டிற்கு வரும். தந்தையார் பாதுகாவலனையும் வாசிப்பார். பாதுகாவலனில் வரும் சிறுகதைகளை 6ஆம் வகுப்பு படிக்கும்போதே நான் வாசிக்கத் தொடங்கினேன். எனது கட்டுரை ஒன்றையும் அப்போதே நான் பாதுகாவலனுக்கு அனுப்பினேன் அது பிரசுரிக்கப்படவே இல்லை.

***கேள்வி :* உங்கள் முதல் கட்டுரையை மிகச்சிறிய வகுப்புப்படிக்கும்போதே எழுதியுள்ளீர்கள். இன்று ஊடகத் துறையில் நீங்கள் ஏற்படுத்தியுள்ள சாதனைகளைப் பார்க்கும்போது முதல் கட்டுரை வெளிவரவில்லை என்று சோர்ந்து போகவில்லைப்போல் தெரிகிறது?**

*பதில் :* முற்றிலும் உண்மை. சோர்ந்து போகவில்லை. இன்னும் திறமையாக எழுதவேண்டும் என மன உறுதி கொண்டேன். 7ஆம் வகுப்பில் புனித மாட்டீனார் சிறிய குருமடம் சேர்ந்தேன். நிறைய வாசிக்கும் ஆர்வத்தையும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டேன்.

***கேள்வி :* தங்களின் முதற் கட்டுரை எப்போது பிரசுரமானது?**

*பதில் :* பாடசாலைப்படிப்பை முடித்துக் குருத்துவப் படிப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஆங்கிலம் படிக்கும்போது 1976ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரியில் இருந்து வெளிவந்த *தென்றல்* என்ற சஞ்சிகைக்கு ஒரு விமர்சனக் கடிதம் எழுதினேன். அதுவே எனது எழுத்துக்களை முதலில் அச்சில் பார்த்த அனுபவமாகும்.

**கேள்வி: உங்கள் அனுபவம் எப்படி இருந்தது? மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பீர்கள். அப்படித்தானே?**

*பதில் :* எனது எழுத்துக்களைப் பார்த்தது ஒரு மிக மகிழ்வான அனுபவம். எனது அந்தக் கடிதத்தை கடித உறையில் போட்டு அனுப்பி வைத்தது சக குருமட மாணவனாக இருந்த ஜெபரட்ணம் அடிகளார். அவர் சொன்ன வார்த்தைகள் எனக்கு இன்னும் பசுமையாக இருக்கின்றது. “நீர் இனிப்பெரிய எழுத்தாளன்” என்று சொன்னார். அவரின் வாழ்த்தே பத்திரிகைத்துறையில் நான் பெற்ற முதல் வாழ்த்து. நான் அடுத்த தென்றல் இதழுக்கும் ஒரு கட்டுரை எழுதினேன். எனது கட்டுரை கட்டாயம் வரும் என நான் முழு நம்பிக்கையோடு இருந்தேன். என்ன நடந்தது தெரியுமா? அதன் பின்னர் தென்றல் சஞ்சிகையே வரவில்லை. சக குருமாணவர்களான யேசுதாசன், சந்திரன், ஸ்ரனின் அடிகளார் எல்லாருமே நான் எழுதியபடியால் சஞ்சிகையையே நிறுத்திவிட்டார்கள் எனப் பகிடி பண்ணினார்கள். நானும் சிரித்து மகிழ்ந்தேன். ஆனால் என் மனதில் ஒரு ஆழ்ந்த கவலை ஏற்பட்டது.

***கேள்வி :* நீங்கள் உங்கள் கதையைச் சொல்லும் விதம் மிகவும் உணர்வுபூர்வமாக இருக்கிறது. அதன் பின்னர் உங்கள் எழுத்துப் பயணம் எப்படித் தொடர்ந்தது எனச் சொல்லுங்கள்.**

*பதில் :* சொல்கிறேன். மேற்படிப்பிற்காக சென்னை நகர் போனேன். புதிய வாய்ப்பு, வாசிக்க நிறைய விடயம். அரும்பு – பொய்யா விளக்கு – சற்பிரசாததூதன் என்ற சஞ்சிகைகளுக்கு எழுதினேன். பல கட்டுரைகள் வெளிவந்தன. எல்லாவற்றையும் சேர்த்து வைத்தேன். 1990ஆம் ஆண்டு இடம்பெயர்வில் அனைத்தையும் இழந்தது மிகக் கவலை.

சற்பிரசாதத் தூதன் 1979ஆம் ஆண்டு 40 இந்திய ரூபாய் எனக்கு சன்மானம் அனுப்பியது. மறக்க முடியாத அனுபவம். எழுதியும் பணம் பெறலாம் என்பது எனக்கு முதல் அனுபவம். இந்தியாவில் கோயம்புத்தூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இறுதியாண்டு குருமடமாணவர் அருள்தாஸ் ஆனந்தவிகடனுக்கு எழுதும்படி சொன்னார். நான் எழுதி அவருக்கும் காட்டி அனுப்பினேன். அது பிரசுரிக்கப்படவேயில்லை.



***கேள்வி :* தங்கள் முதல் கட்டுரை பாதுகாவலனில் எப்போது பிரசுரமானது எனக் கூறுவீர்களா?**

*பதில் :* 1979ஆம் ஆண்டு சென்னை பூந்தமல்லி குருத்துவக்கல்லூரி மாணவர்கள் பகிர்ந்துகொண்ட இறை அழைத்தல் பற்றிய பகிர்வு என்னைப் பெரிதும் கவர்ந்தது. பெல்லாரி மறைமாவட்டத்தை சேர்ந்த ஏ. லின்சன் என்ற குரு மாணவனின் பகிர்வை மௌன ஊர்வலம் என்ற தலைப்பில் பாதுகாவலனுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பினேன். பாதுகாவலன் ஆசிரியராக இருந்த மத்தாயஸ் அடிகளார் அதனைப் பிரசுரித்தார். எனது எல்லாக் கட்டுரைகளோடும் அதை இன்னும் வைத்திருக்கிறேன். சிலவேளைகளில் எடுத்து அதை திரும்பப் படிப்பதுமுண்டு. கட்டுரைகள் எழுதுவது கடினமானது. பிரசுரமான பின்னர் பார்ப்பது பரவசமானது. அனைத்துக் கட்டுரைகளையும் சேர்த்துவைத்துப் படிப்பதுதான் அனுபவமாகும்.

***கேள்வி :* தங்கள் முதல் கட்டுரை பிரசுரமாகாத பாதுகாவலன் பத்திரிகையில் இன்று ஆசிரியராக இருக்கிறீர்கள். பலரின் ஆக்கங்களையும் நிராகரித்திருப்பீர்கள் அப்போது தங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

*பதில் :* எனது முதல் பாதுகாவலன் கட்டுரையின் பின்னர் நிறையக்கட்டுரைகளைப் பாதுகாவலனுக்கு எழுதிவிட்டேன். ஏறக்குறைய 300 கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. குடும்பம் ஒரு கதம்பம், திருத்தந்தையின் இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும், அர்ச்சனைப் பூக்கள், கத்தோலிக்க சர்வதேச மகாநாட்டு அனுபவங்கள் போன்றவற்றை எழுதியுள்ளேன்.

நீங்கள் கேட்ட கேள்வியின் உணர்வுபூர்வமான பகுதிக்கு வருகிறேன். இது ஒரு இரகசிய உண்மையும்கூட. முடியவே முடியாது என்றால் ஒழிய நான் யாருடைய கட்டுரைகளையும் பாதுகாவலன் பத்திரிகைப் பிரசுரத்திற்கு நிராகரித்தது இல்லை. பாதுகாவலன் அலுவலகத்தாருக்கும், எழுதியோருக்கும் மட்டும் இது தெரியும். குறிப்பாக ஈஸ்ரர், கிறிஸ்மஸ் இதழ்களில் அனைத்துக் கட்டுரைகளையும் எப்படியாவது வெட்டிக் கொத்திப் போடுவதும் உண்டு. இன்னும் சிறப்பாகச் சிறியவர்கள் என்றால் இரண்டு வரியும் பெயரும் போட வேண்டும் என முயற்சிப்பது உண்டு. எனது கட்டுரை போடப்படாதபோது ஏற்பட்ட மன உணர்வை நான் மறப்பதே இல்லை.

***கேள்வி :* பாதுகாவலன் பத்திரிகை தவிர ‘நான்’ சஞ்சிகை, – ‘புதிய உலகம்’ சஞ்சிகை, ‘இறையியல் கோலங்கள்’ சஞ்சிகை போன்றவற்றிற்கு எழுதியுள்ளீர்கள். சமயம் சார்ந்த அல்லது சமய நிறுவனம் சார்ந்த இவை தவிர, தாங்கள் எழுதியவை எவை?**

*பதில் :* நான் நினைக்கிறேன் மறைந்துபோன பஸ்ரியன் அடிகளார் ஒருமுறை எழுதிய பின்னர் தவக்கால சிந்தனைகளைப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதில் நான் விசேட ஆர்வம் காட்டியுள்ளேன். கத்தோலிக்கக் கட்டுரைகளை ஈழநாடு, முரசொலி, உதயன், தினக்குரல், வலம்புரி, நமது ஈழநாடு, வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளேன். யாழ் தினக்குரலில் *நற்பிரசாதம்* எனும் பெயரில் ஒரு தொடர் கத்தோலிக்க ஞாயிறு கட்டுரையை இன்னும் எழுதி வருகிறேன்.

***கேள்வி :* இக்கட்டுரைகளின் தொடர்ச்சியாகப் பல புத்தகங்களையும் எழுதியுள்ளீர்கள். அவை விருதுகள் பெற்றுள்ளன என்பதும் தெரியும். அவை பற்றி மன்னா வாசகர்களுக்குச் சொல்ல முடியுமா?**

*பதில் :* பத்திரிகைகளில் எழுதும் ஆர்வம் என்னைப் பத்திரிகைத் துறைக்குள்ளேயே கொண்டுசென்றுவிட்டது. பாதுகாவலன் ஆசிரியப் பொறுப்பை ஏற்ற பின்னர் ஆண்டுதோறும் பயிற்சிகளைக் கொடுக்கத் தொடங்க பயிற்சிக் கைநூல்களின் தேவையை உணர்ந்தேன். பாதுகாவலன் பத்திரிகையின் 125வது ஆண்டில் 6 மாத கால தொடர் பத்திரிகைப் பயிற்சியை நடத்த விரும்பினேன். அது முடியாதபோது அதனைப் *பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம* என எனது முதல் நூலாக வெளியிட்டேன். அப்புத்தகம் வட கிழக்கு மாகாண சாகித்திய விருதையும், இலங்கை இலக்கியப் பேரவை விருதையும் பெற்றது.

**கேள்வி : இந்த முதல் புத்தகத்திற்கான வரவேற்பும் இரண்டு விருதுகளும் மேலும் பல புத்தகங்களுக்கு வழி வகுத்தன என்று சொல்லலாமா?**

*பதில் :* இதன் ஆரம்பத்தைச் சொல்ல வேண்டும். 1986ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றபோது குருப்பட்ட நினைவாகச் ***செப அனுபவங்கள்*** என்ற நூலை வெளியிடத் திட்டமிட்டேன். அப்போதிருந்த ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை, “நீர் நடக்க முதல் ஓடப் பார்க்கிறீர். புத்தகம் எழுத வேண்டும் என்பதற்காக எழுதக்கூடாது. ஒரு துறையைத் தேர்ந்து புத்தகம் எழுதுகின்ற அளவிற்கு வளர்ந்த பின்னர் எழுதலாம்” எனத் தடுத்து விட்டார்.

10 ஆண்டுகளின் பின்னர்தான் எனது இந்த முயற்சியை மேற்கொண்டேன். ஆயர் கூறியபடி ஒரு துறையில் மட்டும் எழுதுவது என முடிவு எடுத்து எழுதினேன். 2005ஆம் ஆண்டு வரை 6 புத்தகங்களை எழுதியுள்ளேன். ***மின்னியக்க ஊடக இயல் ஓர் அறிமுகம்*** என்ற எனது 4வது நூல் இலங்கை அரச சாகித்திய விருதைப் பெற்றது. 1. பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம். 2. பத்திரிகை இயல் அடிப்படைகள். 3. ஊடக இயல் கலைச் சொல் அகராதி, 4. மின் இயக்க ஊடக இயல் ஓர் அறிமுகம், 5. ஊடக நேர் காணல்கள் ஓர் அறிமுகம், 6. செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம் என்ற ஆறு நூல்களை எழுதியுள்ளேன்.

***கேள்வி :* நூல்கள் தவிர, ஊடகக் கல்வியையும் மேற்கொண்டு, தமிழ் ஊடகத்துறையில் தகமை பெற்று விளங்கும் கைவிட்டு எண்ணக் கூடியவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்கள் அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*பதில் :* தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை யாழ் ஆயராக வந்த பின்னர் இத்துறை ஒரு தனித்துவமான துறை எனப் புத்தகங்களை எழுதவும், கல்வியை மேற்கொள்ளவும் ஆர்வமூட்டித் துணைபுரிந்தார். உண்மையில் பட்டங்கள் பெற்றுப் பெருமை அடைய வேண்டும் என்பதைவிட இத்துறையில் அதிகமானவர்கள் இல்லாதபடியால் தகுதிபெறவேண்டும். அப்போதுதான் சிறந்த பணியாற்ற முடியும் என்ற நோக்கோடு மேற்கல்வி மேற்கொண்டேன். இங்குள்ள பல்கலைக்கழகங்களில் இந்தத் துறை இல்லாதபடியால் அதுவும் கடினமானது. இருப்பினும் சான்றிதழ்ப்பட்டம் - டிப்புளோமாப் பட்டம் என்பவற்றோடு முதுகலைமானிப் பட்டத்தையும் (M.A) இத்துறையில் கற்றுள்ளேன். இன்னும் கற்க நிறைய உண்டு.

***கேள்வி :* ஊடகத் துறையைப் பொறுத்தமட்டில் எதிர்காலத்திட்டம் என்ன?**

*பதில் :* பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் என ஒரு நிலையத்தை உருவாக்கி பணிபுரியப் பல திட்டங்கள் உண்டு. இந்நிலையமே எனது புத்தகங்களை இப்போ வெளியிடுகிறது. திட்டங்கள் இறை சித்தப்படி நிறைவேறும்போது பார்த்துக்கொள்வோம்.

*(இதன் சுவாரசியமான தொடர்ச்சி அடுத்த மாத மன்னாவில்)*

## தேசிய சமுகத் தொடர்புத் தினம் ......

4ம் பக்கத் தொடர்ச்சி

கலை வளமும், கடல் வளமும், வயல் வளமும் செறிந்த நமது மறைமாவட்டத்தின் முக்கிய பொக்கிசமாக இருக்கும் கலைவளத்தை பாதுகாத்து வளப்படுத்தி கத்தோலிக்க விசுவாச, சமூக, நல்லொழுக்க விழுமியங்களை அதன் மூலமாக வளர்த்தெடுப்பதும், கலைஞர்களையும், கலைக் களஞ்சியங்களாக உருவாகிவரும் இளையோரையும் ஊக்கப்படுத்தி உருவாக்குவதே இதன் நோக்கம். சுட்டிப்பாகச் சொல்வதானால், ***“இறைவனின் மேன்மைமிக்க செயல்களை அறிவிக்க”*** (1பேதுரு 2:9) என்பதே இப்பணிக்குழுவின் விருதுவாக்காகும்.

**எமது பணிகள்: - வானொலி நிகழ்ச்சிகள் - பத்திரிகை வழியான பணிகள் - இணையத்தளச் செய்திகள்** (எமது மன்னார் மறைமாவட்ட இணையதள முகவரி www. Mannar diocese. Org.) **கலைப்பணிகள்:-** நடனப்பயிற்சி (இந்தியாவின் பிரபல நுண்கலைக் கல்லூரியான ***கலைக்காவிரி***யில் பயிற்றப்பட்ட நமது மறைமாவட்ட ஆசிரியைகள் செல்வி பவித்ரா எட்வின் கிறிஸ்ரி மற்றும் செல்வி திருவருட்செல்வி பத்திநாதன் ஆகியோரால் வழங்கப்படுகின்றது. இசைப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. **வெளியீடுகள்:** கத்தோலிக்க இயல், இசை, நாடகங்களை எழுத்துருவாக வெளியிடுதல், **ஒலி, ஒளிப் பதிவுகள் :** நமது பிரதேச கலைவடிவங்களை ஒளி, ஒலி நாடாக்களில் ஆவணப்படுத்தி வருகின்றோம். பக்திப்பாடல்களையும் வெளியிட்டு வருகின்றோம்.

## மன்னார் மறைமாவட்ட புதிய குருமுதல்வர்

## விக்ரர் சோசை அடிகளாரின் வாழ்வும் பணியும் - ஓர் பார்வை

அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் கடலலைகள் தாலாட்டும் வங்காலைப் பதியில் 19.03.1964ல் பிறந்தார். இவர் காலம்சென்ற ஆசிரியர் ஆ. அந்தோனி சோசை, செ. என்கிறாதித்தாள் குரூஸ் தம்பதியரின் கடைசிப் புதல்வனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை வங்காலை புனித ஆனாள் பாடசாலையிலும், தனது இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றார். 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் சேர்ந்து தனது குருத்துவ உருவாக்கத்தை ஆரம்பித்தார்.

பின்னர் தனது மெய்யியல் இறையியல் கல்வியை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் பெற்றுக்கொண்டு 18.09.1991ஆம் ஆண்டு மடுத்திருப்பதியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

முருங்கன், மன்னார் பங்குத்தளங்களில் உதவிப் பங்குத்தந்தையாகவும், உயிலங்குளம் (1993 - 1997) மற்றும் முருங்கன் (1997 - 1998) ஆகிய பங்குகளில் பங்குத் தந்தையாகவும் பணியாற்றினார். 2000ம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரையிலான 6 வருடங்கள் மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் மற்றும் குடும்பப்பணி ஆணைக்குழுவின் இயக்குனராக சிறப்பாகப் பணியாற்றினார்.

பொதுநிலையினர் சார்ந்த பணிகளில் பக்திச் சபைகள், மேய்ப்புப்பணிச் சபைகள், அரச பணியாளர்கள், கொல்பிங் சபை, முதியோர் பணி, மகளீர் பணி ஆகியவற்றை திறமையாகச் செயற்படுத்தினார். குடும்பப் பணிகளில் திருமண ஆயத்த வகுப்புக்கள், கிறிஸ்துவுக்காக தம்பதியர் இயக்கம், உளவள ஆலோசனை, குடும்பங்களுக்கான கருத்தரங்குகள் ஆகியவற்றை மேற்கொண்டார்.

மறைமாவட்டம் சார்ந்த பணிகளிலும் பல பொறுப்புக்களை வகித்தார். மறைமாவட்டக் குருக்களின் செனற் சபை உறுப்பினராகவும், மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டு செயலராகவும், மறைமாவட்ட யூபிலி விழாக் குழு செயலராகவும், குருமட மாணவர்களுக்கான உருவாக்கல் குழு உறுப்பினராகவும் இவர் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தேர்வு ஆயத்தக் கல்வியைக் கற்று, உரோமை ஊர்பானைய பல்கலைக்கழக இறையியல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் 1998 - 2000 வரையிலான காலப்பகுதியில் உரோமையில் உள்ள லாத்தரன் பல்கலைக்கழகத்தில் திருமணம் மற்றும் குடும்பப் பிரிவில் குடும்ப மேய்ப்புப்பணியியலில் முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### இறைக் கரம் வழிநடத்தும்

நற்செய்தி அறிவிக்க சென்றிடுவோம் - இதில்
நிலையாய் என்னாளும் உழைத்திடுவோம்.
புவியில் ஒளியாய் வாழ்ந்திடுவோம் - இங்கு
புத்துல கமைக்கப் புறப்படுவோம்.

அழியா வாழ்வுக்கோர் ஆதாரம்
ஆண்டவன் அருளிய சமாதானம்
ஆன்மீக வாழ்விற்கு வழியான - இறை
கோட்பா டனத்தையும் நமக்களிக்கும்.

பாவிகள் திருந்தி வாழ்வதற்கும் - மனப்
பக்குவம் அடைந்து உயர்வதற்கும்
ஆவியின் துணையால் உருவெடுத்து - பல
தூயவர் கரங்களில் வடிவெடுத்து
நித்தமும் வாழ்ந்திடும் திருநூலால் - நல்
இறையர செமக்கு மலர்ந்திடுமே,
எத்துணை இடர்கள் எதிர்வரினும் - பெரும்
இறைக்கரம் எம்மை வழிநடத்தும்.

*பி. இராயப்பு,*
*தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்,*
*விடத்தல்தீவு*

### மாதா கோவில் மணியோசை

மாதா கோவில் மணியோசை
மணியோசை இது மணியோசை
இது மாதா கோவில் மணியோசை.
ஒற்றுமைக் குரலில் ஒரு ஓசை
அது தேவன் தந்த திரு ஓசை.

இயேசுவின் தாய் நீயம்மா
ஏழை எங்களின் தாயம்மா.
அழுகின்ற எம்மைப் பாருமம்மா
எம்குறை தன்னை தீருமம்மா.

பாலகர் எங்களைப் பாரும் அம்மா
பகுத்தறி வதனை வளர்த்திடுமம்மா.
சத்திய திருச்சபை செழித்தோங்க
சமத்துவ வாழ்வைத் தாருமம்மா.

ஈழநாட்டைக் காருமம்மா
சமாதான நாடாய் ஆக்குமம்மா.
யுத்த முனைகளை நீக்குமம்மா
சமாதான ஒளியைத் தாருமம்மா.

*எஸ். டொறின் மெக்ரலின்,*
*வாழ்க்கைப் பெற்றான்கண்டல்,*
*அளவக்கை.*



### பாதையை மாற்றிடுவீர்

கீழ்த்திசை ஞானியர் மூவர்
யேசுவைக் கண்ட பின்பு
பாதையை மாற்றிச் சென்றார்
பரமனின் அருளைப் பெற்றார்.

சீமோனும், யாக்கோபும், யோவானும்
யேசுவின் புதுமையைக் கண்டு
பாதையை மாற்றிக்கொண்டார்
இயேசுவின் சீடரானார்.

பாரினிலே பாமரராய் வாழ்ந்த
பன்னிருவர் இயேசுவைக் கண்டதால்
பாதையை மாற்றி நின்றார்
பரமனின் பணிகள் செய்தார்.

சக்கேயு வரிதண்டும் செல்வந்தன்
இயேசுவைக் கண்டு தெளிந்து
பாதையை மாற்றி நின்றான் (தன்)
வீட்டுக்கு மீட்பைப் பெற்றான்.

பாவிப்பெண் மதலேனாவும்
இயேசுவைக் கண்டு தெளிந்து
பாதையை மாற்றிக் கொண்டாள்
பரிசுத்த வாழ்வு பெற்றாள்.

பரம்பரை கிறிஸ்தவர் நாம்
இயேசுவைக் காணாததினால்
பழைய குருடி (கதவைத் திறவடி) போல
வந்த பாதையில் செல்கின்றோம்.

ஏன் பாதை மாறவில்லை?
இயேசுவைக் காண எங்கள்
இதயங்கள் திறந்திடவே
இறைவனே ஆவியைத் தாரும்

ஆவியின் கனிகளாலே
இயேசுவைக் கண்டு நாமும்
பாதையை மாற்றிடுவோம்
இறையரசைக் கட்டிடுவோம்.

*செ. மாசிலாமணி,*
*ஆவணம், நானாட்டான்*

மன்னா — சிறுகதை

## ஒரு விடியலில் சில இழப்புக்கள்

**யோ. சே. நவரெத்தினராசா,**
**புதுக்கமம், உயிலங்குளம்.**

அணையப் போகும் விளக்கு ஒருமுறை சுடர்விட்டுப் பிரகாசிப்பதைப் போன்று கீழ்வானில் செம்பிழம்பு தன் முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி, வான வெளியை எழிலூட்டிக் கொண்டிருந்தது.

அந்த எழிலைத் துரத்திவிட்டு, உலகத்தைத் தன் ஆதிக்கத்தின் கெடுபிடிக்குள் கொண்டு வரவேண்டுமென்ற இறுமாப்பில் இருள் மெல்ல மெல்ல விரைந்துகொண்டிருந்தது. பொழுது புலர்வதும் பின் இருள் கவிழ்வதும் பிரபஞ்ச அமைப்பின் நித்திய கருமங்கள்தானே.....!

அதைப்பற்றிய கவலை கடுகளவும் இல்லை அவனுக்கு. உற்சாகம் கரைபுரள, வந்ததும் வராததுமாய் மனைவியை அழைக்கின்றான். அவனிடம் ஏற்பட்ட வளமைக்கு மீறிய மாற்றத்திற்கு விடை காணும் ஆவலில் ஈரக்கைகளை தான் அணிந்திருந்த சட்டையில் துடைத்தபடி ஆர்வத்துடன் கணவன் அருகில் விரைகின்றாள் அவள்.

“நாளைக்குக் காலையில் ஏழு மணிக்கு எனக்கு வெளிநாடு செல்வதற்கு பிளைட்.” அவன் கைகளில் இருக்கும் விமான ரிக்கற்றை அவளது விழிகள் சோகமும் எதிர்பார்ப்பும் அற்ற நிலையில் நோக்குகின்றன. அவள் விழிகளில் ஆயிரம் வெளிச்ச மின்னல்கள்! இரையைக் கொத்திக் குஞ்சை அழைக்கும் தாய்க் கோழியின் பாசக் கொக்கரிப்பாய் அவள் குரல்! “வாங்க சாப்பிட..” பாசமொழுகும் அழைப்பு. அசுரப் பசி ஆளை வாட்டினாலும் மனைவியின் அன்பொழுகும் இந்த இனிய அழைப்பிற்காக எத்தனை கணங்களும் காத்திருக்கலாம். அது ஒரு சுகமான அனுபவம்!

உணவருந்திய அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவள், அவன் அருகில் சென்று பாசத்தோடு அவன் தலையைக் கோதி விடுகின்றாள்.

அவளுடைய இச்செய்கை, பிள்ளையின் எதிரில் அவனுக்குச் சங்கடமாக இருக்கின்றது. அவளது அமைதியான தோற்றத்திலும், மென்மையான புன்னகையிலும் ஒரு ஆழமான அர்த்தமிருந்தது. இன்பமோ, துன்பமோ இரண்டையும் அவசரமின்றி, எதிர்கொள்வதில் அவனை மிஞ்சக்கூடியவள் அவள். இதைப் பல அனுபவங்கள் ஊடாக அவனுக்கு உணர்த்தியவளாயிற்றே.

மூட்டை சுமக்கும் தொழிலாளியின் மாறாத முதுகுத் தழும்பாய் அவள் இதயத்தில் தடம் பதிந்த அந்த ஊமைக் காயங்கள் எல்லாம் உருத் தெரியாமல், அழிந்தொழியப்போகும் இந்த வேளையிலாவது, அவசர ஆர்ப்பரிப்புக்கள் அவளைப்பற்றிக் கொள்ளாதா? என்ற தேடலில் அவனுக்கு நிச்சயம் தோல்விதான் கிடைத்தது.

தாய்ப் பறவையின் மென்மையான சோகத் திரையிலும், குஞ்சின் ஆனந்த ஆரவாரத்திலும் ஒரு கணம் மனம் கனிந்து போனாலும் கடந்த காலத் துயரச் சுழிகள் அவனுள் ஆர்ப்பரிக்காமலில்லை.

நீண்டதொரு பெருமூச்சே அப்போதைக்கு அவன் நெஞ்சைவிட்டு அகல்கிறது. இந்த ஒருவருடமாக குடும்பம் எத்தனையோ தேவைகளோடு போராடிய போதும், பாலைவனப் பசுமைகளைக் கனவில் மட்டும் கண்டு, அலையாய் அலைந்ததற்குப் பலன் கிட்டிய இவ்வேளை எதைப் பேசுவதென்று இருவரது உதடுகளும் உற்சாகமிழந்து, துடித்தாலும், மனங்கள் மௌனத்தை மண்டியிட சில கணங்கள் அதில் கரைகின்றன. திடீரென வெடித்துச் சிதறும் மகிழ்ச்சியிலும், சோகத்திலும் வார்த்தைகள் ஏன் வலுவிழந்து போகின்றன! ஓ ... உணர்வுகளின் மௌன ஊர்வலத்தில் சத்தியங்கள் தவமாய் சக்தி பெற்று ஆராதிக்கின்றனவோ? நித்திரா தேவியின் பரிபூரண அணைப்பில் பிள்ளை தன்னை மறந்திருந்த வேளை, மிக அருகாமையில் படுத்திருந்த அவர்கள் உறக்கக் காற்று தம் இமைச் சிறகுகளை தழுவாதா? என்ற ஏக்கத் துடிப்பு இருவர் உள்ளங்களிலும் மனம் ஒரு நிலையில்



இல்லாதபோது, அது எங்கனம் சாத்தியமாகும்? சோக இருள் மூட்டம் மனதை ஆட்கொள்ள அதை வெளியில் காட்டாது அவள் முகத்தை அவன் ஆவலோடு பார்க்கின்றான்.

கூரை முகட்டையே சுற்றிக்கிறங்கும் அந்த வண்டுவிழிகளுக்குள் பொலிவிழந்த காந்தக் கவர்ச்சி இருளிலும் துல்லியமாகத் தெரிந்தது அவனுக்கு. வாழ்வுத் தொல்லையின் அசுரத் தாக்கங்கள் அவளை வாட்டியபோதும்கூட கருணையும், கவர்ச்சியும் இந்த மதி முகத்தைவிட்டு மறையாதிருந்ததே? மனிதனுக்கு ஆயிரம் அவஸ்தைகள் வரட்டும். அதனாலென்ன? எல்லாத் துயரங்களையும் பொறுமையோடு தாங்கிக்கொள்ளும் ஒரு மனைவி அவன் அருகில் இருக்கும்வரை அந்தத் துயரமெல்லாம் தூசாய்ப் பறந்து மகிழ்ச்சியும், அமைதியும் வந்து அவன் மனதை நிறைத்துவிடும்.

இந்தப் பதினைந்து வருட வாழ்க்கையில் அவள் என்ன பெரிய சுகத்தை அடைந்துவிட்டாள்? வேதனையையும் - விரக்தியையும் தவிர.

அப்படியிருந்தும் தேவைகளை அடைந்து மகிழ்வது மட்டும்தான் வாழ்க்கையென்று நினைக்கின்ற சராசரிப் பெண்களிலிருந்து விலகி நின்று, தேவைகளை இழப்பதும், துயரங்களில் மகிழ்வதும்கூட வாழ்க்கைதான் என்றல்லவா இதுவரை வாழ்ந்து காட்டியவள். பொருளாதாரச் சிக்கல்களால் அவதியுறும் போதெல்லாம் அதே பொலிவும் புன்சிரிப்பும் ஆறுதல் வார்த்தைகளும் தானே மீண்டும் அவனைச் சுறுசுறுப்பாய் இயங்க வைத்திருக்கின்றது.

இத்தனை ஆண்டுகளில் தொடர்ந்து ஒரு பத்துநாள் அவளை விட்டுப் பிரிந்திராத அவன், முப்பத்தாறு மாதங்கள்...! மூன்று வருடங்களை வெளிநாட்டில் எப்படிக் கழிப்பான்?

“உங்களைப் பிரிஞ்சு நான் எப்படி இருப்பேன்?” என்று ஆத்திரமும் அழுகையுமாய் வேதனை அவளைப் பேசவிடாது தடுக்கின்றது. அவளுக்கு ஆறுதல் கூறும் திராணியற்ற நிலையில் அவன் ஒரு பாட்டம் அழுது தீர்க்கின்றான்.

காலம் கணங்களைப் பின்தள்ளி கடுகதியில் விரைகிறது. “எழும்புங்கோ... நேரமாச்சு... இந்தத் தேத்தண்ணியைக் குடியுங்கோ.” குரல் கேட்டு விழிக்கின்றான். “இண்டைக்கு மட்டும்தான். இனி மூன்று வருஷம் கழிச்சுத்தான் என் கையால ....” வார்த்தைகள் அவள் தொண்டைக்குள் சிந்தித் தத்தித் தடுமாறுகின்றன. நெஞ்சை உலுப்பும் விம்மல் ஒலி. அவனும் அவளை அணைத்து, கோளையைப்போல் கேவிக் கேவி அழுகின்றான். சிறிது நேரத்தில் பிள்ளையும் அவனைக் கட்டிக்கொண்டு அழ, அந்த வீடு அழுகைச் சத்தத்தால் நிறைந்து வழிகின்றது.

வாசலில் ஏஜென்சியின் கார் வந்து, ஒலி எழுப்புகிறது. “ஏற்கனவே லேற் .... சீக்கிரமாக வெளிக்கிடுங்கோ” என்னும் றைவரின் குரல் அவர்கள் மண்டையில் அடிப்பதைப்போல் ஒலிக்கிறது. ஆர்ப்பரித்து எழும் சமுத்திரத்தின் நீர் அலை ஒன்றோடு ஒன்று முட்டி விலகுவதைப்போல் இருந்தது அவர்கள் நிலை!

(முற்றும்)



### தொடர் கட்டுரை – அங்கம் 38

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### பகுதி II தவக்கால பன்முக மரபுகள்

### பாடுகளின் நாடகங்கள்: தோற்றமும் வளர்ச்சியும்

இயேசுவுடன் சிலுவையில் தொங்கும் ஒவ்வொரு கள்வனினதும் வாயில் அவர்களது ஆன்மாவின் ஓவியம் (ஆன்மாவின் பிரதிபலிப்பு) தொங்கிக் கொண்டிருக்கும். இவை இறைவனின் தூதர்கள் மனம் வருந்திய கள்வனின் ஆன்மாவை எடுத்துக்கொள்ள, சாத்தான் மனம் வருந்த மறுத்த கள்வனின் ஆன்மாவை எடுத்துக்கொண்டான் என்பதைச் சுட்டிக்காட்டியது. ஆடை, அலங்கார அமைப்பு கிறிஸ்து வாழ்ந்த காலத்தினதும், பலஸ்தீன மக்களினதும் ஆடை அலங்காரத்தைப் பிரதிபலிக்கவில்லை. முழுதாக நாடகங்கள் மேடையேற்றப்பட்ட சமகால ஆடை, அலங்காரத்தையே பிரதிபலித்தது.

#### தொழில் குழுக்களின் கையில் நாடகம்

15 ஆம் நூற்றாண்டு பாடுகளின் நாடகங்கள் சமயம், கலை, ஜேர்மன் மக்களின் நகர வாழ்வு ஆகிய விடயங்களின் ஒட்டுமொத்தமான பிரதிபலிப்பாக அமைந்தன. இக்காலத்தில் ஆழமான சிந்தனைகளும் அதற்கு ஏற்றதான நகைச்சுவையும் நாடகங்களின் வழியாக வளர்ச்சி பெற்றன. ஆனால் 16 ஆம் நூற்றாண்டில் கற்றோர் நாடகங்களுடன் கொண்டிருந்த தொடர்புகளைப் படிப்படியாகத் துண்டித்த காரணத்தினால் நாடகங்கள் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் மட்டுமே வரவேற்பைப் பெற்றன. இதனால் நாடகங்கள் வழியாக முன்வைக்கப்பட்ட சிந்தனைகள் ஆழமற்ற, மேலெழுந்தவாரியான சிந்தனைகளாக மாற்றம் பெற்றன.

இந்நிலையில் நாடகங்களில் அதிகம் கேளிக்கைகள் இடம்பெற்றன. மேலும், பாடுகளின் நாடகங்களில் கோமாளிப் பாத்திரம் அறிமுகம் செய்யப்பட்டதோடு, வெறுப்பூட்டுகின்ற கீழ்த்தரமான காட்சி அமைப்புக்களும் இடம்பெற்றன. இதனால் திருச்சபையின் அதிகாரிகள் இவ்வாறான நாடகங்களைத் தயாரிப்பதற்கும், மேடையேற்றுவதற்கும் தடை விதித்தனர். இப்பின்புலத்திலே 1471 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டு ஆயர்கள் சிலரும், 1549 இல் ஜேர்மன் நாட்டு ஆயர் மன்றமும் தங்களின் நிர்வாகத்துக்கு உட்பட்ட மறைமாவட்டங்களில் பாடுகளின் நாடகங்கள், புனைகதை நாடகங்கள் மேடையேற்றப்படுவதற்குத் தடை விதித்தனர். 1548இல் பிரான்ஸ் நாட்டில் அந்நாட்டு நாடாளுமன்றம் தங்கள் நாட்டிலும் இவ்வாறான நாடகங்கள் மேடையேற்றப்பட தடைவிதித்தனர்.,

இந்நிலையில் மறைசார் நாடகங்கள், உலகியல் நாடகங்களினின்று வேறுபடுத்தப்பட்டன. கேளிக்கை நாடகங்கள் (Carnival plays) பொது மக்களின் வரவேற்பைப் பெற்றன. இவ்வரலாற்றுக் காலத்திலே தோற்றம் பெற்று மிக வேகமாக பரம்பிய லூதரின் சீர்திருத்தக் கொள்கைகள் நாடகங்களில் காணப்பட்ட சில சீர்கேடுகள் காரணமாக நாடகங்களின் மேடையேற்றங்களுக்குக் கடும் ஆட்சேபனை முன்வைக்கப்பட காரணங்களாக அமைந்தன.

இக்கட்டத்திலேயே பாடசாலைகளில் நாடகங்களை மேடையேற்றும் மரபு வழக்கிற்கு வந்தது. இவை கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தினரிடையே நிலவிய கொள்கைகளின் எதிர்ப்பு வாதங்களை. முன்வைக்கும் ஊடகமாகவே நெறியாள்கை செய்யப்பட்டன. 17ஆம் நூற்றாண்டில் இயேசு சபைக் குருமாரின் நெறியாள்கையில் நாடகங்கள் சிறப்புமிக்க பல கலைப் பண்புகளை உள்வாங்கி மிகத் தீவிரமாக வளர்ச்சி கண்ட நிலையில், பாடுகளின் நாடகங்கள் கிராமங்களிலும், துறவற மடங்களிலும் தஞ்சம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டன. ஜேர்மனியிலும், ஒஸ்ரியாவிலும் இவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றன.

18 ஆம் நூற்றாண்டு அறிவு வளர்ச்சியின் காலமாகக் கொள்ளப்பட்டது. இக்கால கட்டத்தில் மத்திய காலத்தில் வழக்கிலிருந்த பல நாடக மரபுகள், நாடகங்களுடன் தொடர்புடைய சின்னங்கள் ஜேர்மன் நாட்டில் அழிக்கப்பட்டன. எனினும், 19 ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றின் முதற் தசாப்தத்தில் மக்களுக்கு மீண்டும் நாடகத்தில் பற்றும், ஆர்வமும் ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட நாடகப் பிரதிகள் கிறிஸ்துவின் இராவுணவு முதல் அடக்கம் வரை ஐந்து காட்சிகளாக பிரிக்கப்பட்டன. நாடகத்திற்கு கட்டியம் கூறுவதாக கிறிஸ்து நல்லாயன் என்னும் காட்சி அமைப்பு இடம்பெற்றது. மேலும், தொடர்ச்சியாக பல மாற்றங்கள் செய்யப்பட்டு, தரமான மொழி வளத்துடன் இலக்கிய நயம் மேலோங்கிய பிரதிகள் ஆக்கம் பெற்றன. 18 ஆம் நூற்றாண்டின் பிற்கூறில் இடம்பெற்ற நாடகங்கள் ஒழுங்கான கால இடைவெளியில் இடம்பெறவில்லை. ஆனால், 1855 இற்குப் பிற்பட்ட காலத்தில் ஒழுங்கான கால இடைவெளியில், அதாவது, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேடையேற்றம் இடம்பெற்றது. சில இடங்களில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் நாடகங்கள் இடம்பெற்றதுண்டு.

(தொடரும்)

## மன்னார் மாதோட்டத் தமிழ் அறிஞர்களின் தமிழ்ப் பணிகள்

# கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் தமிழ்ப் பணிகள்

## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்


**மு. சுந்தரம் பாண்டியன்**

**(B.A. Hons., Dip. in Ed., M. Phil.)**

**தமிழ் வளவாளர், மட்டக்களப்பு**


*இக்கட்டுரையாளர் திரு. சுந்தரம் பாண்டியன் அவர்கள் கவிஞர் மொத்தம்போல் அவர்களின் தமிழ்ப் பணிகளை ஆய்வுக் கண்ணோட்டத்தில் அணுக முயற்சிக்கின்றார். இவருடைய இந்த முயற்சியில் மாதோட்ட புலவர்களில் முதன் முதலாக அறியப்படுகின்ற லோறஞ்சுப் புலவர் அவர்களின் மாணவப் பரம்பரையினரைச் சுட்டிக்காட்டி, அம்மாணவர்களில் ஒருவரான குருகுல நாட்டுத் தேவரின் வழிவந்த சுண்டிக்குளி கபிரிகேல் புலவரின் மருகரே கவிஞர் செபமாலை மொத்தம் போல் (1924 - 1982) என விளக்கிக் காட்டுகின்றார். கவிஞர் மொத்தம்போல் அவர்களுடைய படைப்புகளின் பெறுமதியை இக்கட்டுரை வாயிலாக நமக்கு இனம் காட்டுகின்றார். (பதிப்பாசிரியர்)*

### முன்னுரை

இலங்கைத் தாய்த்திரு நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணம தமிழ்பேசும் மக்களின் தாயகப் பகுதியாக இரண்டாயிரம் ஆண்டு காலமாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. இதனை நிரூபிப்பதற்கான அகச்சான்றுகளாக சங்கப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனாரின் ஏழு செய்யுட்கள் சான்று பகர்கின்றன. அவை அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல் ஆகிய பதினெண் மேற்கணக்குத் தொகை நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புலவர் தொடர்பான கருத்துக்களில் சில வாதப்பிரதிவாதங்கள் நிகழ்த்தப்பட்டாலும் பெரும்பாலான அறிஞர்கள் இக்கூற்றினை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன் தொடர் வரலாறு குறிக்கும் நூல்கள் இடைப்பட்ட சில நூற்றாண்டுகளுக்கு கிடைக்காவிட்டாலும் சமகாலம் வரைக்கும் தமிழ் இலக்கண இலக்கிய அறிவில் போதுமான உள்ளார்ந்து உணர்ந்த தகைமை நிரம்பிய புலவர்கள் கிராமங்களில் வாழ்ந்து தம்மாலான இலக்கியப் பணியினை ஆற்றி வருகின்றனர்.

இத்தகையோர் ஆனையிறவுக்குத் தென்பால் மோதரகம ஆற்றைத் தெற்கெல்லையாகவும் கொட்டியாரத்தைக் கிழக் கெல்லையாகவும் கொண்டு வரலாற்று ஆதாரங்களில் *வன்னிப்பிரதேசம்* எனச்சிறப்பிக்கப்படும் தமிழர் தாயக இதயப் பகுதியில் பல அறிஞர்கள் வாழ்ந்து தமிழ் அன்னையைத் தாம் ஆக்கிய அணிகலன்களால் அலங்கரித்து மகிழ்ந்துள்ளனர்.

போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் இம்மக்களில் கரையோரப் பிரதேசங்களை அண்டி வாழ்ந்தோர் கிறிஸ்து மறையைத் தம் உயிர் உடலோடு இரண்டறக் கலந்த நிலையில் ஏற்று அம்மறை கூறும் அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு, மாண்பு மற்றும் பிறர் சிநேகம் ஆகிய இன்னோரன்ன நன்னெறியைக் கடைப்பிடித்து ஏற்று வாழ்ந்தனர். அதிலும் குறிப்பாக கி.பி 1544ஆம் ஆண்டளவில் மன்னார் பிரதேச மக்களில் பலர் புனித பிரான்சீஸ் சவேரியார் அவர்களின் தூய்மையான கரங்களினால் திருமுழுக்குப் பெற்று, கத்தோலிக்க மறையைக் கடைப்பிடித்து வாழத் தொடங்கினர். இப்பெரும் பாக்கியம் மன்னார் மாதோட்ட மக்களுக்கே கிடைக்கப்பெற்ற நற்பேறாக அமைந்தது.

புனித பிரான்சீஸ் சவேரியார் தொடர்பாக பேசப்பட்டு வரும் கதைகளில் ஒன்றைக் கூறுவது, பொருத்தமாக அமையலாம். அதாவது இந்தியா கோவாப் பகுதியிலிருந்து மன்னார்த் தீவின் மேற்குக் கரையில் வந்திறங்கிய புனிதர், கால்நடையாக தற்போதுள்ள பட்டித்தோட்டம் அதாவது புகையிரதக் கடவை வரைக்கும் வந்தார்களாம். அவர் திருப்பாதம்பட்ட இடம் வரைக்கும் மன்னார்த் தீவில் நன்னீர்க் கிணறுகள் காணப்பட அவர் திருப்பாதம் பதியாத தீவின் ஏனைய பிரதேசம் தற்போது மன்னார் நகர் அமைந்துள்ள பிரதேசம் உப்புநீர்க் கிணறுகளாகக் காணப்படுவதாம்.

புனித பிரான்சீஸ் சவேரியார் கரங்களால், திருமுழுக்குப் பெற்ற புதுக்கத்தோலிக்க மக்கள் அன்றைய காலகட்ட அரசாட்சியாரால், பலவகை இன்னல்கள், கொடூரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. இதன்போது சுமார் எழுநூறு கத்தோலிக்க மக்கள் வேதசாட்சிகளாக மரணித்த வரலாறும் வேதனையோடு குறிப்பிட வேண்டியதொன்றாகும். இந்நிலையிலும், இயேசு மார்க்கத்தில் பற்றுறுதி கொண்ட பக்தர்களாகவே அன்பு நிறைந்த வாழ்க்கையினை மக்கள் மேற்கொண்டு வாழ்ந்தனர்.

இம்மக்கள் சமூகத்திலிருந்து, சிறந்த தமிழ்க் கத்தோலிக்க புலவர்கள் தமது சமயப் போதனைகளைக் கொண்ட கதைகளைக் கருப்பொருளாகக்கொண்டு, நாடகங்களையும், வாசகப்பாக்களையும், பிரபந்தங்களையும், ஏனைய சிற்றிலக்கிய வடிவங்களான, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, அந்தாதி, பரணி போன்ற இலக்கிய வடிவங்களையும் கொண்டு பாக்கள் இயற்றினர். இவ்விலக்கிய ஆக்கங்கள் யாவும் மக்களை வாழ்வாங்கு வாழும் நெறிக்கு இட்டுச்சென்றது.

இதன் அடிப்படையில், மன்னார் மாதோட்டப் பிரதேசம் கத்தோலிக்க மக்களின் தனித்துவத் தன்மை செறிந்த வாழ்விடமாக சுமார் ஐந்நூறு ஆண்டுகள் கொண்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டமைந்த சிறப்புக்குரியதாகின்றது. எனினும், இப்பிரதேசத்தில் கிடைக்கும் அகச் சான்றுகளைக் கொண்டு ஆராயுமிடத்து, கி.பி. 1700 ஆம் ஆண்டுகளிலிருந்துதான் எழுத்துருவிலான இலக்கியங்கள், நாடகங்கள் எமக்குக் கிடைக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில், கட்டுக்கரைக் குளம் எனப்படும் இராட்சத குளப் பிரதேசத்துள் அமைந்து காணப்பட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் அதாவது மருதமடு அன்னையின் திருத்தலத்தை அண்மித்த பகுதிகளில் மக்கள் செறிந்து வாழ்ந்தனர்.

அச்சமூகத்திலிருந்துதான் மாதோட்ட முதற் கிறிஸ்தவப் புலவரான லோறஞ்சுப்பிள்ளை ஆசிரியரும், புலவருமான முதல் நாடக இலக்கிய ஆக்க நாயகன் அடையாளம் காணப்படுகிறார். இவர் வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்.

இவர் தாம் வாழ்ந்த காலத்தில், தனது பிரதேசத்தில் வாழ்ந்த சிறந்த மாணவர்களை ஒவ்வொரு சாதி அமைப்புக்களில் இருந்து தேர்ந்தெடுத்து திண்ணைப்பள்ளியில் தமிழ்க் கல்வியுடன், கத்தோலிக்க கல்வியினையும் ஊட்டி சிறப்பான புலமை நிறைந்த சீடர் பரம்பரையினரை தோற்றுவித்த சிறப்புக்குரியர்.

அன்னாரின் மாணவ பரம்பரையினரே சமகாலம் வரைக்கும் இப்பிரதேசங்களில் வாழ்ந்து, புனித கத்தோலிக்க மறைக்கும், தமிழ் மொழிக்கும் அருந்தொண்டாற்றி, மறைந்தும், வாழ்ந்தும் வருகின்றனர். முதற் பாவலர் தன் மாணாக்களுடன் திண்ணைப்பள்ளி நிறுவிக் கற்பித்த இடம் துவரங்கேணி புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு அண்மையிலுள்ள மன்றுக் குன்று (தற்போதைய பெயர் மண்டுக் குண்டான்) என்று கொள்ள ஆதாரங்கள் உள்ளன.

இங்கு தமது மாணாக்கருக்கு இலக்கணம், இலக்கியம், யாப்பு, அணி என்பன நிறைவாகக் கற்பித்து தேறின பின்னர், அவர்கள் எவ்வகையில் செய்யுட்கள் இயற்ற வேண்டும் என்று வினவ அவ்வினாவிற்குப் புலவர் அவர்கள்,

**வல்லசிலுவை மரத்தைப் புயத் தேந்திச்**
**சொல்லரிய வாதைத் துயரோடு – கல்வாரி**
**மேட்டுக்கு மேல் நடந்த வேதபரனே யெமது**
**பாட்டுக்கு முன் னிற்ப தாம்.**

என்னும் வெண்பாவைப் பாடிக் காண்பித்து, மாணாக்கரையும், பாடுந்திறனுக்கு இட்டுச்சென்றுள்ளார்.

இவர் இயற்றிய நாடகம் ***மூவிராசாக்கள் வாசகப் பாவாகும்.*** இந்நாடகத்தின் காப்புச் செய்யுளே முற்கூறப்பட்டதாகும். இவருடைய ஏனைய ஆக்கங்கள் எவையும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

லோறஞ்சுப் புலவரின் சீடர்கள் பிற்காலத்தில் கிறிஸ்தவ போதனைகள் செறிந்த பல நாடகங்களைத் தொல்காப்பியம் கூறும் யாப்பு மரபிற்குப் பிறழாத வகையில் பாடியுள்ளனர். அவை அனைத்தும் இப்பிரதேசத்தின் முதுசச் சொத்துக்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகும்.

புலவர் அவர்களின் சீடர்களில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவர்கள் ***மரியானுப் புலவர், குருகுல நாட்டுத் தேவர், வெள்ளை நாடார் புலவர், சந்தியோகுப் புலவர்*** ஆகியோராவார். இம்மாணாக்கருடன் தமது மகளையும் சேர்த்துக் கற்பித்தவர் என்பதையும் அறியக்கூடியதாயுள்ளது. அம்மகள் வயிற்றுப் பேரனே பின்னாளில் சிறப்பான நாடகங்களைப் பாடிய ***கீத்தாம்பிள்ளைப் புலவர்*** ஆவார்.

கத்தோலிக்க தமிழ்ப் பெரும் புலவர்களான இவர்கள் இயற்றிய நாடக வடிவங்கள் நூற்றுக்கணக்கானவை. அவை அனைத்தும் இக்காலம்வரை அச்சேறாமல் இருப்பது துர்ப்பாக்கிய நிலையே. கட்டுப்பெட்டிகளுக்குள் கட்டுண்டு கிடந்த பல ஏடுகள் கால அரக்கனின் கையால் கவர்ந்து செல்லப்பட்டுள்ளன. இக்குறை 1960ஆம் ஆண்டுகளில் சிறிதோர் அளவு நீங்கியது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கீத்தாம்பிள்ளைப் புலவர் வட பாங்கில் பாடியுள்ள ***என்றிக்கு எம்பரதோர் நாடகத்தை*** 1964 இலும், பெயர் தெரியாத புலவரால் பாடப்பட்ட ***மூவிராசாக்கள் நாடகத்தை*** 1966 இலும், ஆனுப்பிள்ளைப் புலவர் இயற்றிய ***ஞானசவுந்தரி நாடகத்தை*** 1967 இலும் அச்சிற்பதிப்பித்து வெளியிட்டுள்ளார். நானாட்டான் கலாசாரப் பேரவையினர் 1994 இல் ***சந்தொம்மையார் வாசகப்பாவை*** அச்சிட்டு, மக்களுக்கு அளித்து போற்றுதலைப் பெறுகின்றனர்.

லோறஞ்சுப்பிள்ளை ஆசிரியரின் மாணாக்கரில் ***குருகுல நாட்டுத் தேவர்*** 1780 ஆம் ஆண்டுகள் அளவில் தென்பாங்கு ***என்றிக்கு எம்பரதோர் நாடகம், திருச்செல்வர் நாடகம*** பாடிய பெரும் புலவர் ஆவார். குருகுலநாட்டுத் தேவரின் மாணாக்கரில் சிறந்த புலவராக விளங்கியவர் ***பவளமலை காத்த தேவன்.*** இவரும் சில நாடகங்களைப் பாடியதுடன், தனது குருவான தேவரின் நாடகத்துக்கு சாற்றுகவியும் வழங்கிய பெருமைக்குரியவர்.

இப்புலவரிடம் தொடர்புகொண்டு பாடல் கேட்டவர் என அறியப்படும் பெரிய சமரர் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் ***வயிரமுடிகாத்த வச்சிரநாட்டுத் தேவன்*** சிறப்பான நாடகங்களை ஆக்கிப் பெருமைக்குரிய தமிழ்ப்பணி புரிந்துள்ளார். இவருடைய மகன் ***சின்னச்சமரர்*** எனச் சிறப்பித்து அழைக்கப்பட்ட புலவர் அவர்களும் தந்தையைப் போலவே, இலக்கணம், இலக்கியம், மருத்துவம், மாந்தீரகம், சிற்பசாத்திரம் முதலியவற்றில் பெருந்திறமை படைத்தவர். இவர் பாடிய செய்யுட்கள் ஏராளம்.

பெரிய சமரர், சின்னச் சமரர் வழியில் கி.பி. 1910 ஆம் ஆண்டில், சுண்டிக்குளிக் கிராமத்தில் விறாவு மொத்தம் என்பவருக்கு மகனாக அவதரித்தவர் **கபிரிகேல் புலவர்.** இவரை மக்கள் வரகவி எனச் சிறப்பித்து வாஞ்சையோடு அழைத்தனர். ***மாதோட்டக் கிறிஸ்தவ தமிழ் நாடகத்திற்குச் சிறப்பான பணியாற்றியவர்களின் வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்குபவர் கபிரிகேல் புலவர் அவர்கள்.*** இவர் பாடிய நாடகங்களாவன; திருஞான ரூபன், அந்தோனியார் வாசகப்பா, அடைக்கலமாதா வசன வாசகப்பா, சன்நீக்கிலார் நாடகம், சேசார் எம்பரதோர் நாடகம், சந்தொம்மையார் நாடகம் ஆகியவற்றுடன், மழைக்காப்பியமொன்றும், ஏனைய ஏராளமான பிரபந்தங்களையும் பக்தி ததும்பப் பாடியுள்ளார். இவருடைய பதிகங்கள் பல புனித அந்தோனியார் பெயரில் பிராத்தனை வேண்டிப் பாடப்பட்டவை. அதன் மூலம் தீராத நோய் பிணிகள் தீர்ந்து சுகம் பெற்று வாழ்ந்த, வாழும் மக்கள் இன்றுவரை அநேகர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் புலவரின் பெருமைக்கு சான்றுரைப்பர். ***சுண்டிக்குளிப் புலவர்*** என்ற பெயருக்கே இன்றளவும் தனி மரியாதையும், மதிப்பும், பக்தியும் மக்களிடையே காணப்படுகின்றது.

மன்னார் மாதோட்ட முதற்கிறிஸ்தவப் பாவலர் லோறஞ்சுப்பிள்ளைப் புலவரின் சீடர்களில் ஒருவரான குருகுல நாட்டுத் தேவரின் வழிவந்த சுண்டிக்குளி கபிரிகேல் புலவரின் மருகரான கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் (1924 - 1982) தமிழ்ப்பணிகள் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தக்க இடம் கொடுக்கக்கூடிய அளவுக்கு கனமானதெனினும், அவையாவும் கவனிப்பாரற்று அங்குமிங்குமாக அலுமாரிக்குள் அடங்கிக் கிடப்பது மிகுந்த வேதனைக்குரிய நிகழ்வாகும்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து, கத்தோலிக்க சமயத்துக்கும், தமிழ் மொழிக்கும், சமூகத்துக்கும் அருந்தொண்டாற்றி ஆசிரியராக, அதிபராக, சித்த மருத்துவராக, ஆய்வாளராக மன்னார் பிரதேச கிறிஸ்தவ இலக்கியச் சேகரிப்பாளராகத் திகழ்ந்திலங்கிய கவிஞர் அவர்களின் பணியினை மதிப்பிடுவது தமிழ் அன்னையின் மகிமையை அலங்கரிக்கவே அன்றி வேறில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகாலம், அழியாத அகச்சான்றுகளைக் கொண்டு வாழும் தமிழ்மொழியானது தமது செல்வக் குழந்தைகளாக சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மார்க்கங்களுக்குரிய இலக்கியப் பொக்கிசங்களைக் கொண்டுள்ளது. இருநூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமியக் காப்பியங்கள் தமிழில் காணப்பட்ட போதிலும், அவற்றின் பெருமைகளை பேராசிரியர் ம. மு. உவைஸ் அவர்கள் எடுத்துக் காட்டும் வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கொப்பவே, மன்னார் மாதோட்டத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட ஆண்டு காலமாக ஆக்கப்பட்ட கிறிஸ்தவக் காப்பியங்கள், நாடகங்கள், இலக்கியங்கள் சரிவர அடையாளப்படுத்தப்படாமையினால், அதன் அருமை பெருமைகளை அறிய முடியவில்லை.

அக்குறையினை கவிஞர் மொத்தம் போல் அவர்கள் நிவர்த்தி செய்துள்ளார். ஆனால் துரதிஷ்டவசமாக அவை இதுவரை வெளிக்கொணரப்படவில்லை. எனவே அவருடைய பணியானது உணரப்பட்டு வெளிப்படுத்தப்பட்டால், அவரால் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்துறைக்கு ஆற்றப்பட்ட பணி சரிவர உணரப்படும். பொதுவான நோக்கில் அன்னாரின் பணிகள் பல்கலைக்கழக மட்டத்தில் தனியொரு பிரிவு இயங்குவதற்கு போதுமானவைகளாகும். எனவே வன்னிப் பல்கலைக்கழகம் தனித்து இயங்கக்கூடிய வகையில் உருப்பெற்று இதுவும், இது போலுள்ள மறைந்து கிடக்கும் ஏனைய கிறிஸ்தவ இலக்கியங்களும் மக்கள் மத்தியில் வெளிக்கொணரப்பட வேண்டுமென்பது உணர்வுபூர்வமாகத் தமிழ் அன்னையை நேசிக்கும் உள்ளங்களின் வேணவாவாகும்.

கவிஞர் மொத்தம் போல் அவர்கள் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர், பண்டிதர். அத்துடன் 1957ஆம் ஆண்டு சுண்டிக்குளிப் புலவர் எனச் சிறப்பிக்கப்படும் கபிரிகேல் புலவரால் புலவர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். வைத்தியாச்சாரி என்ற பட்டம் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டவர். நானாட்டான் கலாசாரப் பேரவை நடத்திய கவிஞர் தெரிவுப் போட்டியில் முதல் பரிசான தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு, கவிஞர் பட்டமளித்து பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் சிறப்பிக்கப்பட்டவர்.

இத்தனை சிறப்புக்குரிய கவிஞர் சுமார் இருபது ஆண்டு காலம் தொடர்ச்சியாக சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகையில் திருவிவிலியக் கருத்துக்கள் செறிந்த, மக்கள் வாழ்வை வளப்படுத்தக்கூடிய பலநூறு கவிதைகளை எழுதியுள்ளார். கவிஞரின் கவிதை வெளிவராத பாதுகாவலன் பத்திரிகை (1960 – 1982) அக்காலப் பகுதியில் வெளிவரவில்லை என்றே கூறலாம். அன்னாரின் அக்கவிதைகள் கத்தோலிக்க சமயக் கருத்துக்களை துல்லியமாக எடுத்துக் கூறியவை. மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றவையாகும்.

பல நூற்றுக்கணக்கான கவிதைகளின் பாடுபொருளாக கிறிஸ்து அன்புசார் போதனைகளும், மன்னிக்கும் மாண்பும், கருணை, இரக்கம், பிறருக்கு உதவும் பெருந்தன்மை போன்ற பல அம்சங்களை உள்ளடக்கி எழுதியுள்ளார். இக்கவிதைப் பண்புகள் கிறிஸ்தவ தமிழ்த்துறை சார்ந்த உயர் கல்விப் பீடத்தினால், ஆய்வுசெய்யப்பட வேண்டியவைகளாகும். தவிரவும், சமயப் பெரியார்களும், அறிஞர்களுமாகிய சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயக அடிகளார் போன்றோர் பற்றிய நெடுங்கவிதைகளும், ஆயர்கள் எமிலியான்பிள்ளை ஆண்டகை, தியோகுப்பிள்ளை ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை போன்றோர்மீது, தகவல் பா வகையில் நீண்ட வாழ்த்துப் பாக்களைப் பாடியுள்ளார். மருதமடு அன்னைமீது அளவுகடந்த பக்தி மீதுரப் பெற்ற கவிஞர் அவர்கள் மருதமடு மாதா பேரில் அஞ்சலிப்பா இயற்றிப் பதிப்பித்துள்ளார். அதன் கவித்துவம் சிறப்புக்குரியது. இவ்வாறு பல நூறு தனிப்பாடல்களை கவிஞர் இயற்றியுள்ளார். எதிர்காலத்தில் தமிழ் இலக்கியத்தில் இவை இடம்பெற, தமிழை - இம்மண்ணை நேசிக்கும் அனைவரும் முன்வந்து உதவ வேண்டும்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)



# 21வது உலக இளைஞர் தினத்தில் உலக இளைஞர்களுக்கு திருத்தந்தையின் செய்தி

## "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே"

**எனது அன்பான இளம் நண்பர்களே!**

21வது உலக இளைஞர் தினத்துக்காக நீங்கள் உங்களை ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் நான் மகிழ்வுடன் உங்களை வாழ்த்தி நிற்கிறேன். அத்துடன் சென்ற வருடம் ஆவணித் திங்களில் ஜேர்மனியில் நாம் பெற்றுக்கொண்ட வளமான பட்டறிவை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருகின்றோம்.

இவ்வருடம் உலக இளைஞர் தினம் தலத்திருச்சபைகளில் கொண்டாடப்படும். கொலோன் நகரில் தூண்டியெழுப்பப்பட்ட உங்கள் ஆர்வம் என்னும் சுடரை மீண்டும் பற்றியெரியச் செய்வதற்கு இது தகுந்த தருணமாய் அமைந்துள்ளது. உங்களில் அநேகம்பேர் இந்தச் சுடரை உங்கள் குடும்பங்களுக்கு, பங்குகளுக்கு, கழகங்களுக்கு, இயக்கங்களுக்கு எடுத்துச் சென்றுள்ளீர்கள். அதேவேளை இளைய தலைமுறையினரின் கிறிஸ்துவை நோக்கிய ஆன்மீகப் பயணத்தில் உங்களது அதிகளவான நண்பர்களையும் அழைத்துச் செல்வதற்கு இது தகுந்ததொரு தருணமாகவும் உள்ளது.

திருப்பாடலில் இருந்து எடுக்கப்பட்ட *'என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே"* (தி.பா. 119:105) என்னும் வசனத்தை உங்களுக்குரிய கருப்பொருளாக நான் தருகின்றேன். எமது அன்புக்குரிய திருத்தந்தை 2ம் யோவான் பவுல் திருப்பாடலின் இந்த வரிகளுக்குப் பின்வருமாறு விளக்கம் கூறியுள்ளார். "செபிக்கும் ஒருவர் தனது வாழ்வில் அடிக்கடி முகம் கொடுக்கும் இருண்ட பாதையில், தனது காலடிக்கு ஒளி கொடுக்கும் விளக்காக விளங்கும் இறைவனின் சட்டங்களுக்குத் தனது நன்றித் துதிகளைச் செலுத்துகின்றார். (பொது கேட்போர் அவை, புதன் 14, கார்த்திகை 2001.)

இறைவன் வரலாற்றில் தன்னை வெளிப்படுத்துகின்றார். அவர் மனிதருடன் பேசுகின்றார். அவர் பேசும் அந்த வார்த்தைக்கு ஆக்கும் சக்தி உண்டு. "வார்த்தை" என்பதற்கு எபிரேய மொழியில் பயன்படுத்தும் "டாபார்" (dabar) எனும் எண்ணக்கருவானது வார்த்தை, செயல், ஆகிய இரண்டையும் குறிப்பிடுகின்றது.. இறைவன் தான் செய்வதைச் சொல்கின்றார், சொல்வதைச் செய்கின்றார்.

பழைய ஏற்பாடு இஸ்ராயேல் மக்களுக்கு மெசியாவின் வருகையையும், "புதிய" உடன்படிக்கையை ஏற்படுத்துவதையும் பற்றி எடுத்துக் கூறுகின்றது. வார்த்தை மனுவுருத்தாங்கியதன் மூலம் அவர் தனது வாக்குறுதியை நிறைவுசெய்கின்றார். இது கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் தெளிவான விதத்தில் திட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

"மனிதனான இறைமகன் கிறீஸ்து தந்தையோடு ஒன்றாயிருக்கும் நிறைவானதும், இணையற்றதுமான வார்த்தை. அவரில் அவர் அனைத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். இதனைவிட வேறு வார்த்தை இல்லை" (N 65). திருவிவிலியத்தின் ஆசிரியர்களுக்கு ஏவுதல் அளித்ததன் மூலம் தெரிந்தெடுத்த மக்களை வழிநடத்திச் சென்ற பரிசுத்த ஆவி, இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு, நம்பிக்கை கொண்டோரின் இதயங்களைத் திறந்து விடுகின்றார். திருப்பணியாளர் அர்ப்பண வார்த்தைகளைக் கூறி அப்பத்தையும், இரசத்தையும், இறைமக்களுக்கு ஆன்மீக ஊட்டமளிக்கும் கிறீஸ்துவின் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றும்பொழுது, இந்தப் பரிசுத்த ஆவி நற்கருணைக் கொண்டாட்டத்தில் செயல்படுபவராகப் பிரசன்னமாயிருக்கின்றார். விண்ணரசை நோக்கிய எமது இவ்வுலகப் பயணத்தில் முன்னேற்றம் காண்பதற்கு, நாம் அனைவரும் வார்த்தையாலும், நித்திய வாழ்வின் அப்பத்தினாலும் ஊட்டம் பெறவேண்டும். ஏனெனில் இவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதவை.

அப்போஸ்தலர்கள் மீட்பின் வார்த்தையைப் பெற்று, அதனைத் திருச்சபையின் நகைப் பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய பெறுமதிமிக்க இரத்தினக்கல்லைப் போன்று, தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களுக்கு அளித்துள்ளார்கள். திருச்சபையின்றேல் இந்த முத்து தொலைந்து போகும் அன்றேல் அழிந்து போகும் ஆபத்திற்குள்ளாகும்.

எனது அன்பான இளம் நண்பர்களே! இறைவார்த்தையையும், திருச்சபையையும் அன்பு செய்யுங்கள். இது மிகவும் பெறுமதிமிக்க திரவியத்தை அடைந்து தருவதோடு, அதன் வளங்களை எவ்வாறு பாராட்டுவதென்றும் உங்களுக்குக் கற்பிக்கும்.

திருச்சபையானது உண்மையான வழியைத் தனது மக்களுக்குக் காட்டுவதற்கான பணியைத் தனது நிறுவுனரிடமிருந்து பெற்றுள்ளதால் அதனை அன்புசெய்து பின்பற்றுங்கள்.

தற்போதைய சிந்திக்கும் முறையினால் மக்கள் அடிக்கடி அடிமைகளாகப்படுவதினால், நாம் வாழும் இந்த உலகில் உண்மையான மகிழ்ச்சியை இனம் காண்பதும், கண்டறிவதும் இலகுவான காரியமல்ல.

தாங்கள் "சுயாதீனமானவர்கள்" என்று அவர்கள் எண்ணலாம். ஆனால் அவர்கள் தவறான விதத்தில் வழிநடாத்தப்பட்டு, தவறுகளின் அன்றேல் நேர்மையற்ற கற்பனா சக்திகளின் மாயைகள் மத்தியில் காணாமல் போய்விடுகின்றார்கள்.

"சுயாதீனம் தானே சுயாதீனத்தைப் பெறவேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. (சுற்றுமடல்: Veritatis splendor . 86) மனிதர் இருளில் தேடித் தடவிப்பார்க்கும் இருள் ஒளிபெற வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. இதனை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதை இயேசு எமக்குக் கற்பித்துள்ளார். "நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால் நீங்கள் உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' (யோவான் 8:31-32) மனுவுருவான வார்த்தை, உண்மையின் வார்த்தை, எமக்கு விடுதலையளித்து எமது சுதந்திரத்தை நன்மையை நோக்கி இட்டுச்செல்கின்றார்.

எனது அன்பான இளம் நண்பர்களே! இறைவார்த்தையை அடிக்கடி தியானியுங்கள். பரிசுத்த ஆவி உங்கள் ஆசிரியராகச் செயலாற்ற அனுமதியுங்கள். அப்பொழுது இறைவனின் எண்ணங்கள் மனிதருடையவை போன்றதல்ல என்பதை நீங்கள் கண்டறிவீர்கள். உண்மையான இறைவனை ஆழ்ந்து தியானிக்க நீங்கள் இட்டுச்செல்லப்படுவதையும், அவரது கண்களினூடாக வரலாற்று நிகழ்வுகளை வாசித்து அறியவும் கூடியவர்களாய் நீங்கள் இருப்பதைக் கண்டறிவீர்கள். உண்மையினால் பிறந்த மகிழ்ச்சியின் நிறைவை நீங்கள் சுவைப்பீர்கள்.

இலகுவானதோ, அன்றேல் வஞ்சகத்தன்மையினின்று விடுபட்டதோ அல்லாத வாழ்க்கைப் பாதையில் நீங்கள் கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்படும். சில சமயங்களில் நீங்கள் திருப்பாடல் ஆசிரியருடன் சேர்ந்து கூறுவதற்கான சோதனைக்கு உட்படுவீர்கள். "மிக மிகத்துன்புறுத்தப்படுகிறேன்" (தி.பா.119:107) திருப்பாடல் ஆசிரியர் செய்தது போன்று பின்வருவனவற்றை சேர்த்துக்கொள்ள மறக்கவேண்டாம். "ஆண்டவரே! உம் வாக்குறுதியின்படி என்னை உயிரோடு வைத்தருளும்... நான் என்னுயிரைக் கையில் வைத்துள்ளேன், ஆயினும் உம் திருச்சட்டத்தை நான் மறவேன்" (119: 107, 109) வார்த்தை வழியான இறைவனின் பிரசன்னம் அச்சம் என்னும் இருளை அகற்றும் விளக்காகவும், அதிகம் கஷ்டமான தருணங்களில் பாதைக்கு ஒளியாகவும் இருக்கின்றது.

எபிரேயருக்கு எழுதிய மடலின் ஆசிரியர் எழுதியது. "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. (4:12) ஆன்மீகப் போராட்டங்களின்போது, அத்தியாவசியமான "ஆயுதமாக" இறைவார்த்தையைக் கையாள வேண்டுமென்பதை கடுமையான கட்டளையாக ஏற்றல் அவசியம்.



நாம் இதற்குச் செவிமடுக்கவும், கீழ்ப்படியவும் கற்றுக்கொள்வோமானால் இது பயனுள்ள செயற்பாடாய் அமைவதோடு, நிறைந்த விளைவுகளையும் காண்பிக்கும்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி விளக்குவது, விசுவாசத்தில் கீழ்ப்படிவதற்கு (இது இலத்தீன் மொழியில் கேட்டல் அல்லது செவிமடுத்தல்) நாம் கேட்ட இறைவார்த்தைக்குச் சுயாதீனமாக எம்மைக் கையளிக்க வேண்டும். ஏனெனில் தன்னிலேதானே உண்மையாய் இருப்பவரான இறைவனால் இந்த உண்மைக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்படிதல் என்னும் இந்த வகையான செவிமடுத்தலுக்கு ஆபிரகாம் எடுத்துக்காட்டாக விளங்கும் அதேவேளை, சாலமோன் வார்த்தையில் அடங்கியுள்ள ஞானத்தின் உணர்வுமிக்க பரிசோதகராகத் தன்னைக் காண்பிக்கின்றார். "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்று இறைவன் அவரிடம் கூறியபோது, ஞானம் நிறைந்த அந்த அரசன் அளித்த பதில் "ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்" (1அர.3:5,9)

"ஞானம் நிறைந்த உள்ளத்தை"ப் பெறுதல் என்பதன் இரகசியம், உங்களது இதயத்தைக் கவனமாய் உற்றுக்கேட்கக் கூடிய விதத்தில் பயிற்சிப்படுத்துதல் என்பதாகும். இறைவார்த்தையை விடாப்பிடியாகத் தியானிப்பதன் மூலமும், இதனை அதிகமதிகம் அறிந்துகொள்வதில் நிலையாயிருப்பதற்குத் தன்னை அர்ப்பணிப்பதன் ஊடாக இதில் உறுதியாக வேரூன்றியிருப்பதன் மூலமும் இதனை அடையலாம்.

எனது அன்பான இளம் நண்பர்களே! வேதாகமத்துடன் நெருங்கிய உறவுகொள்ளுங்கள். அதனை உங்களது கரங்களில் வைத்திருங்கள். அவ்வாறாயின் நீங்கள் பின்தொடர்ந்து செல்லவேண்டிய பாதையை உங்களுக்குத் தெரிவிக்கும் திசைகாட்டியாக இது உங்களுக்கு அமையும். இதனை வாசிப்பதன் மூலம் நீங்கள் கிறீஸ்துவை அறிந்துகொள்வீர்கள்.

இதனைப்பற்றி புனித ஜெறோம் கூறியதைக் கவனியுங்கள். (Pl24, 17, cf. Deiverburn 25) இறைவார்த்தையைக் கற்று சுவைப்பதற்குக் கொடுக்கப்படும் நேரம் உண்மையானதும், நிஜமானதுமான ஆன்மீகப் பயணத்தின் தங்குமிடமாக உள்ளது. நாம் திருவிவிலியத்தில் இருந்து ஒரு பந்தியை வாசித்த பின்னர் மீண்டும் அதனை வாசித்து, அதிலுள்ள பிரதானமான ஒரு செய்தியை எடுத்த பின்னர் நாம் தியானத்தில் ஈடுபடுகின்றோம். இது எமது உள்ளார்ந்த சிந்தனையின் நேரம். அப்பொழுது எமது ஆன்மா இறைவனின் பக்கமாகத் திரும்பி, அவ்வார்த்தை இன்று எமக்குக் கூறுவது யாது என்பதை விளங்கிக்கொள்ள முயற்சிக்கின்றது. பின்னர் நாம் தாமதித்து இறைவனுடன் நேரடியாக உரையாடுகின்றோம். இறுதியாக நாம் ஆழ்தியானத்தில் ஈடுபடுகின்றோம். இது கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு எமது இதயங்களைக் கவனமுடன் வைத்திருப்பதற்கு உதவிபுரிவதோடு, அவரது வார்த்தை 'பொழுது புலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும்வரை அது இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது" (2 பேதுரு 1:19) என்பதாகவும் உள்ளது. வார்த்தையை வாசித்து கற்று தியானிப்பதானது நாம் கிறிஸ்துவுக்கும் அவரது படிப்பினைகளுக்கும் உறுதியான பிரமாணிக்கத்துடன் இருக்கும் பொருட்டு எமது வாழ்வுக்குள் பாய்ந்து செல்லல் வேண்டும். புனித யாகப்பர் எமக்குக் கூறுவது: "இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்துவிடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவார். ஆனால் நிறைவான விடுதலை அளிக்கக்கூடிய சட்டத்தைக் கூர்ந்து கவனித்து அதைத் தொடர்ந்து கற்போர் தாம் கேட்பதை மறந்து விடுவதில்லை. அவர்கள் அதற்கேற்ற செயல்களைச் செய்வார்கள். தம் செயல்களால் பேறுபெற்றவர்கள் ஆவார்கள். (யாக்கோபு 1:22 – 25)

இறைவார்த்தைக்குச் செவிமடுத்து அதனை எப்பொழுதுமே மீளாய்வு செய்பவர்கள் தமது இருத்தலுக்கு உறுதியான அடித்தளம் இடுகின்றார்கள். "ஆகவே நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்." (மத். 7:24) எத்தகைய பயங்கரக் காற்றடித்தாலும் அது அழிவுறாது. கிறிஸ்துவில் உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு, அவரது வார்த்தைகளை மகிழ்வுடன் ஏற்று [illegible] படிப்பினைகளை நடைமுறைப்படுத்தல் அவசியம். மூன்றாவது ஆயிரமாம் ஆண்டின் இளைஞர்களே! உங்களுடைய நிகழ்ச்சித்திட்டம் இதுவே: இறைவார்த்தையில் உறுதியாக நங்கூரமிடப்பட்ட, எமது காலத்தில் தேவைகளுக்குப் பதிலிறுக்கக் கூடிய தகுதியுள்ள, தூர தேசங்களில் நற்செய்தியைப் பரப்புவதற்கு ஆயத்தமாயிருக்கின்ற, புதிய தலைமுறையின் அப்போஸ்தலருக்கான அவசரத் தேவை தென்படுகின்றது. இதனையே இறைவன் உங்களிடம் கேட்டு நிற்கின்றார். இதற்காகவே திருச்சபை உங்களை அழைக்கின்றது. உலகிற்கு இதனைப்பற்றிய விழிப்புணர்வு இல்லாவிட்டாலும் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது இதனையே. இயேசு உங்களை அழைக்கும்போது – விசேடமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் அன்றேல் குருத்துவ வாழ்வில் தன்னைப் பின்செல்லும்படி அவர் உங்களிடம் கேட்கும்போது, தாராள உள்ளத்துடன் அவருக்குப் பதிலிறுக்க அஞ்சவேண்டாம். ஆம் அச்சம் கொள்ள வேண்டாம். அவரில் நம்பிக்கை கொள்ளுங்கள், ஏமாற்றமடைய மாட்டீர்கள்.

அன்பான நண்பர்களே! 21வது இளைஞர் தினத்தை சித்திரைத் திங்கள் 9ம் நாள் குருத்தோலை ஞாயிறன்று கொண்டாடுவோம். 2008ம் ஆண்டு ஆடித்திங்கள் சிட்னியில் நடைபெறவிருக்கும் இளைஞர் தினத்தை நோக்கிய பயணத்தை எமது இதயங்களில் ஆரம்பித்து வைப்போம். அந்த மாபெரும் நிகழ்வுக்கான கருப்பொருளாகிய "பரிசுத்த ஆவியும் பணியும்' என்பதன் சித்திக்காக ஒன்றிணைந்து சிந்தித்து ஆயத்தம் செய்வோம். உண்மையின் ஆவியானவரும், கிறிஸ்துவை எமக்கு வெளிப்படுத்துபவரும், வார்த்தை மனுவுருவாக உதவியவரும், உண்மையின் நிறைவுக்கு இட்டுச்செல்லும் வார்த்தையின் மீட்புக்கு ஒவ்வொருவரினதும் இதயங்களைத் திறந்துவிடுபவருமான பரிசுத்த ஆவியை நோக்கி இவ்வருடம் எமது கவனத்தைத் திருப்புவோம்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

விவிலிய விளக்கம்... விவிலிய விளக்கம் .... விவிலிய விளக்கம்...

# நீர் வாசிப்பதன் பொருள் உமக்குத் தெரிகிறதா?

## யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்? (தி.பணி 8:30,31)

*"நீர் வாசிப்பதன் பொருள் உமக்குப் புரிகிறதா?"* என்ற பிலிப்புவின் கேள்வியும் *"யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு தெரிந்துகொள்ள முடியும்?"* என்ற எத்தியோப்பிய நிதியமைச்சரின் பதிலும் இன்றும் நமது திருச்சபையில் மீண்டும் மீண்டும் எதிரொலிப்பதாக உள்ளது. திருவிவிலியத்தில் விளங்கிக்கொள்ளக் கஸ்ரமான வார்த்தைகள், சொற்கள், சொற்றொடர்கள், போன்றவற்றிற்கு விவிலிய அறிஞர்களின் பதில்களை இப்பகுதியில் தொடர்ச்சியாகத் தர இருக்கின்றோம். - பதிப்பாசிரியர்

கேள்வி: *பாலை நிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல் மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும் (யோவா 3:14) என்று குறிப்பிட்டுள்ளதே மோசே உயர்த்திய பாம்பை எப்படி மானிட மகனாம் இயேசுவுக்கு பொருத்திக் காண்பது?*

பதில் : செங்கடல் சாலை வழியாகப் பயணப்பட்ட இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கும் மோசேவுக்கும் எதிராகப் பேசினர்.. அவர்களைத் தண்டிக்குமாறு கொள்ளிவாய்ப் பாம்புகளை மக்களிடம் ஆண்டவர் அனுப்பினார்.

அவர்கள் மனம் வருந்தியபோது அவர்களைக் காப்பாற்ற மோசே கடவுளிடம் வேண்டிக்கொண்டார். அதன்படி வெண்கலப் பாம்பு ஒன்றைச் செய்து கம்பத்தில் பொருத்தி மேலே உயர்த்தப்பட அப்பாம்பைப் பார்த்த மனிதர் உயிர் பிழைத்தனர் என்று எண்ணிக்கை நூல் குறிப்பிடுகின்றது. (21:4-9).

அதாவது எந்தப் பாம்பு சாவுக்கு காரணமாக இருந்ததோ அதே பாம்பை வாழ்வின் அடையாளமாக கடவுள் மாற்றக் கூடியவர் என்பது இங்கே வலியுறுத்திக் காட்டப்படுகிறது. கடவுள் எதையும் தன்னுடைய மீட்புச் செயலுக்கு கருவியாகப் பயன்படுத்த வல்லவர் என்பதுதான் இங்கே மையப்போதனை.

இந்தப் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்டு யோவான் மேற்கண்ட முறையில் மோசே உயர்த்திய பாம்புடன் மனுமகனை ஒப்பிட்டுக் காண்கிறார் (யோவா 3:14).

அதாவது மோசேயால் உயர்த்தப்பட்ட பாம்பு போன்று மனிதர்களால் சாகடிக்கப்பட்டு சிலுவையில் உயர்த்தப்பட்ட மானிட மகன் மக்களுக்கு மீட்பாக அமைந்துள்ளார் என்பதைத்தான் யோவான் குறிப்பிட விரும்புகிறார்.

பாவத்தில் இறந்த மனிதருக்கு சிலுவையில் தொங்கும் இயேசு வாழ்வாக அமைகிறார். அதுமட்டுமல்ல மானிட மீட்புக்காக இயேசு சிலுவையில் தனது உயிரை கையளிக்க வேண்டும் என்ற இறைத்திட்டத்தை வலியுறுத்தவே மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும் என்ற இயேசுவின் வார்த்தைகளை யோவான் குறிப்பிடுகிறார்.

மோசேயால் உயர்த்தப்பட்ட பாம்பைப் பார்த்து உயிர்பெறுவர் என்ற வரிகளை படிக்கும் சிலர், "இது சிலை வழிபாடு அல்லவா?" என்று தவறாகக் கருதுகிறார்கள். இங்கே பாம்பு வாழ்வு கொடுக்கிறது என்பதை வலியுறுத்தவில்லை. மாறாக கடவுளின் ஆற்றலைதான் வாழ்வின் அடிப்படையாகக் காணவேண்டும்.

கேள்வி : *"வாள் இல்லாதவர் தம் மேலுடையை விற்று வாள் வாங்கிக்கொள்ளட்டும்" (லூக் 22:36) என்று இயேசு கூறுகிறாரே இது தீவிரவாதத்தை தூண்டுவது போல் அல்லவா உள்ளது?*

*பதில் :* மேற்கண்ட இயேசுவின் வார்த்தைகளுக்கு நேரடியாக பொருள் கண்டு தீவிரவாதத்தை இயேசு தூண்டுகிறார் என்று நினைப்பது தவறு. இந்த வார்த்தைகளை இரண்டு விதமாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். முதலில் இந்த வசனத்தை முழுமையாகப் படிக்கும்பொழுது இயேசுவின் சீடர்கள் தங்கள் பயணத்தில் எடுத்துச் செல்லவேண்டிய பொருள்கள் பற்றி குறிப்பிடப்படுகிறது.

"பணப்பை, வேறு பை போன்ற பொருட்களுடன் வாள் ஒன்றையும் எடுத்துச் செல்லட்டும்" என்று இயேசு குறிப்பிடும்போது அக்கால யூத மக்கள் பயணத்திற்கு எதை எடுத்துச் செல்வார்களோ அதைக் குறிப்பிடுகிறார். அதாவது தங்கள் சுய பாதுகாப்புக்காக வாள் எடுத்துச் செல்வது அன்றைய யூதர்களுடைய வழக்கம். அந்த வழக்கத்தை இங்கே இயேசு குறிப்பிடுவதாக லூக்கா எழுதுகிறார்.

இரண்டாவதாக "ஆண்டவரே, இதோ இங்கே இரு வாள்கள் உள்ளன" என்று சீடர்கள் சொன்னபோது அவர்களிடம் "போதும்" என்று கூறி, (லூக் 22:38) சீடர்களுடைய தீவிர மனப்பான்மையை இயேசு கண்டிக்கிறார். எனவே வாள் என்ற வார்த்தைக்கு நேரடியாகப் பொருள் கொள்ளக்கூடாது. இதை உருவகமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதாவது திருச்சபை வேதகலாபனைக்கு உட்பட்ட காலத்தில் (தி. பணி. 8:1-3:9:1-2:12:1-5) கிறிஸ்தவர்கள் தங்களையே காத்துக்கொள்ள ஏதுவான கருவிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது லூக்காவின் போதனை.

விவிலியத்தில் குறிப்பாக லூக்கா நற்செய்தியில் வாள் என்பது இறைவார்த்தையை உருவகமாகக் குறிக்கிறது (2:35 தி. வெ 1:16:19:15, எபி.4:12) எனவே துன்பங்களையும் சோதனைகளையும் போராட்டங்களையும் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ள *வாள்* போன்ற படைக்கருவியைவிட இறைவார்த்தை என்ற ஆன்மீகக் கருவிதான் சிறந்தது, மேலானது என்பது இயேசுவின் போதனை (காண். எபே 6:11-17).

இயேசுகூட தான் சோதிக்கப்பட்ட தருணத்தில் இறைவார்த்தை என்ற படைக்கலனைக் கொண்டுதான் சாத்தானை முறியடித்தார் (மத் 4:1-14) அதனால்தான் இயேசு, பேதுருவிடம் "வாளை உறையில் போடு" என்று கூறி, உலக முறையிலான தீவிரவாதத்தைக் கண்டித்தார் (யோவா 8:11).



கேள்வி : *திருத்தூதர் பணிகள் என்ற நூலில் புனித பேதுரு மற்றும் புனித பவுல் பற்றிய பணிக்குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் மற்ற திருத்தூதர்களின் பணிகள் பற்றிய வரலாறு இல்லையே? இவர்கள் எந்த நாட்டில் பணிபுரிந்தார்கள் என்ற விவரம் உள்ளதா?*

பதில் : திருத்தூதர்கள் பன்னிருவரின் வரலாறு பற்றிய குறிப்புகள் கொடுப்பது *திருத்தூதர் பணிகள்* என்ற நூலின் நோக்கமல்ல யூதேயா, சமாரியா மற்றும் பிறஇனத்தாரிடையே நற்செய்தி பரவியது எப்படி? என்று கூறுவதுதான் இந்நூல் ஆசிரியரான லூக்காவின் நோக்கம்.

நற்செய்திகளில் குறிப்பிடப்படும் பன்னிரு திருத்தூதர்களில் பேதுரு பற்றி மட்டுமே திருத்தூதர் பணிகள் என்ற நூல் ஒரு சில குறிப்புகளைத் தருகின்றது. மரபுப்படி இவர் யூதேயாவில் பெரும்பாலும் போதித்து, இறுதியில் பேரரசர் நீரோவின் ஆட்சியில் உரோமையில் கைதியாகி கி.பி 64-ல் புனித பவுலுடன் மறைசாட்சியாக உயிர் நீத்தார்.

மற்றத் திருத்தூதர்கள் பற்றிய மரபுக் குறிப்புகள்தான் நமக்கு கிடைத்துள்ளன. *புனித அந்திரேயா.* இவர் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்து (மத் 4:19) இயேசுவின் சீடராக அழைக்கப்பட்டவர். இவர் பேதுருவின் சகோதரர். இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு சிறிய ஆசியாவிலும் (இன்றைய துருக்கி நாடு) உக்குரேயின் நாட்டிலும் பணியாற்றினார். நீரோவின் காலத்தில் கி.பி 60-ல் சிலுவையில் அறையப்பட்டு மறைசாட்சியாக உயிர் நீத்தார்.

*புனித பெரிய யாக்கோபு.* இவர் யோவானின் சகோதரர். இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு எருசலேம் திருச்சபையை தலைமையேற்று பணிபுரிந்து கி. பி 40லேயே அக்கிரிப்பா மன்னரால் தலைவெட்டப்பட்டு இறந்தார். திருத்துாதர்களில் முதல் மறைசாட்சி இவர். பிற்காலத்தில் இவரது உடல் ஸ்பெயின் நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக ஒரு மரபு உண்டு. ஸ்பெயின் நாட்டின் பாதுகாவலர் இவர். *புனித சிறிய யாக்கோபு* (மாற் 15:4) இவர் யூதா ததேயுவின் சகோதரர். நம் ஆண்டவர் இயேசுவின் சகோதரர் என்று அழைக்கப்பட்டவர். எருசலேமின் ஆயராகப் பணியாற்றி அங்கேயே மறைசாட்சியாக கி.பி 62-ல் உயிர் நீத்தார்.

*புனித யோவான.* இவர் யாக்கோபின் சகோதரர். இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு சிறிய ஆசியாப் பகுதியில் குறிப்பாக எபேசு நகரில் திருச்சபையை நிறுவிப் பணியாற்றினார். இங்கிருந்துதான் நற்செய்தியையும் எழுதினார் என்பது மரபு. வயது முதிர்ந்த நிலையில் உரோமைக்கு சென்றபொழுது அங்கே மறைசாட்சியாக உயிர் நீத்தார்.

*புனித சிமியோன்.* தீவிரவாதி சிமியோன் என்று இவர் அழைக்கப்படுகிறார். புனித பர்த்தலேமேவுடன் பணியாற்றியவர். ஆண்டவரின் விண்ணேற்புக்குப்பின் எகிப்திலும் பின்னர் யூதா ததேயுவிடம் சேர்ந்து மொசப்பெத்தோமியாவிலும், பாரசீகத்திலும் போதித்தார். *புனித யூதா ததேயு.* யூதா என்று லூக்காவும் ததேயு என்று மாற்குவும் இவரை அழைக்கின்றார்கள். இவர் எகிப்து மொசப்பெத்தோமியா நாடுகளில் பணிபுரிந்து இறுதியில் பாரசீகத்தில் பணியாற்றியபோது உயிர் நீத்தார்.

*புனித பர்த்தலேமியு.* இவர் ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பிறகு எத்தியோப்பியா பாரசீகம் மற்றும் அர்மேனியாவில் நற்செய்திப் பணியாற்றி இறுதியில் அர்மேனியாவில் மறைசாட்சியாக உயிர் நீத்தார். இந்தியாவிற்கும் இவர் வந்தார் என்ற ஒரு மரபும் உண்டு. *புனித மத்தேயு.* இவர் ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பிறகு யூதேயா கலிலேயாவில் பணியாற்றி இறுதியாக இவரும் பாரசீகத்தில் பணிபுரிந்த காலத்தில் உயிர் நீத்தார். *புனித தோமாவைப்* பற்றி நம் எல்லாருக்கும் தெரியும். இந்தியாவின் திருத்துாதர். இவர் சென்னையில் மறைசாட்சியாக உயிர் நீத்தார்.

ஆக, அனைத்துத் திருத்துாதர்களுடைய பணிகள் மற்றும் அவர்களுடைய இறப்புப் பற்றி நாம் அறிவதற்கு கிறிஸ்தவ மரபுக்கள்தான் சான்றாக உள்ளன. முறையான வரலாற்று குறிப்புகள் நமக்கு கிடைக்கவில்லை.

யூன் 13ந் திகதி புனித அந்தோனியார் திருவிழா

சிறப்புக் கட்டுரை

# தலைசிறந்த மறைவல்லுனர் புனித அந்தோனியார்

அம்புறோஸ் பீற்றர்,
கொழும்பு - 13.



கத்தோலிக்க திருச்சபை கொண்டாடும் புனிதர் வரிசையில் அதி உன்னத இடத்தைப் பெற்றவர் புனித அந்தோனியார். 'தாழ்ச்சியோடு தரித்திரத்தோடு, கீழ்ப்படிதலோடு பொறுமையோடு நடைமுறையில் நடந்து காட்டுவதே பரிசுத்த ஆவி நம் வழியாகப் பேசுகின்ற பல்வேறு மொழிகள் எனக்கூறலாம்" என்றுகூறித் தனது வாழ்வால் செயல்படுத்திக் காட்டியவர் புனித அந்தோனியார்.

இவர் 1195ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 15ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் மார்டீன் மேரி என்ற தம்பதிகளுக்கு முதல் குழந்தையாக அரச மரபில் பிறந்தவர். திருமுழுக்கின்போது இவருக்கு வழங்கப்பட்ட பெயர் பெர்தினாந்து. 1210ம் ஆண்டில் புனித அகுஸ்தீனார் துறவறசபையில் சேர்ந்து 1219ஆம் ஆண்டு தனது 24வது வயதில் குருவானார்.

### திருத்தந்தையின் புகழுரை

திருத்தந்தை 12ம் பத்திநாதர் புனித அந்தோனியாரைப் பற்றி குறிப்பிடுகையில் "அவர் காலத்தவரும் நம் காலத்தவரும் அவருடைய ஞானத்தைப் புகழ்கின்றார்கள். அவருடைய பரிசுத்த நாவன்மையை வானளாவப் பாராட்டுகின்றனர். அவர் பரிசுத்த வேதாகமங்களில் மிகத்தேர்ந்தவராகவும், விசுவாசப் போதனையில் திறமைமிக்க வல்லுநராகவும் ஆன்மீகத்துறையிலும் தவவாழ்விலும் கைதேர்ந்த ஆசிரியராகவும் விளங்குகின்றார். அவருடைய மறை உரைகள் மறைநூல் வார்த்தைகளின் களஞ்சியம்" என்று கூறுகின்றார்.

பிரான்ஸ் நாட்டில் புனித அந்தோனியார் பணிபுரிந்த காலத்தில் லீமோஜ் நகரில் பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் மத்தியில் அவர் ஆற்றிய மறையுரையின் ஒரு பகுதி இன்று நாம் வாழும் இக்கால கட்டத்திற்கும் மிகப்பொருத்தமாகவே உள்ளது.

"நகரங்களை விட்டுவிடுங்கள் ஏனென்றால் தீமையையும், மாறுபாட்டையும் நகரத்தில் நான் பார்த்தேன். கடவுள் பக்கமாய் ஆத்துமம் எழும்பாதபடியும் ஆண்டவரைப்பற்றி நினையாதபடியும் தடுக்கும் சத்தம் சந்தடியை விட்டுவிலகுங்கள். இரவும் பகலும் தீமையானது நகரத்தின் சுவர்களைச் சூழ்ந்திருக்கின்றது. அதன் மத்தியில் அநீதி காணப்படுகின்றது. அநியாய வட்டி வாங்குவதும் ஏமாற்றுதலும் அதன் தெருக்களில் நின்று அகலவில்லை. கடவுளுக்கும் மனிதனுக்கும் எதிராகத் தீமை காணப்படுகின்றது. உண்மையைப் போதிக்கிறவர்களை எதிர்க்கிறார்கள். உலக கவலைகளில் அதிக கவனம் செலுத்தி உழைக்கிறார்கள். கொடுக்கல் வாங்கல்களில் அநீதி அகங்காரம் ஆணவம் செருக்கு அதிகரித்துள்ளது. கடவுள்முன் தன்னை தாழ்த்த அகங்காரம் தடுக்கின்றது.

எனவே பாறையில் வசியுங்கள். இந்தப் பாறையானது இயேசுக் கிறீஸ்துவே. அவரில் உங்களை நிலைநிறுத்துங்கள். அவரே உங்கள் நினைவிலும் ஆசைகளிலும் எப்பொழுதும் இருப்பாராக" எனத்தொடர்கின்றது அம்மறையுரை.

உண்மையைப் பாதுகாக்க, தப்பறைகளை எதிர்க்க, தவறான வழிகளில் சென்றுகொண்டிருப்பவர்களைத் திருத்த புனித அந்தோனியாரின் அருளுரைகள் பெரிதும் உதவின.

### பூர்ஜ் நகரப் புதுமை

கோடிப்புதுமைகள் புரிந்தவராகிய புனித அந்தோனியாரின் புதுமைகளில் ஒன்று திவ்விய நற்கருணையில் ஆண்டவர் இயேசுக் கிறீஸ்து மெய்யாகவே இருக்கின்றார் என்பதை எண்பித்தது.

பூர்ஜ் நகரில் பதித்தக் கொள்கைகளை பின்பற்றிய ஒருவன் நற்கருணையில் இயேசு இருக்கின்றார் என்பதை விசுவசிக்க மறுத்தான். "அப்பம் இரசம் இவற்றின் குணங்களுக்குள் இருக்கும் கிறீஸ்துவினுடைய மெய்யான சரீரத்தை நீ வழக்கமாக ஏறிச் செல்லும் குதிரை ஆராதிக்குமானால் நீ இந்த உண்மையை விசுவசிப்பாயா?" என அந்தோனியார் அவனிடம் கேட்டார். அதற்கு, "இரண்டு நாட்களாக எனது குதிரைக்கு எவ்வித உணவும் கொடுக்க மாட்டேன், மூன்றாம் நாள் குதிரையை ஓர் பகிரங்கமான இடத்திற்கு அழைத்து வருவேன். அங்கு ஒரு பக்கத்தில் புல்லை வைத்திருக்க வேண்டும். இன்னொரு பக்கத்தில் நீர் சொல்லும் திவ்விய நற்கருணையை உமது கையில் வைத்திருக்க வேண்டும். குதிரையானது புல்லைக்கவனியாமல் திவ்விய நற்கருணையின் முன் முழந்தாளிடுமானால் திவ்விய நற்கருணையில் கிறீஸ்து நாதர் மெய்யாகவே இருக்கிறார் என ஏற்றுக்கொள்வேன்" என்றான்.

இதனை ஏற்றுக்கொண்ட அந்தோனியார் அவ்வாறே செய்தார். "அந்தோனியார் தோற்றுவிடுவார் அவரை அவமானப்படுத்தலாம்" என எண்ணம் கொண்ட அவன் இந்நிகழ்ச்சியை பார்க்க ஏராளமான மக்களை அவ்விடத்திற்கு அழைத்திருந்தான். ஆனால் அனைவரும் ஆச்சரியப்படும்படி அக்குதிரையானது பசும் புல்லைப் பொருட்படுத்தாது நேரே அந்தோனியார் பக்கம் போய் திவ்விய நற்கருணை முன் முழந்தாளிட்டு ஆராதித்தது.

புனித அந்தோனியாரை, புனிதர் நிலைக்கு உயர்த்திய திருத்தந்தை 9ம் கிரகோரியார் இவ்வாறு பாடுகின்றார்.

"அதிக திறமைமிக்க இறையியல் பேரறிஞரே, பரிசுத்த திருச்சபையின் ஒளியே, இறைவனின் போதனைகளை நேசித்தவரே, இறைமகனிடம் எங்களுக்காக மன்றாடும்.

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜெசுராஜா.


Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk




மடுக்கரை வாழ்வுதயம் முன்பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவிற்கு மன்னார் ஆயர் அவர்களையும், இயக்குனர் அவர்களையும், மடுக்கரைவாழ் மக்களும், வாழ்க்கைப்பெற்றான் கண்டல் பாடசாலை பாண்ட் வாத்திய மாணவர்களும் அழைத்து வருகின்றனர். அருகில் முன்பள்ளிக் கட்டிடம்.

## பெற்றோர்களே சிறார்களின் கல்விக்கு அடித்தளம்

### மடுக்கரை முன்பள்ளித் திறப்புவிழாவில் மன்னார் ஆயர்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் மடுக்கரை கிராமத்தில் வாழ்வுதய நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டிடம் அண்மையில் மன்னார் ஆயர் மேதகு இரா. ஜோசேப் ஆண்டகை அவர்களினால் திறந்துவைக்கப்பட்டபோதே ஆயர் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயர் மேலும் கூறுகையில், வாழ்வுதய நிறுவனம் இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட முன்பள்ளிக் கட்டிடங்களை பின்தங்கிய கிராமப்புறங்களில் தேவைக்கேற்ற வகையில் நிர்மாணித்து வருகின்றது. பாலகர்கள் தமது கல்வியை மகிழ்ச்சியுடன் ஆரம்பிப்பதற்கு இந்த அழகான கட்டிடங்கள் பெரும் ஆறுதலாக அமைகின்றன. சிறார்களின் கல்விக்குரிய அத்திவாரம் ஆரம்பக்கல்வியில்தான் தங்கியுள்ளது. இவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக மாறவேண்டுமானால் பெரியோர்கள், பெற்றோர்கள் இவர்களின் கல்விக்கு உறுதுணையாகச் செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில், முதலில் இக்கட்டிட நிர்மாணப்பணிகளை மேற்பார்வை செய்து கட்டிடம் அமைப்பதற்கு ஒழுங்குபடுத்திய வாழ்வுதய வெளிக்களப் பணியாளர்கள் திரு S. R. ராஜேஸ்வரன், திரு V. J. பிரதீபன் ஆகியோருக்கும், மற்றும் கட்டிடக் கலைஞர்களுக்கும் தமது நன்றிகளைக் கூறினார். 50 அடி நீளமும் 22 அடி அகலமும் கொண்ட இக்கட்டிடத்திற்கு ரூபா 800,000/= (எட்டு லட்சம்) த்திற்கு மேல் செலவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செட்டிகுளத்தில் தையல் இயந்திரம் வழங்கல்

செட்டிகுளம் 2ம் பண்ணையில் வசிக்கும் தையலில் ஆர்வம் உள்ள பெண்களுக்கு வாழ்வுதயம் ஆறு மாதகாலத் தையல் பயிற்சியினை இலவசமாக வழங்க முன்வந்துள்ளது. இவர்களின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு வாழ்வுதயத்தின் 50%மான பங்களிப்புடன் தையல் இயந்திரங்களை பெற்றுக்கொடுத்துள்ளது.

இவர்கள் தமது குடும்ப வறுமையை போக்குவதற்கு விழிப்பூட்டல் பெற்றுள்ளார்கள். இப்பிரதேசத்தில் 11 பேருக்கு இந்த உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறாக தேவையேற்படும் ஏனைய பிரதேசங்களுக்கும் இவ்வாறான ஊக்குவிப்பு முயற்சிகளை வாழ்வுதயம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இப்பெண்கள் பயிற்சியினை சிறப்பாக பூர்த்திசெய்வதற்காக வாழ்வுதயம் 175,000/= ரூபாவினை செலவு செய்துள்ளது. மேலும் 11 உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரம் வழங்குவதற்கு 75,900/= ரூபாவினை வாழ்வுதயம் கொடுத்து ஊக்குவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஊக்குவிப்பும் உதவியும் இப்பெண்களுக்கு பெரும் ஆறுதலாக அமைகின்றது.



மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் செட்டிகுளம் 2ம் பண்ணைக் கிராமத்தில் 11 பெண்களுக்கு 50% பங்களிப்புடன் தையல் இயந்திரம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்

## தேசிய இயக்குனர் டேமியன் அடிகளாரின் மன்னார் விஜயம்

கொழும்பு செடேக் (SEDEC) கறிற்றாஸ் - ஸ்ரீலங்காவின் தேசிய இயக்குனர் அருட்தந்தை டேமியன் பெர்ணாண்டோ அடிகளார் வாழ்வுதயம் கறிற்றாஸ் - மன்னார் நிறுவன இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா அடிகளாரின் வேண்டுகோளின்பேரில் மன்னார் வாழ்வுதயப் பணிகள் பற்றிய கலந்துரையாடலுக்காக வருகைதந்திருந்தார்.

இவர் 17.05.2006 அன்று வாழ்வுதயத்தின்கீழ் இயங்கும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுத்தலைவர்கள் 45 பேரை, வாழ்வுதய மண்டபத்தில் காலை தரிசித்து 2 மணித்தியாலங்கள் குழுச்செயற்பாடுகள், வளர்ச்சிகள்பற்றிக் கலந்துரையாடினார். அத்தோடு இக்கிராமியக் குழுக்களின் முன்னேற்றங்களைச் சிறப்பாகப் பாராட்டி, குழு உறுப்பினர்களுக்கு பல நற்சிந்தனைகளையும் கொடுத்தார். இவரின் வருகையின் நிமித்தம் குழு உறுப்பினர்கள் மிக உற்சாகம் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்து வாழ்வுதயப் பணியாளர்களுடன் 2 மணித்தியாலங்கள் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் வாழ்வுதயம் இன்று பல பிரிவுகளாக, வெவ்வேறு பணிகளை மிகச்சிறப்பாக முன்னெடுத்து வருவதை ஏற்கனவே தான் அறிந்திருப்பதாகவும், இச்செயற்பாடுகளை மிகவும் அர்ப்பணிப்போடும், திறமையாகவும், மதிநுட்பமாகவும் செயற்படுத்திவரும் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுராஜா அடிகளாரைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வாழ்வுதய இயக்குனர் கருத்துத் தெரிவிக்கையில், வாழ்வுதயப் பணிகளை இன்னும் முன்னேற்றகரமாக கொண்டு செல்வதற்காக வாழ்வுதயப் பணியாளர்கள் ஒரு சிலருக்காவது மேலதிக வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெறுவதற்கும் வழிசமைத்துத் தருமாறு தேசிய இயக்குனரைக் கேட்டுக்கொண்டார்.

### உள்ளூர் வளத்தைக் கொண்டு பொருளாதாரத்தை மேலும் கட்டி எழுப்புங்கள்

## பனைவள கண்காட்சி நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர்



மன்னார் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் பனைவள உற்பத்திப் பொருள் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த 24.04.2006 அன்று வாழ்வுதய நிறுவன கேட்போர்கூடத்தில் நடை பெற்றபோதே, வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எமது நாட்டில் நாம் பொருளாதார வளத்தில் முன்னேற்றம் பெறவேண்டும் என்றால், எமது உளளூர் இயற்கை வளத்தைப் பயன்படுத்தி நம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். குறிப்பாக, இக்கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் ஊடாக வாழ்வுதயம் இவ்வாறான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஊட்டி வருகின்றது. இக்குழுக்கள் தமது நிரந்தரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முதலில் எமது வளத்தைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும். இக்குழுக்கள் இப்பன்ன வேலைப்பாடுகளை தமது அயராத முயற்சியினாலேயே தயாரித்துள்ளதை அனைவரும் அறிவோம். இப்பொருட்களைத் தயாரித்த குழு உறுப்பினர்களைப் பாராட்டும் இவ்வேளையிலே இவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் இன்னும் பலவாறாக இப்பனை வளத்தைப் பயன்படுத்தி முன்னேற்றமான பாதையில் செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, இப்பயிற்சியை வழங்குவதற்கு அனுசரணை வழங்கிய பனை அபிவிருத்தித் திணைக்கள இணைப்பாளர் அவர்களுக்கும், பயிற்சி ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி கூறி தனது உரையை நிறைவு செய்தார். அடுத்து பனை அபிவிருத்தித் திணைக்கள இணைப்பாளர், மற்றும் பயிற்சி ஆசிரியர் போன்றோர் உரைகளை நிகழ்த்தினர். இறுதியில் இக்கண்காட்சிப் பொருட்களைத் தயாரித்த குழு உறுப்பினர்களுக்கு வாழ்வுதய இயக்குனர் அவர்களினால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கண்காட்சி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டு பி.பகல் 4.30 மணிவரை இக்கண்காட்சி இடம்பெற்றது.

### வாழ்வுதயத்தில் மற்றுமோர் புதிய செயற்றிட்டம்

## வாழ்வுதய ஆற்றுப்படுத்தல் பணிகள்

வாழ்வுதய நிறுவனத்தில் ஏற்கனவே பத்து செயற்றிட்டப் பிரிவுகள் தமது பணிகளை முன்னெடுத்து வரும் இவ்வேளையிலே பதினொராவது பிரிவாக *வாழ்வுதய ஆற்றுப்படுத்தல் செயற்றிட்டம* ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டம் மன்னார் மறைமாவட்டம் முழுவதும் கொண்டுசெல்லப்பட இருக்கின்றது. இதன் முதற் கட்டமாக மன்னார் தீவுப் பிரதேசத்தில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப்பணிக்காக வாழ்வுதயத்தில் ஒன்பது பணியாளர்கள் புதிதாக இணைந்துள்ளனர். இதில் இரண்டு இணைப்பாளர்களும் ஏழு ஆற்றுப்படுத்துனர்களும் அடங்குவர். இணைப் - பாளர்களாக திரு அ. ஜோ. யூஜின், திரு ஜெ. சஞ்ஜீவன் குலாஸ் ஆகியோரும், ஆற்றுப் - படுத்துனர்களாக செல்வி S. றொசாந்தி லெம்பேட், செல்வி K. டெல்றின் குரூஸ். செல்வன் D.A.F. ஜெயசிறி, செல்வி S. றொசானி வாஸ், செல்வி J. இமாக்குளேற் லியோன், செல்வி A. பெனிஸ்டா நிமாலினி குலாஸ், செல்வன் நெவில்ராஜ் ஆகியோர்கள் கடமையாற்றி வருகின்றனர். இப்பணிகள் சமகாலத்தில் மக்கள் மத்தியில் அவசியம் தேவைப்படுகின்ற பணியாக இருந்து வருகின்றது. இச்செயற்பாடுகள் இனிவரும் காலத்தில் மன்னார் மறைமாவட்டம் முழுவதும் கொண்டுசெல்லப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



கறிற்றாஸ் சிறிலங்காவில் தேசிய இயக்குனர் அருட்தந்தை டேமியன் பெனாண்டோ அடிகளார் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபொழுது

கடந்த யுத்தத்தினால் உளரீதியாகப் பாதிப்படைந்தவர்களை இனங்கண்டு அவர்களை நேரடியாக அணுகி, அவர்களது சோகக் கதைகளுக்கு செவிமடுத்து ஆற்றுப்படுத்தும் பணியாக இது அமையும். மன்னார் நகரின் சாந்திபுரத்திலும், தோட்டவெளிக் கிராமத்திலும், ஜோசவ் வாஸ் நகரிலும் இப்பணி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா, செட்டிகுளம் மக்களுக்கு கிடுகு வழங்கல்

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் வவுனியா, செட்டிகுளம் பிரதேசங்களில் வறுமையின் நிமித்தம் ஏழைக்குடிசையில் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகளுக்கான கிடுகுகளை வாழ்வுதய நிறுவனம் வழங்கியுள்ளது.



இவர்களின் வாழ்வு மிகவும் வறுமையிலேயே இருந்து வருகின்றது. அன்றாடம் கூலிவேலைக்கு செல்பவர்களாகவே இக்குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்களின் கல்வி நிலை, மற்றும் பொருளாதாரம் மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றது. இவர்களுக்கு வழங்கிய கிடுகுகள் இவர்களுக்குப் பேருதவியாக அமைந்திருந்தன. இக்கிடுகுகள் இப்பிரதேசத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற வாழ்வுதய பணியாளர்கள் ஊடாக இப்பிரதேச பங்குத்தந்தையர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரின் சிபாரிசினாலேயே வழங்கப்பட்டது. இக்கிடுகுகளை வழங்குவதற்காக வாழ்வுதய நிறுவனமானது 225,000/= ரூபாவினை செலவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



ஒரு தம்பதிக்கு நான்கு பிள்ளைகள். மூத்த முதல் மூன்று பிள்ளைகளும் உயரமானவர்களாக, மென்மையான தசைப்பிடிப்புக் கொண்டவர்களாக, கறுப்பு முடி உடையவர்களாகப் பொதுவில் ஒரே சாயல் கொண்டவர்களாக விளங்கினார்கள். நான்காவது மகன் மூத்த மூன்று பிள்ளைகளிலிருந்து சற்று வித்தியாசமானவனாகத் தோற்றமளித்தான்.

கணவன் மரணப் படுக்கையில் இருந்தான். அப்போது மனைவியிடம், "கேட்கிறேன் என்று குறைநினைக்காதே!... நீண்ட நாள் கேட்கவேண்டும் என்றிருந்தேன்.. கடைக்குட்டி, மூத்த மூன்று பிள்ளைகளிலிருந்தும் வேறுபட்டிருக்கிறான். உண்மையில் அவன் என்னுடைய பிள்ளைதானா?" எனக்கேட்டார். மனைவி, "கடவுள்மீது, ஆணையாகச் சொல்கிறேனுங்க, அவன் உங்கட பிள்ளைதான்.." என்றாள். சந்தோஷத்தில் அவன் உயிர் பிரிந்தது. இப்போது அவள், அப்பாடா முதல் மூண்டப் பற்றியும் கேட்கவில்ல!... என்றாள் மனதுக்குள்.

விவிலியத்தை ஆராய முற்படுகின்றபோது வரலாற்றுக்கு முன், வரலாற்றுக்குப் பின் என இரு கூறுகளாக நோக்குகிறார்கள் விவிலிய ஆய்வாளர்கள். தொல்பொருள்கள், பதிவுகள், கல்வெட்டுக்கள் போன்ற தடயங்களை வைத்துக்கொண்டு கடந்தகால வரலாறு ஆராயப்பட்டு எழுதப்படுகின்றது. அதாவது இத்தடயங்களின் தோற்றம் பற்றி அறியப்படாத ஒரு காலம் இருக்கிறது. அக்காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்கிறார்கள். உதாரணமாக விவிலியத்தின் முதல் நூலாகிய தொடக்க நூலின் முதல் பதினொரு அதிகாரங்களும் வரலாற்றுக்கு முற்பட்டவை என்றே கொள்ளப்படுகின்றன.

இறைமகன் இயேசுவின் வருகை உலக வரலாற்றை இரண்டாகப் பிரிக்கிறது. கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்குப் பின் என வரலாற்றைப் பிரித்துப் பார்க்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

நோயுற்றால் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவரிடம் செல்கின்றபோது அவர் பல்வேறு பரிசோதனைகளைச் செய்துவிட்டு மருந்தைக் கொடுத்து அவற்றை சாப்பாட்டுக்கு முன் அல்லது பின் உட்கொள்ளும்படி கூறுகிறார். மருத்துவர் கூறுவதுபோல மருந்தை சாப்பாட்டுக்கு முன் அல்லது பின் உட்கொள்ளுகின்றோம்.

இவ்வாறுதான் தம்பதிகளின் வாழ்வை திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின் எனப் பகுத்துப் பார்க்கலாம் என்றார் என் நண்பர் ஒருவர். திருமணத்திற்கு முன் 'அழகே' என்று வியந்த துணைவர் திருமணத்திற்குப் பின் 'அடியேய்...' என்கிறார். திருமணத்திற்கு முன், "உங்களப் பாக்காட்டி நித்திரையே வருதில்ல..." என்றவர் இப்போது திருமணத்திற்குப் பின் "உன்ர மூஞ்சில முளிச்சா அந்த நாளே போச்சிப் போ..." என்கிறார். திருமணத்திற்கு முன் இனித்தவர், திருமணத்திற்குப் பின் கசக்கிறார். திருமணத்திற்கு முன் ஐசாகக் (Ice) குளிர்ந்தவர், திருமணத்திற்குப் பின் நெருப்பாகச் சுடுகிறார்.

திருமணத்திற்கு முன்னான காலம் காதலிக்கும் காலம் எனலாம். ஆங்கிலத்தில் LOVING PERIOD IS A BOASTING PERIOD என்றொரு பழமொழி உண்டு. காதலிக்கும் காலம் *புளுகுக் காலம்* என மொழி பெயர்க்கலாம்.

எழுத்தாளர் கவிக்கோ அப்துல் ரகுமான், காதல் என்பது 'ரெலஸ்கோப்' (TELESCOPE) என்றும் திருமணம் என்பது 'மைக்கிறோஸ்கோப்' (MICROSCOPE) என்றும் சொல்கிறார். இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சைபோல காதல் (ரெலஸ்கோப் செய்வதுபோல) தூரத்தில் உள்ளவற்றைப் பார்த்து இரசித்து மகிழ்கின்றது. திருமணம் (மைக்கிறோஸ்கோப் செய்வதுபோல) அருகில் இருப்பதையே துல்லியமாக பெருப்பித்துக் காட்டுகின்றது. திருமணம் இரு உள்ளங்களை அருகருகே கொண்டுவருகின்றது.

காதல் செய்த காலத்தில் தூரத்தில் வைத்துப் பார்த்தவைகள், திருமண நெருக்கத்தால் துல்லியமாகத் தெரிகின்றன. திருமணத்திற்கு முன் உணரப்படாத குறைபாடுகள் இப்போது திருமணத்தில் இணைந்து வாழத்தொடங்கும்போது படிப்படியாகப் புலப்படுவதால் குறைகளே கண்ணுக்குத் துல்லியமாகத் துலங்குகின்றன. இதனால் குடும்ப வாழ்வில் சிக்கல்கள் உருவாகின்றன.

உலகப்புகழ் பெற்ற சேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாடக ஆசிரியர் ஒத்தெல்லோ (OTHELLO) என்னும் துன்பியல் நாடகத்தை எழுதியவராவார். ஒத்தெல்லோ என்பவன் இந்நாடகத்தின் கதாநாயகன். அவன் மனைவியின் பெயர் தெஸ்தமோனா. இருவரும் இனிமையான இல்லறம் நடத்தி வருகிறார்கள். தெஸ்தமோனா கடவுள் பக்தியும் நல்லொழுக்கமும் உடையவள். இருவரும் ஒருவரை ஒருவர் உயிருக்குயிராய் அன்புசெய்தார்கள். கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் கண்ணகியின் வாழ்விலும் களங்கம் ஏற்படுத்திவிடலாம்!.. தெஸ்தமோனா இன்னொருவனுடன் உறவு வைத்திருக்கிறாள் என ஒத்தெல்லோவுக்கு பொய்யுரைக்கப்படுகின்றது. உண்மையை ஆராய்ந்து பார்க்காமல் தன் மனைவிமீது சந்தேகம் கொண்டு அவளை தன் படுக்கையிலேயே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுகின்றான். இக்கொலையின் பின்னர் உண்மை வெளிப்படுகின்றது. தெஸ்தமோனாமீது சுமத்தப்பட்ட பழி பொய்யானது என்பது வெளிச்சத்திற்கு வருகிறது. எனினும் எல்லாம் நடந்து முடிந்து விட்டதே!..

"சந்தேகக் கோடு அது சந்தோஷக் கேடு" என்பது ஒத்தெல்லோவினுடைய வாழ்வில் நிருபணமான உண்மையாகிறது. கணவன் மனைவியாக வாழ்ந்து நான்கு, ஐந்து பிள்ளைகளைப் பெற்ற பின்னரும் ஒருவர்மீது ஒருவர் சந்தேகம் கொள்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்றால் அவர்களை என்னதான் செய்வது?..

திருமணத்தை இறைவன்தாமே ஏற்படுத்தினார் என்பதை வேதநூல் கற்றுத்தருகிறது. அதனால் திருமணம் தூயதாக, பரிசுத்தமானதாக, புனிதமானதாக விளங்குகின்றது. "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுள் உருவிலேயே அவர்களைப் படைத்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்" என்று தொடக்க நூலில் (1:27) படிக்கின்றோம். அத்துடன் மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்கு நிகராக ஏவாளை இறைவன் உருவாக்கினார் என்று படைப்பின் வரலாற்றைத் தரும் இன்னுமொரு பாரம்பரியம் (தொடக்க நூல் 2:18) கூறுகின்றது.

இருமனங்கள் ஒருமனம் ஆவதே திருமணம். திரு என்றால் தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்று பொருள்படும். மணம் என்பதற்கு இணைதல் என்ற அர்த்தமுண்டு. ஆக தெய்வீகத் தன்மை கொண்ட இணைதல் என்பதுதான் திருமணம்.

எவரும் பிரிக்கக் கூடாத, முடியாத உடன்படிக்கையாகத் திருமண ஒப்பந்தம் திகழ்கிறது. "...கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மாற் 10:8) என்று இயேசு இப்பந்தத்தின் உறுதிப்பாட்டைக் கற்றுக்கொடுக்கின்றார். இதனைத்தான் நம் முன்னோர்கள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்றும் அதனால் இது ஆயிரம் காலத்துப் பயிராக வளரவேண்டும் எனவும் ஆசித்தார்கள்.

மகிழ்வான கூட்டு வாழ்வும், பிள்ளைச் செல்வமும் திருமணத்தின் இரு பயன்களாகக் கொள்ளப்படுகின்றன. கணவன், மனைவி தமக்கிடையிலான அன்பினைப் பகிர்ந்து கொள்கின்றபோது தமது அன்பின் கனியாக பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறார்கள். ஆக, அன்புறவின் வெளிப்பாடுதான் பிள்ளைச் செல்வங்கள். ஆகவே, அவர்கள் 'அக்சிடன்ற்' (ACCIDENT) ஆகப் பிறந்தவர்கள் அல்ல. "எனக்கு முன்னே நீ சென்றால் உன்னை இழந்து விடுவேன். எனக்கு பின்னே வந்தால் நான் உன்னை மறந்து விடுவேன். வா இருவரும் சேர்ந்து செல்வோம்" என்றதொரு மனநிலையில் கணவனும், மனைவியும் வாழும்போது வாழ்க்கை இனிக்கும்.

## வாகரைவாணன் வழங்கும்

# அந்தோனியார் காவியம்

## காவியத் தொடர் –2

### முகிலின் நடுவில் ஒரு முழுநிலா

இத்தகு தேசந் தன்னில் இணையது இல்லா வண்ணம்
முத்தென ஒளிரும் அந்த முதுபெரும் லிஸ்பன் அங்கு
சித்திரமாடம் நன்கு சிந்தையில் பதியும் கோயில்
இத்தலம் மயங்கிப் போகும் இருவிழி கொள்ளுமாமோ?

அன்புறு மனையாளோடு ஆண்டவன் அருளினோடு
பண்புறு மாட்டீன் என்பார் பார் புகழ் நகரம் தன்னில்
நண்புறு கிளைகள் சூழ நலமுடன் வாழலானார்
இன்புறு குடும்பந் தன்னில் இறையருள் பொங்குமாமே!

இறையவன் அருளினோடு இனியவன் இருந்த காலை
குறையறக் குழந்தை யொன்று குடும்பத்தில் பிறக்கலானான்
மறையவன் மாட்டீன், அன்பு மனையவள் மரியாள், கூனல்
பிறையதைக் கண்டாற்போல பேரின்பம் கொள்ளலானார்.

தென்றலே அசைந்தாற் போல தேனது இனித்தாற் போல
குன்றிலே பூக்கும் வண்ணக் குறிஞ்சியே சிரித்தாற் போல
மன்றலே நிறைந்தாற் போல மங்கலம் குவிந்தாற் போல
அன்றில்கள் பெற்றதாமோர் அழகிய குழந்தையம்மா!

மூத்ததோர் குழந்தையாக முழுநிலா எழுந்தாற்போல
பூத்ததோர் கமலம் போல பொன்னொளிக் காலை போல
கோத்ததோர் மாலை போல குறையிலாத் தங்கம் போல
ஆர்த்திடும் கடலில் தோன்றும் அரும் பொருள் பவளம் போல

மகன் தனைக் கண்டதாலே மரி, தனை மறந்தாளாகி
அகமது குளிரலானாள் அதிலவள் திளைத்துப் போவாள்
புகலரும் காட்சியாகும் பூமியில் இதனைப் போல
சுகமது உண்டுமாமோ? சொல்லதை அளக்குமாமோ?

பேடினன் என்னும் பேரைப் பிள்ளையும் தரித்துக் கொள்வான்
ஆடிய முழுக்கின்போது அவனது அருளின் வெள்ளம்
சூடினன் அவனும் அந்தச் சுகத்தினில் மூழ்கிப் போவான்
கூடினர் மக்கள் எல்லாம் குறித்தவன் வாழ்த்தத் தானே!

அலையது வாழ்த்துக் கூறும் அழகுறு பறவை எல்லாம்
தலையது நிமிர்த்திக் கொண்டு தவமகன் புகழைப்பாடும்
நிலம்து குளிரப் பாயும் நெடுவரை அருவி தானும்
குல மகன் தன்னை வாழ்த்தி குதித்தது ஓடிப் போகும்.

### துறவியாக

சின்னஞ் சிறு பருவம் சென்று அவன் கற்பான்
அன்னையவள் வீட்டில் அரிய பொருள் உரைப்பாள்
எண்ணங்கள், செயல்கள் இரவியென ஒளிரும்
வண்ணமுறு நிலவாய் வளர்ந்தவன் வருவான்.

பிரபுக்கள் வம்சமாவான் பெருமைகள் கொஞ்சமாமோ?
உறவுக்குள் உயர்ந்ததாகும் உயிராகும் தேசந்தன்னை
கரவுக்குள் இருந்தன்று காத்ததோர் குடும்பமாகும்
இரவுக்குள் விளக்குப்போல இருந்தென்றும் ஒளிருமாமே.

நல்லதொரு பரம்பரை நாடெல்லாம் அறியும்
வல்ல பெரு மறவர் வாளேந்திக் களத்தில்
அல்லல் மிக ஏற்றார் அவ்வீரர் மரபில்
செல்வன் இவன் உதித்தான் செல்லும் வழி வேறாம்!

(காவியம் நீளும்)

# மன்னா விளம்பரப் பலகை

"உலகில் ஏற்படும் தீமைகள் இல்லங்களில் இருந்தே உற்பத்தியாகின்றன."
- அஞ்சலோ -
*- ஏ.ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

"கணவன் செவிடாகவும் மனைவி குருடாகவும் இருக்க வேண்டும் வீட்டில் அமைதி இருக்க வேண்டுமானால்."
*அ. விமல்டா, பெரியமுறிப்பு, முருங்கன்.*

"நம் வாழ்க்கைக்குள் அன்பைக் கொண்டு வந்தால் அது கடவுளையே கொண்டு வந்த மாதிரி"
*- த. டனி, இல- 64, பெரிய பண்டிவிரிச்சான், மடு.*

"தவறு என்பது திருந்தச் செய்வது தப்பு என்பது திரும்பச் செய்வது, தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும் தப்பு செய்தவன் திருந்தி ஆகணும்."
- எனக்கு மிகவும் பிடித்த வரிகள் -
*ம. தர்மிகா, இல- 109, பெரிய பண்டிவிரிச்சான், மடு.*



"வளர்ப்பு பிராணிகளைப்போல நல்ல நண்பர்கள் எவரும் இல்லையூ ஏனெனில் அவை வினாக்கள் தொடுப்பதில்லை, விமர்சனமும் செய்வதில்லை"
*அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.*

"மனித மனங்கள் கலங்குவது அணு குண்டுகளினால் அல்ல, சில அன்பற்ற இதயங்களினால்."
*- யே. மெசியா, பொன்தீவு கண்டல்.*

"நீங்கள் இந்த ப'மியில் பிறந்ததன் அர்த்தம் ப"ர்த்தியாக வேண்டுமென்றால் அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அது முடியாவிட்டால்கூட பறவாயில்லையூ ஆனால் எவரையும் புண்படுத்தி விடாதீர்கள்"
அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்

"கீழே விழுவது தோல்வியின் அறிகுறியல்ல, விதை கீழே விழுவதாலே முளைக்கின்றது. தோல்வியை கண்டு மனமுடையலாகாது, உதிர்ந்த மரமும் ஒருநாள் தளிர் விடும்."
*- ஜே. இருதயராஜ், லுனுகலைப் பங்கு, லுனுகலை.*

"வயிறு புடைக்க உண்ணுபவன் தனக்குத் தானே புதை குழியை தோண்டிக்கொள்கிறான்"
*- சூ. சிசரோ பிறைற்ரன், கச்சேரி குவாட்டஸ், இல - 5, வவுனியா*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக்' 'நறுக்' சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள். முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் பொழிவு

இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு
வின்னி யோசப் அடிகளாரின்
விறுவிறுப்பான பதில்

# என் கேள்விக்கு என்ன பதில்?

இளைய உள்ளங்களே, உங்கள் கேள்விகளையும் சந்தேகங்களையும் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.
எழுதவேண்டிய முகவரி,
'என் கேள்விக்கு என்ன பதில்'
பதிப்பாசிரியர், மன்னா,
மறைக்கல்வி நிலையம், மன்னார்.



**கேள்வி:** நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அது உண்மையான காதலா என்று எப்படித் தெரிந்துகொள்வது? - அழகரசன், மன்னார்.

பதில்: உங்கள் காதல் உண்மையானதா? பொய்யானதா? என்று தெரிந்துகொள்வதற்கு முன் உங்களுக்கு காதலிக்கத் தகுதியிருக்கின்றதா? இல்லையா? என்று தெரிந்துகொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

செல்வி 10ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். வகுப்பில் எப்போதுமே முதல் மூன்று தரத்திற்குள்தான். எல்லாத் திறமைகளையும் பெற்ற சிறந்த மாணவி. வருங்காலத்தில் மருத்துவராக வருவாள் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது.

செல்வி தன்னோடு ரியுசன் வகுப்பில் படிக்கின்ற ஒரு மாணவனைக் காதலிக்க ஆரம்பித்தாள். அவன் யார்? எவர்? என்று தெரியாமல், தினமும் தன்னிடமே வருகின்றான் என்கின்ற ஒரே காரணத்திற்காக இவளும் அவனைக் காதலிப்பதாக உணர்ந்தாள்.

ஒருநாள் இருவருமே வீட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். பெரியோர்கள், பெற்றோர்கள், சமுதாயம் யாரும் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. தன்மானத்தை இழந்து, பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தி இன்று வாழ்க்கையே கேள்விக்குறியாக வீட்டிற்கு வெளியே செல்லாமல் கூனிக்குறுகி வீட்டோடு இருக்கிறாள். அந்த இளைஞனோ எதுவுமே நடக்காததுபோல் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இதுபோல எத்தனையோ காதல் பிரச்சனைகள் நல்ல மாணவ மாணவிகளின் வாழ்க்கையை சீரழித்துவிடுகின்றன. சினிமாவில், ரி.வி.யில் காட்டுகின்ற காதலை உண்மையென நம்பி அதை நாம் பின்பற்ற ஆரம்பித்து விடுகின்றோம்.

சினிமா, ரி.வி காதல் எல்லாம் குப்பை. எங்கேயாவது காதலனும், காதலியும் மரத்தைச் சுற்றி சுற்றி ஓடி ஓடிக் காதலிப்பதைப் பார்த்திருக்கின்றீர்களா? சினிமா ஒரு மாயை. அந்த மாய வலையில் சிக்கி 'விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியாக' நம்மை நாம் அழித்துக்கொள்கின்றோம்.

மாணவப் பருவம் கல்வி கற்பதற்கும், சிந்தனையாற்றலையும், உடல் உள்ளத்தையும் பக்குவப்படுத்துவதற்கும் உரிய பருவம். இந்தப் பருவத்தில் காதல் செய்வதால் அக்காதல் நமது உடலையும், உள்ளத்தையும் ஊனப்படுத்தி, வளர்ச்சியைக் குறைத்துப் பிற்கால வாழ்க்கையைப் பயனற்றதாக மாற்றிவிடவும் செய்யும். ஆகவே மாணவப் பருவம் கண்டிப்பாக காதலுக்கு ஏற்ற பருவம் அல்ல. உண்மைக் காதலுக்கு (காதலர்களுக்கு) சிந்திக்கின்ற ஆற்றல் இருக்கும். நாம் செய்வது சரியா? தவறா? இதன் விளைவுகள் என்ன? இதனால் ஏற்படக்கூடிய தீங்குகள் என்ன? என்பவற்றை அலசிப்பார்த்து முடிவு எடுக்கச்செய்யும்.

ஆனால் காமத்தையும், கவர்ச்சியையும், சலனத்தையும் காதலாக எண்ணுபவர்கள் சிந்தித்துச் செயல்படமாட்டார்கள். அந்த அந்த நிமிட ஆசைகளை பூர்த்தி செய்யவே விரும்புவார்கள்.

இவர்கள் சுய இன்பத்தைப் பெரிதாக நினைத்து, மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதைப் பற்றி எள்ளளவும் கவலைப்படமாட்டார்கள். காதலியை, காதலனை அன்பு செய்கிறார்கள் என்பதைவிட உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள் என்றே சொல்லலாம். இப்படிப்பட்டவர்கள் எந்த மதிப்பீடுகளும் இல்லாமல் தன் காதலிக்காக அல்லது காதலனுக்காகப் பெற்றோருக்கு எதிராகவும் செயல்படத் தயங்கமாட்டார்கள்.

உண்மைக் காதல் என்றுமே பிறர் அன்புக்கும், மனித மாண்புக்கும், நல்ல சமுதாய மதிப்பீடுகளுக்கும் எதிராகச் செல்லாது. ***காதலர் சிந்திக்க:*** 20 ஆண்டு காலம் அன்பு செய்து வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை வேண்டாம் என்று புறக்கணித்துவிட்டு உங்களைக் காதலிப்பவர், நாளை உங்களையும் புறக்கணிக்க மாட்டார் என்று எப்படிக் கூறமுடியும்■

**கேள்வி:** நான் கல்விக் கல்லூரிக்குப் போகிறேன். எனது தங்கை ஏ/எல் படிக்கின்றாள். நான் எல்லோரிடமும் நன்றாகப் பழகுவேன். எனக்கு ஆண் நண்பர் ஒருவர் உள்ளார். நானும் அவரும் சிறந்த நட்பைக் கொண்டுள்ளோம். இந்நிலையில் அவர் எனது தங்கையைக் காதலிக்கின்றார். இதனால் நட்பை விடவும் முடியவில்லை, காதலைப் பிரிக்கவும் இயலவில்லை. இதற்கு என்ன முடிவு செய்யலாம்? - நிர்க்கதியான நிர்மலா.

பதில் : உங்கள் கேள்வியின்படி (எனக்கு ஆண் நண்பர் ஒருவர் உள்ளார். நானும் அவரும் சிறந்த நட்பைக் கொண்டுள்ளோம்.) உங்கள் உறவு ஒரு புனிதமான உறவு என்று கருதுகின்றேன். அவர் உங்களுக்கு ஒரு நல்ல நண்பனாக உள்ளார். இந்த நிலையில் அவர் உங்கள் தங்கையைக் காதலிக்கிறார்.

உங்கள் நண்பர் அன்புள்ளவராகவும், மனித மாண்பும், மனிதப் பண்புகளும் அடங்கிய நல்லவராகவும் கடின உழைப்பாளியாகவும், தீய பழக்கங்களில் செல்லாதவராகவும் இருந்தால் அவர் உங்கள் தங்கையை காதலிப்பதைப் பற்றி நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர அதைப்பற்றிக் கவலைப்பட்டு அதைப் பிரிக்க நினைப்பது தவறான செயலாக இருக்கலாம்.

யாரோ ஒருவருக்கு - அவருடைய குண நலன்களைத் தெரியாமல் அவருக்கு தங்கையைக் கல்யாணம் செய்து வைப்பதைவிட நன்றாகப் பழகிய நல்ல நண்பருக்கு தங்கையை மணம் முடித்துக்கொடுப்பது நல்லதில்லையா?

ஆனால் இதில் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் உங்கள் தங்கை ஏ/எல் படித்துக்கொண்டிருக்கிறார். மாணவப் பருவம் காதலிக்கின்ற பருவமல்ல. அவள் நன்றாகப் படித்து வாழ்க்கையில் நல்ல நிலையை அடைய வேண்டும் என்றால் கண்டிப்பாகக் காதலையெல்லாம் படித்து முடிக்கும்வரை மூட்டைகட்டி வைத்துவிட்டு படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். தங்கை படித்து முடிக்கும்வரை அவளுக்குத் தொந்தரவு செய்யாமல் இருக்கும்படி உங்கள் நண்பருக்கு எடுத்துக்கூறவும்.

உண்மையான அன்பு (காதல்), தான் அன்பு செய்கின்றவருடைய படிப்பையோ, வாழ்க்கையையோ என்றைக்குமே பாழாக்க விரும்பாது. ஆகவே நீங்கள் உங்கள் நட்பைக் கைவிடவும் வேண்டாம். காதலை நிரந்தரமாகப் பிரிக்கவும் வேண்டாம். தங்கையின் நன்மையைக் கருதி படித்து முடிக்கும்வரை காதலைப் பிரித்து வைப்பதில் தவறில்லை■

**கேள்வி :** நான் ஏ/எல் படிக்கிறேன். எனது வயதுக்கு அதிகமான பெண்ணைக் காதலிக்கிறேன். அந்தப் பெண் படிக்காமல் இருந்த என்னை படிக்க வைப்பதற்காக மிகவும் உதவி செய்தாள். அவள் இப்போது திருமணம் செய்துகொண்டாள். அவளை என்னால் மறக்க முடியவில்லை. இனி என்ன செய்வது என்றும் புரியவில்லை. (கேள்வி சுருக்கப்பட்டுள்ளது) - அலைபாயும் ஓர் மனம்.

பதில் : இவ்வுலகத்தில் இறைவனாலும், இயற்கையாலும், சமுதாயத்திலும் ஏற்படுத்தப்பட்ட சில சட்டங்கள் இருக்கின்றன. அவை சமுதாயத்தை மட்டும் இயக்கவில்லை. இவ்வுலகையும், பிரபஞ்சத்தையும் அவைதான் ஆட்டிப்படைக்கின்றன.

பிறரது உரிமைகளில் தலையிடாத மகிழ்ச்சிகளை அவை பாதிப்பதில்லை. பிறரது உரிமைகளைப் பாதிக்கும்போது இன்றோ நாளையோ நாம் அதற்கு ஒரு விலை கொடுத்தாக வேண்டும். எவ்வளவுதான் அந்தப் பெண் உங்களுக்கு உதவி செய்தாலும், உங்கள் வயதில் அந்தப் பெண்ணைக் காதலிப்பது சரியாகத் தெரியவில்லை. உங்கள் உள்ளத்தில் அந்தப் பெண்ணிடம் வரவேண்டியது மதிப்பும் மரியாதையும் தவிர காதலல்ல.

இரண்டாவதாக அந்தப் பெண் கல்யாணம் செய்துகொண்டாள் என்று சொல்கின்றீர்கள். கல்யாணம் முடித்த அந்தப் பெண்ணைக் காதலிப்பது எல்லா நியதிகளுக்கும் எதிரான செயலாகும். நம்மால் இன்னொரு குடும்பம் பாதிக்கப்பட்டு பிரிக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டால் இறைவன்கூட நம் குற்றத்தை மன்னிப்பாரா?

நம்மால் யாருக்கும் எந்த நேரத்திலும் துன்பம் வரக்கூடாது. செய்த தவறைப்பற்றி நினைத்து குற்ற உணர்வில் மூழ்கிவிடாமல் இனிமேலாவது உங்கள் காதலைத் தொடராமல் இருக்க என்ன வழியென்று சிந்தித்துப் பாருங்கள்.

வாழ்க்கையே அறிவுக்கும் உணர்ச்சிக்கும் உள்ள போராட்டம்தான். அறிவை முன்வைத்து உணர்ச்சியை பின்வைத்து வாழும்போதுதான் வாழ்வு நல்ல நெறிகளுடன் போகிறது. உணர்ச்சியை முன்வைத்து காரியங்களைச் செய்யும்போது வாழ்வில் சிக்கல்களை உருவாக்குகின்றோம்.

ஆகவே அந்தப் பெண்ணை சந்திப்பதை நிறுத்துங்கள். நீங்கள் அந்தப் பெண்ணை சந்திப்பதாக அவளுடைய கணவனுக்குத் தெரியவந்தால் என்ன நடக்கும் என்று சிந்தித்தீர்களா? ஆகவே உங்கள் நல்வாழ்வுக்காகவும் அந்தப் பெண்ணுடைய குடும்பத்திற்காகவும் அவளை மறந்து உங்கள் படிப்பில் கவனம் செலுத்தி நல்ல முறையில் வாழப் பாருங்கள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார்■

---

# கால ஒலி

செல்வி. டி. எஸ். அந்தோனிப்பிள்ளை,
பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.

கனவோடும், நினைவோடும் போராடி அலுப்புற்ற நெஞ்சங்களே! கவனியுங்கள் .... ஈருடல்கள் சங்கமத்தில் ஓருயிராய்க் கருவாகி, பிண்டமாய், இரத்தமாய், மானிடனாய் ஜனனமாகி, எம் உதயத்தை உணருமுன்னே அஸ்தமிக்கும் ஜீவன்களாய், இருபத்தோராம் நூற்றாண்டில் இதயத்தை தொலைத்தவராய், இருள் நோக்கி ஓடும் இளவல்களே, எம் பயணத்தைச் சற்று நிறுத்தி பாதையைச் செப்பனிடுவோம். வாருங்கள்!

காலமென்ற வெள்ளத்தில், கரையொதுங்கும் ஓடம்தான் எம் வாழ்வு. சுட்டெரிக்கும் மாலை வெயிலில் நிழல் தேடும் கட்டெறும்பாய், நிம்மதியை நாடி ஓடித் தேடிக் களைத்துவிட்ட நிலையிலும், எங்கள் மாளாத உயிர்கூடப் பேயாக அலைகிறதே இப்பூமியில் நிரந்தரமாய்த் தங்கிவிட. வாழத்தான் பிறந்தோம் யாம். ஆனால், வாழ்வாங்கு வாழ நாமென்ன சாகாவரம் பெற்றவரா? மாளப்போவது உறுதி. அதற்குள் ஏனிந்த மாய்ச்சல்?

கருவறைப் பிரசன்னத்தை அழுகையோடு ஆரம்பித்தோம். வாழ்வுப் பயணத்தில் அந்தரித்து, அவலப்பட்டு, அகதிகளாய் அலைக்கழிக்கப்பட்டு, அழுகையைத் தொடர்கிறோம். அடங்குகின்ற உயிரோடும் - அடக்கப்படும் உடலோடும் அழுகையை முடித்து வைப்போம். அழுகையும் - புலம்பலும், துன்பமும் - துயரமும் நித்தமும் எம்மோடு இத்தனை கண்டும் யாம் எங்கேதான் நிற்கின்றோம்? இன்று! இங்கே ... மண்ணை நேசிப்பவரால் மானுடத்தைப் புரிய முடியாத பரிதாபநிலை.

யுத்தத்தை ஆசிப்பவரால் இரத்தத்தை மதிக்க முடியாத துர்ப்பாக்கியநிலை. கண்டத்தை வெல்பவரால், கண்ணீரை நிறுத்தவியலா கையாலாகாத்தன்மை. சுதந்திரத்தை விரும்புவனால் சுதந்திரமாய் சுவாசிக்க முடியா விசித்திர உண்மை. மொத்தத்தில், மனிதன் தன் மதி என்னும் உளி கொண்டு, செதுக்கிய சிற்பத்தில் விழியில்லை, செவியில்லை, வாயில்லை, இதயமில்லை.



நீரிலே பிறந்து, நீரிலே அழியும் உப்பைக் கண்டபோது, உற்பத்தியான உண்மைகள், மண்ணிலே தோன்றி, மண்ணிலே மறையும் மனிதரைப் பார்க்கையில் உள்ளத்தை உலுக்குது. சாவின் "ஓ" என்ற கால ஒலியும், பிணக்கிடங்கின் "வா" என்ற கையசைவும் தினமும் எம் மனக்கண்ணில் காட்சியாகிக் கதிகலங்க வைக்குது.

இன்று சோகங்களைச் சொரிந்துவிட சொந்தமில்லை – பந்தமில்லை. வேதனையை வெளிப்படுத்த வார்த்தையிங்கு வருகுதில்லை. வாதனையை தடுத்துவிட நாதியிங்கு யாருமில்லை. எம்முயிரைத் தக்க வைக்க எந்தவித வழியுமில்லை. இத்தனையும் கண்ட பின்னும் துயிலாத எங்கள் மனக்கண்ணில்கூட ஆசையும் - ஏக்கமும் துளிகூட வற்றவில்லையே. இன்றைய நாட்களிலே விடியலெனும் வெளிக்கதவு திறக்கும் முன்னே மரணம் என்ற உள்வாயில் விசாலமாய் திறந்துள்ளது. இங்கே நிரந்தரமான நிதர்சனம். நாம் எம் வாழ்வுப் பாதையென்று பதம் பதிக்கும் ஒவ்வொரு அடிச்சுவடும், கல்லறை நோக்கிய கடைசிப் பயணமென்ற காலவொலி காதுகளில் ஒலிக்கின்றது.

இன்றோ எங்கள் "லப் - டப்" என்ற இதயத் துடிப்புக்கள் "டும் - டும்" என்ற அதிர்வுக்கு இசைவாக்கம் அடைந்துள்ளது. இங்கு காணுகின்ற காட்சிகளெல்லாம் கலைந்தோடும் மக்கள். பார்க்கின்ற பூமியிலெல்லாம் பதறி நிற்கும் உயிர்கள். சுவாசிக்கின்ற காற்றிலெல்லாம் குருதியின் வீச்சம். போகின்ற பாதையெல்லாம் பிணக் குவியல் கூட்டம். இத்தனைக்கும் நடுவினிலே, நீள்கிறதே ஒரு கரம். ......... அதன் விரல்கள் பற்றிப் பிடித்திருப்பது எதை? ஓ .....!! அதுதான் துன்பத்தைத் துடைக்கும், சுமைகளை அகற்றும், மரணத்தால் மறுபிறப்பை நினைவுறுத்தும் ***சிலுவையா?***

எங்கும் - எதிலும் "திடீர்" என வெடிக்கும் "படீர்" வெடிச் சத்தம். செவிப்பறையில் பிளக்கத் "திடும்" என ஒலிக்கும் "டும் - டும்" அதிர்வுகள். நிலத்திலே, நீரிலே, வானிலே ... ஏன்? ஓ! இதுதான் மனிதன் இம்மண்ணில் போடும் மனக் கணக்கைப் பார்த்து, இறையவன் சிரிப்பில் தொங்கி நிற்கும் "கால ஒலியா?"

இப்போது புரிகிறதா? பூவும் - புல்லும் உதிரும் முன்னே உதிர்ந்து போகும் நிலையிலின்று எம்முயிர். பச்சை மரங்கூடத் துளிர்க்கு முன்னே பறிபோகும் பரிதவிப்புடன் எம்முடல். காலவொலி மிகவருகில் மெல்ல, மெல்ல நெருங்குவது செவிகளில் மட்டுமல்ல. மனக் கண்ணில்கூட தெளிவாகத் தெரிகின்றது.

இக்கால ஒலியின் தூரதரிசனத்தில் துகிலுரியப்படும் எம் ஊனும் உடலும் - உயிரும் என்பது உறுதியான உண்மையாய் நிதமும், நடக்கும் நிகழ்வுகளில் நினைவுறுத்தப்படும் இவ்வேளையில், ஏனிந்த ஆணவம்? எதற்கிந்த ஆசைகள்? எவருக்காக இந்த ஆஸ்திகள்?

வேண்டாம்.. போதும் .... போதும் ...... இப்பூமியிலே புழுதியாய் மாறி, புழுவாய்த் துடிக்கும்போதும், கனவுகள் கலைக்கப்பட்டு, நினைவுகள் தூங்கும்போதும், மரணமென்ற மலரின் மகரந்தம் எம்மேல் தூவப்பட்டுவிட்டதை, மணம் பரப்பும் "பிணவாடை" நிர்மலமாக்கிவிட்டதை உள்ளத்தில் உணர்ந்து, உயிரிலே பதித்து, ஆணவத்தை உடைத்து, ஆசைகளைக் களைந்து, ஆஸ்திகளை வெறுத்து, அன்பிற்காய் வாழ்வோம். அன்பிலே மாள்வோம்.

வாருங்கள் ....! காலவொலியின் கட்டளையைக் காதுகளில் உள்வாங்கி, கயமையை மறந்தவராய், கண்மூடி நிரந்தரமாய், மண்தனிலே தூங்குமுன்னே, மனிதத்தை மதித்து, நேயத்தை நேசித்து, மானுடத்தை வெல்வோம்.

ஓ! காலவொலி இக்கணத்திலேயும் எம் காதைப் பிளக்கின்றது. என்றாலும் கவலையில்லை. கவிந்து வரும் இருளிலும் கண் தெரியும் எமக்கு. ஏனென்றால், தொலைந்துபோன எம்மிதய அன்பென்ற ஒலி, காலவொலியின் களையெடுப்பில், மலர்ந்த எம் இதயங்களில் மானுடநேயமெனும் மின்மினிப் பூச்சிகளால், பரந்துபட்ட வெளிச்சம்! ஆதலால், நாம் மறைந்தாலும், துன்பமில்லை – மரணபயம் எம்மிலில்லை. எனவே காலத்தை வென்றெடுக்கும் அன்பெனும் ஆயுதத்தால், அன்பியத்தை உருவாக்க, உறுதியை ஊட்டி ஆயுளைக் கணக்கிடும் கால ஒலியே உனக்கு நன்றி■

# மாணவர் பக்கம்



## க.பொ.த. சாதாரணதர மாணவர் பரீட்சை வழிகாட்டி - 2006

# கத்தோலிக்க திருமறை

இவ்வினாக்களுக்கான விடைகள் தரப்படவில்லை. மாணவர்கள் தாமே விடைகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

*தொகுப்பு: திருமதி. பயஸ் ரதி பீரிஸ், கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, மன்னார்.*

### பாடங்கள் அலகு — (21, 22, 23, 24)

### (1) பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்துக் கீறிடுக.

1. இறைத் தந்தையின் நற்செய்தியை முதல் உலகிற்கு வெளிப்படுத்தியவர் :
(அ) மரியாள் (ஆ) இயேசு (இ) திருச்சபை (ஈ) பேதுரு

2. இறையரசு செயலாற்றப்படுவது,
(அ) மனிதன் தீமையில் செயலாற்றும்போது,
(ஆ) உலக ஆசைகள் செயலாற்றும்போது,
(இ) இறைவன் செயலாற்றும்போது,
(ஈ) மனிதனின் அறிவு செயலாற்றும்போது.

3. இயற்கையை அன்பு செய்த புனிதர் :
(அ) பிரான்சீஸ் அசீசியார் (ஆ) பிரான்சீஸ் சவேரியார்.
(இ) புனித யோசவ்வாஸ் (ஈ) புனித அகுஸ்தீனார்.

4. இயேசுவின் ஜென்ம பூமி எனப்படுவது,
(அ) பபிலோனியா (ஆ) பலஸ்தீனா
(இ) எகிப்து (ஈ) யூதேயா.

5. சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்பும் முக்கிய பண்பு :
(அ) விசுவாசம் (ஆ) பக்தி
(இ) நம்பிக்கை (ஈ) சகோதரத்துவம்

6. பல கலாச்சாரங்கள் ஊடாக நற்செய்தியை கொண்டு சென்றவர்
(அ) திருமுழுக்கு யோவான் (ஆ) தூய பவுல்
(இ) புனித யோவான் (ஈ) புனித மத்தேயு.

7. தூய பவுலின் மனமாற்றத்திற்குக் காரணியாக அமைந்தது,
(அ) திருச்சபையின் போதனை (ஆ) இயேசுவின் மரணம்
(இ) இயேசுவின் போதனை (ஈ) இயேசுவின் உத்தானம்

8. முதிர்ச்சியடைந்த மாணவர் பெறும் திருவருட்சாதனம் :
(அ) திருமுழுக்கு (ஆ) குருத்துவம்
(இ) உறுதிப்பூசுதல் (ஈ) மெய்விவாகம்

9. புதியதொரு விண்ணகத்தைப்பற்றி எடுத்துக் கூறும் நூல்,
(அ) திருத்தூதர்பணி (ஆ) உரோமையர்
(இ) பிலமோன் (ஈ) திருவெளிப்பாடு

10. கிறிஸ்தவ வாழ்வின் கடைசி நோக்கம் :
(அ) திருச்சபையில் சேருதல்
(ஆ) திருச்சபைக்காக உழைத்தல்
(இ) இறைவனோடு ஒன்று சேருதல்
(ஈ) இவ்வுலக வாழ்வை முடித்தல்.

### 2. இறைவார்த்தையைப் பூர்த்தி செய்க ?

1. ........................... நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை.

2. நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் ........................ கற்பியுங்கள்.

3. நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது, இயேசுவின் சீடர் ............ வந்து, அவரது ............, .................... சென்றுவிட்டனர்.

4. பிறர் .................... என்ன செய்ய வேண்டும் என்று .................... அதையே .................... அவர்களுக்குச் செய்யுங்கள்.

5. இதோ கடவுளின் .................... மனிதர் நடுவே உள்ளது.

### 3. பின்வரும் கதையை வாசித்து, சுருக்கமான விடை தருக ?

"வயது முதிர்ந்த ஒரு கழுகு தன்னுடைய உணவைத் தேட முடியாத ஒரு நிலையில் இருந்தது. அதனுடைய இறகுகள் பறக்க சக்தியற்றுக் கிடந்தன. முதிர்ச்சியின் காரணத்தால் சொண்டு வளைந்து நெஞ்சை குத்தியது. நகங்கள் பழுதடைந்து விட்டன. ஏனைய கழுகுகளின் உதவியை பெற முடியாத நிலையில் மலை உச்சியின் மறைந்த ஒரு பகுதியில் சில நாட்கள் தனிமையில் உணவின்றி வாழ்ந்தது.

இந்த நாட்களுக்குள் அந்தக் கழுகு தனது இறகுகளை கல்லோடு அடித்து அடித்துக் கழற்றியது. நெஞ்சை குத்தியிருந்த சொண்டை நிலத்தில் குத்திக் கழற்றியது. நகங்களையும் அவ்வாறே கழற்றியது. சிறிது நாட்கள் கழிய, புதிய சொண்டும் புதிய இறகுகளும் புதிய நகங்களும் உருவாகின. மகிழ்ச்சியுடன் மீண்டும் பறக்க ஆரம்பமானது. அக்கழுகு புது வாழ்வைப் பெற்றது.

1. கழுகு எவ்வாறு புது வாழ்வைப் பெற்றது?

2. நிலையற்ற இவ்வுலக வாழ்வை பயன்படுத்தி எவ்வாறு நிலையான செல்வங்களைப் பெற்றுக்கொள்வீர்?

3. துன்பத்தினூடாக கழுகு புதிய சக்தியை பெற்றதுபோல், உமது வாழ்வின் துன்பங்கள் ஊடாக, புதிய சக்தியை எவ்வாறு பெற்றுக்கொள்வீர்?

4. துன்பங்களால் நம்பிக்கை இழந்த ஒரு மாணவனை நீர் எவ்வாறு திடப்படுத்துவீர்?

5. தனிமையான இடங்களில் இயேசு இறைத் தந்தையோடு உறவுகொண்டார். அதேபோல், நீர் இறைவனோடு உறவுகொள்ளும் சந்தர்ப்பங்கள் எவை?

### 4. சுருக்கமான விடை தருக?

1. நற்செய்திப் பணிக்கு கிறிஸ்து எம்மை அழைத்தார் என்பதற்குரிய வேதாகம ஆதாரம் தருக?
2. நற்செய்திக்கு உரியவர் யார்?
3. இறையரசு எவ்வாறு போதிக்கப்படுகின்றது?
4. யோசவ்வாஸ் அடிகள் இலங்கைக்கு ஆற்றிய பணிகள் இரண்டு தருக?
5. காணாமல்போன ஆட்டின், உவமையிலிருந்து நீர் கற்றுக் கொள்ளும் விடயங்கள் 2 தருக?
6. மனிதப் பண்புகள் இன்று அருகிக் காணப்படுவதற்கான காரணங்கள் 2 தருக?
7. பண்பாடு என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
8. இயேசுவின் பிறப்பின்போது, பலஸ்தீனா எந்த பேரரசிற்குள் இருந்தது?
9. பண்பாடுகளின் ஒருங்கிணைப்பிற்கான தடைகள் 4 தருக?
10. புனித பவுல் நற்செய்தியைக் கொண்டுசென்ற இடங்கள் 4 தருக?
11. திருச்சபை அதிவேகமாக பரவித் தொடங்கியது எப்போது?
12. விசுவாசப் பிரமாணம் எப்போது இயற்றப்பட்டது?
13. கிறிஸ்து உயிர்த்து, எத்தனையாம் நாள் பெந்தக்கோஸ்து விழா கொண்டாடப்பட்டது?
14. ஏக திருச்சபை என்பதனால் நீர் விளங்குவது யாது?
15. கிறிஸ்தவம் பிறந்த கண்டம் யாது?
16. இலங்கையில் கிறிஸ்தவ மதம் தேசிய மயமாகி உயர்வடைய முதல் காரண கர்த்தாக்களாக அமைந்தவர்கள் யார்?
17. மறையைப் பரப்புவதிலும், இறைவழிபாட்டை நடத்துவதிலும் தேசியப் பண்பாட்டு, இயல்புகளை புகுத்தலாம் என அனுமதி வழங்கிய சங்கம் எது?
18. 1 கொரிந்தியர் 15: 34 - 54 இல் நீர் பெறும் செய்தி யாது?
19. மண்ணுக்குள் புதைந்துள்ள உடலுக்கும் உயிர்த்தெழுந்த உடலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?
20. தூய பவுல் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பற்றி போதித்தார் என்பதற்குரிய ஆதாரம் தருக?
21. பிறசமய மாணவர்களோடு பழகும் நீர், கிறிஸ்தவ விழுமியங்களை அவர்கள் மத்தியில் எவ்வாறு ஏற்படுத்துவீர்?
22. இயேசுநாதர் மருத்துவர் பற்றி எந்தச் சந்தர்ப்பத்தில் கூறினார்?
23. இயேசு யூத சடங்காசாரங்களையும், கலாச்சாரங்களையும் கடைப்பிடித்தார் என்பதற்கு 2 உதாரணம் தருக?
24. உயிர்ப்பைப்பற்றி கிறிஸ்துவின் சீடர்கள் கொடுத்த பதில் யாது?
25. இறையரசின் விசேட தன்மைகள் 2 தருக?

### 5. பின்வருவனவற்றிற்கு விடை தருக?

1. இறையரசை சுதந்தரித்துக் கொள்ள நாம் செய்யக் கூடிய செயற்பாடுகள் எவை?

2. பின்வருவோரிடம் வெளிப்படும் இறைமதிப்பீடு ஒவ்வொன்று தருக?

அ. புனித பவுல் : பிறவினத்தாருக்கு நற்செய்தியைக் கொண்டு சென்றார்.

ஆ. அன்னை திரேசா : ஆதரவற்றவர்களை தேடிச் சென்றார்.

இ. புனித சவேரியார் : இளமையிலேயே உலகைத் துறந்த இயேசு சபை குருவானவர்.

ஈ. பிரான்சீஸ் அசிசியார் : துறவற சபையை ஆரம்பித்தவர்.

3. பலதரப்பட்ட பண்பாடுகள் மத்தியில் நீர் எவ்வாறு ஒற்றுமையை ஏற்படுத்துவீர்?

4. ஆதித்திருச்சபையில் கிறிஸ்துவின் சீடர்களிடம் காணப்பட்ட பண்புகள் எவை?

5. பின்வரும் பிரச்சனைகளை முன்னிட்டு, கிறிஸ்தவ மாணவன் என்ற முறையில், உமது செயற்பாடுகள் எவை?

அ. சுனாமியால் பெற்றோரை இழந்த உமது வகுப்பு மாணவன்.

ஆ. மனித உரிமைகள் மதிக்கப்பட்டமை (சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டது)

இ. பிள்ளைகளின் அன்பு இன்றித் தவிக்கும் முதியோர்.

ஈ. அத்தியாவசிய தேவைகளை நிறைவுசெய்ய முடியாத, உமது அயல் குடும்பம்.

---

## இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள்

# ஒய்வூதியம் பெற வாய்ப்பு

**1983 யூலைக்குப் பின் வேலை இழந்த அரச ஊழியர்களுக்கான நிவாரணம் வழங்கல்.** (இலங்கையரசின்) (பொ. நி. சு. 04-2006 - திகதி 16-02-2006) சமயாசமய – அமைய ஊழியர்களுக்கும் இது பொருந்தும்.

1. 1983 யூலை மாதமும் அதற்குப் பின்னரும் அல்லது சற்று முன்னரும் நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக தங்கள் அரச உத்தியோகத்தை இழந்தவர்கள் தங்கள் நிலமையை விபரித்து திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக நியமனம் வழங்கும் அதிகாரிக்கு விண்ணப்பித்து தங்கள் வேலையை மீளப்பெற்றுக்கொள்ளலாம்.
2. 10 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் தமது அறுபதாவது வயதிலிருந்து ஓய்வூதியம் பெறத்தகுதி உடையவர்கள் ஆவர்.
3. 10 வருட சேவையைப் பூர்த்திசெய்யாதவர்கள் 12 மாத கால பணிக்கொடைக்கு உருத்துடையவர்கள்.
4. 14-88,14-88(1) ஆகிய சுற்று நிருபங்களில் சொல்லப்பட்ட லீவுகளுக்கு மேலாக சம்பளமற்ற லீவாக கணிக்கப்படும் நாட்கள் ஓய்வூதியத்திற்காக சேவைக்காலமாக கணிக்கப்படும்.
5. இது தொடர்பான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 30-06-2006 ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு மேற்சொல்லப்பட்ட 2006-02-16ம் திகதி 04-2006ம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையை கவனத்தில் கொள்ளவும்.

**தகவல் . வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், மன்னார், இலங்கை**

## கத்தோலிக்க பாடத்தில் 100 % சித்தி

அண்மையில் வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தர 2005 ஆண்டிற்கான பரீட்சை முடிவுகளின்படி, மன்னார் கல்வி வலயத்தின் அடைவானது கணிசமான அளவு உயர்வைக் காட்டியுள்ளன. விசேடமாக கத்தோலிக்க திருமறைப் பாடத்திட்டத்திற்கான பெறுபேறானது இவ்வருடம் 100% சித்தியைக் காட்டியிருப்பதுடன் பெறப்பட்ட சித்தியின் தரங்களும் உயர்வான நிலையில் உள்ளது. மன்னார் கல்வி வலயத்தில் தோற்றிய மொத்த மாணவர் 733 அவர்களில்,

A – 50.6% B – 25.9% C – 20.5% S – 3%

F ஒன்றுமில்லை. இதுவரை காலமும் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் இதுவே அதிக தரம்கூடிய அடைவுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடத்தினை மாணவர்களுக்கு ஊக்கமுடன் கற்பித்து வழிகாட்டி நெறிப்படுத்திய ஆசிரியர்கள், அதிபர்கள், கிறிஸ்தவ ஆசிரிய ஆலோசகர் திருமதி பயஸ் ரதி பீரிஸ் அவர்ளுக்கும், மன்னா பத்திரிகையில் மாதிரி வினாக்களை வெளியிட்டு ஊக்குவிப்பு வழங்கிய 'மன்னா' ஆசிரியருக்கும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்கள் தமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றார்.

## சின்னஞ் சிறுகதை

# அறிவு பெருக்கத்திற்கு வறுமை ஒரு தடையா?

அந்தப் பெண்கள் கல்லூரி வளாகம் மதிய வெயிலின் உக்கிரத்திலும் வண்ணத்துப் பூச்சிகளாய் மின்னுகிறது.



சாப்பிட்டு முடித்த ஆனந்தத் தெம்பில் அங்குமிங்குமாய் அலைந்து கொண்டிருந்த மாணவியரின் கூட்டத்தினூடே... வேகமாக உள்ளே நுழைந்து கொண்டிருந்த மிஸ்ஸின் மேல் மோதியே விட்டாள் அவள். கையில் டிபன் கெரியர் வேறு. "ஏன் மாலா... நீ... இன்னும் சாப்பிடவில்லையா...? செமினார் செஷன் இப்போ ஆரம்பிக்க வேணுமே.. நீதானே முதல்ல பேசவேண்டிய ஆள்." அவள் முகம் சிவந்து தலை குனிகிறாள்.

"எப்பவுமே... இவள் இப்படித்தான் மிஸ். எங்களோடு என்றைக்குமே இவள் சாப்பிட்டதில்ல. நாங்க கை கழுவின பின்புதான் அம்மா கெரியரையே திறப்பாங்க". மாணவிகளின் ஏகோபித்த குரல் - இரைச்சல்.

"அவங்க அம்மா ஒவ்வொரு நாளும் நல்ல புரியாணி சாப்பாடு கொடுப்பாங்க. அதையெல்லாம் நீங்க பார்த்து கண் போடணுமா? அதனால்தான் தனியா ஓரமா இருந்து சாப்பிடறா" அடுத்த அலை ஓய்கிறது.

ஆனால், அவளின் குனிந்த தலை நிமிரவில்லை. பயந்த நடுக்கத்தில் விரலோரத்திலிருந்த டிபன் கெரியர்.. கீழே விழுந்து சிதறுகிறது..... உள்ளே பத்துப் பதினைந்து சோற்றுப் பருக்கைகள். இரண்டு மூன்று மாங்காய்த் துண்டுகள்! கல்லூரியிலேயே முதலான அந்த அழகு மாணவி... மௌனமாய் அழுகிறாள்.

இல்லை .... அந்தக் கல்லூரியே அன்று அங்கே அழுகிறது...! அறிவுப் பெருக்கத்திற்கு வறுமை தடைபோடுமோ?

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 29

சொல்லின் செல்வர் அமுது

## யாருக்கு இந்த விளக்கு?

அவுஸ்ரேலியாக் கண்டத்தின் பழங்குடி மக்களை அபோரிஜினர் என அழைப்பர். அங்கு வந்து குடியேறிய மக்கள், பழங்குடி மக்களை வீட்டுக்கு வெளியில் கழற்றிவிடும் செருப்புப்போல, இழிவாகக் கருதினர். எனவே ஆதிக் குடிகளில் கருத்தூன்றிய ஆயர் நொக்ஸ் அவர்கள் அன்புப் பணியாளர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டார். புதிய தென் உவேல்சு மாகாணத்திலுள்ள பவுக்கே என்ற இடத்தில் தொண்டு செய்ய வேண்டும்.

அவ்விடத்தைப் பார்வையிட்ட அன்னையவர்கள் அங்கு சேவை செய்ய விரும்பினார். பவுக்கே என்ற இடம் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் வனாந்தரத்தால் சூழ்ந்தது. இந்தியாவுக்குச் சேர்ந்த கன்னியர்களை மாத்திரம் தெரிந்து, அவ்விடத்துக்கு அனுப்பி வைத்தார் அன்னை திரேசா. ஏனெனில் சாதிப் புறக்கணிப்பு என்ற நோயில் அவர்கள் புரண்டவர்கள்.

கன்னிமார்கள் பூர்வீக மக்களோடு அன்பு கலந்து சேர்ந்து நடந்தனர். மடத்தில் சமையல் வகுப்புக்கள், தையல் வகுப்புக்கள் தொடங்கின. நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. சித்திர வேலைப்பாடுகளில் கைவண்ணம் காட்டும் பயிற்சிகள் தொடங்கின. சிறுவர்களில் கன்னியர்களின் கண்ணும் கருத்தும் சுடராயடிந்தன. அவர்களை நெறிப்படுத்துவதால் சமுதாயம் துளிர்விட்டு எழும்பிவிட முடியும் என அவர்கள் திட்டமிட்டனர்.

பாடசாலை செல்லாமல், இளம் பருவத்திலேயே சோம்பித் திரிந்து, குடியில் ஈடுபட்டு, அநேகர் முன்னேற முடியாமல் போனார்கள்.

வெள்ளையர்கள் கடுமையான நேரசூசிகளைப் போட்டு அவர்களிடம் வேலை வாங்கினார்கள். உடலும் வேர்வையில் கரைந்தது. பலர் வேலைக்குப் போகாமல், குடித்துவிட்டு ஊர்சுற்றித் திரிவதையே பொழுதுபோக்காகக் கொண்டனர். கன்னியர்கள் அவர்களோடு அன்பாய் நடந்து, கருணையோடு பேசி அவர்களின் கறளுக்கு அரத்தாள் போட்டனர்.

கன்னியரில் அன்பும் - மதிப்பும் இருந்தமையால் அவர்கள் சொற்கள் காதில் ஏறியது. முன்னேற்றத்தின் படிகளை நோக்கிப் பழங்குடி மக்கள் கால் வைத்தனர். சில காலத்தால் அங்கு வந்த அன்னை அவர்கள் கன்னியர்களின் பணிகளைக் கண்டு வியந்தார். வனாந்தரத்தில் நீரோடைகளாயிருந்தனர்.

அன்னை திரேசா அங்கே வசித்து வந்த ஒரு வயோதிபரைக் காணச் சென்றார். அந்த வயோதிபர் பொழுதுபட்டாலும் இருண்ட வீட்டில் தான் வாழ்ந்து வந்தார். அழகான ஒரு விளக்கு இருந்தாலும் அதை அவர் கொளுத்தியதில்லை. அன்னையார் அதனை அறிந்துகொண்டார். அந்த விளக்கைத் தூசி பிடித்து மங்கிவிட்டது. "நீர் ஏன் அந்த விளக்கைக் கொளுத்துவதில்லை?" என்று கேட்டார். "நான் யாருக்காக இந்த விளக்கைக் கொளுத்த வேண்டும்? இங்கே ஒருவரும் வருவதில்லையே!" என்றார். "கன்னியர்கள் உம்மைச் சந்திக்க வந்தால், நீர் இந்த விளக்கைக் கொளுத்துவீரா? என, "ஆம். மனிதருடைய குரல் கேட்டால், நிச்சயமாக இதை நான் கொளுத்தத் தவறமாட்டேன்"



அவருடைய வாக்குறுதி மனித மதிப்பையும், மாண்பையும் சுட்டிக் காட்டியது. தான் ஒரு பெறுமதியிலாத மனிதன் என்ற எண்ணம் அவரில் வேர்விட்டிருந்தது. எந்த நெஞ்சிலும் ஈரம் இல்லை. அதனால் எவரும் தன்னில் அன்பு கொள்ளவில்லை என்பது அவர் சித்தாந்தம்.

அன்புப் பணியாளர் சபை அதன் கிளைகளை அபயம் தேடி வந்த நாடுகளில் பரப்பியது. இருண்டு கிடந்த இடங்களில் அதன் ஒளிக்கீற்றுக்கள் வெளிச்சம் பரப்பின. உதவியற்றோருக்கு அது ஒரு நம்பிக்கை நட்சத்திரமாயிற்று.

### அன்னையைக் கண்டார் இளவரசி

உரோமாபுரியில் அன்னை திரேசா கட்டிலால் விழுந்தமை அவருடைய பயணத்துக்குத் தடையாயிற்று. இளவரசர் சாள்சும், இளவரசியும் இந்தியாவுக்கு அரசியல் பணிமுறையில் வருகை தந்த வேளையில் கடைசிநாள் இளவரசி கல்கத்தாவுக்குச் சென்றார்.

குழந்தை இல்லத்தைக் காண்பதற்கும் அன்னை திரேசாவைச் சந்திப்பதற்கும் டயானா ஆவலாயிருந்தார். ஆனால் அன்னையைக் காண இயலாமையால் வருந்தினார். எவ்வாறேனும் அன்னையைக் காண விரும்பி விமானத்தை உரோமாபுரிக்கு திசை திருப்பினார். அங்கே கன்னியர் மடத்தின் சின்னத் தோட்டம் ஒன்றில் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு அன்பு மலர்ந்து ஆரத் தழுவி முத்தமிட்டனர்.

20 நிமிடநேரம் அந்தரங்கமாகக் கலந்து உரையாடினர். பின்னர் சிற்றாலயத்துக்குச் சென்று இருவரும் ஒன்று சேர்ந்து செப வேண்டுதலில் ஈடுபட்டனர். கோயில் வாசலில் மீண்டும் அன்புடன் பிரியாவிடை கூறி கட்டித்தழுவினர். "நீங்கள் மிகக் கவனம் செலுத்தி அன்னையைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்ததற்கு மிக நன்றி" என்று அங்குநின்ற கன்னியர்களுக்குக் கூறிவிட்டு லண்டன் பயணமானார் இளவரசி டயானா.

(கங்கை தொடர்ந்து பாயும்)

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.37

புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களில் பலர் தாம் வாழும் நாடுகளிலிருந்து இம்மறையறிவுப் போட்டிகளிலே பங்குகொள்வது எமக்கு உற்சாகத்தையும் மேலதிக ஆர்வத்தையும் தருகின்றது. மன்னாவையும் இது போன்ற மறையறிவுப் போட்டிகளையும் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். மேலதிகப் பங்களிப்பின் மூலம் நீங்களும் மறையறிவிப்பு பணியில் இணைந்து கொள்வீர்கள்.

இம்மாதத்துக்கான மறையறிவுப் போட்டிக்கான வினாக்கள் ஏப்ரல் மாத மன்னா இதழிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

### நமது வினாக்களுக்கு வருவோம்.

1. "நம் வாழ்வில் இனி ஆதவன் மறைவதில்லை. மீட்பின் ஆதவன் கிறீஸ்து உயிர்த்து விட்டார்' இது யாருடைய கூற்று?
2. மன்னார் திருமறைக் கலாமன்றம் தனது மாதாந்த செய்தி இதழ் ஒன்றை (முதல் இதழ்) 27.03.2006 அன்று வெளியிட்டது. அவ்விதழின் பெயர் என்ன?
3. இவ்வாண்டு மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு எப்போது நடைபெற இருந்தது?
4. "சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே" வேதாகமத்தில் இவ்வார்த்தைகள் எங்குள்ளன?
5. "சீர் சமைத்த சிற்பி" இது ஒரு ஆய்வு நூலின் பெயர். சீ. ஜே. அன்ரனி பாலா இதன் ஆசிரியர். சீர் சமைத்த சிற்பி யார்?
6. மன்னா பத்திரிகை எந்த அச்சகத்தில் அச்சிடப்படுகிறது?
7. இந்திய மாநிலங்களில் பணியாற்றிவந்த அன்னை திரேசாவின் சகோதரிகளை தம் நாட்டிலும் வந்து பணியாற்ற வேண்டும் என அழைப்பு விடுத்தார் வெனிசியூலா நாட்டின் ஆயர். அவரின் பெயர் என்ன?
8. அன்னை திரேசாவின் அன்புக்கன்னியர் நால்வர் (இந்தியர்) வெனிசியூலா நாட்டில் 1965ம் ஆண்டு ஆடி மாதம் வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்து சேர்ந்த இடம் எது?
9. யூதரின் பாஸ்கா பண்டிகையின்போது செம்மறி பீடத்தில் பலியாக்கப்படுவது எதற்கு முன்குறியாகத் திகழ்ந்தது?
10. கீளியன் குடியிருப்பு மன்னார் மறைமாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகளில் ஒன்று. அங்கு பல நல்ல முயற்சிகள், இளைஞர் உருவாக்கம் இந்நாட்களில் நடைபெறுகின்றன. அதன் தற்போதைய பங்குத் தந்தை யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 38 இதற்கான கேள்விகளுக்கு 25 பேர் விடை அளித்திருந்தனர்.

இவர்களுள் பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்ட

**அதிஸ்ரசாலி:**

**எஸ். நதின்,**

**புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை, மன்னார்.**

பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

**10 அதிஸ்ரசாலிகள்**

1. நோ. டினேந்திரா, H4, மடுக்கோயில், மடு.
2. பி. லூட்ஸ் அஞ்சலிக்கா, தரம் 8, எமில் நகர், மன்னார்.
3. க. போல் சேவியர், டென்மார்க்.
4. திருமதி. அகத்தா குரூஸ், சின்னக்கடை, மன்னார்.
5. திருமதி. ஜெ. ஷமிலா, பள்ளிமுனை, மன்னார்.
6. அல்பிறெட் ஜீமலா.
7. ஆ. லக்ஸனா, இல A - 07, மடுக்கோவில், மடு.
8. ஆ. றதனா, இல A 07, மடுக்கோவில், மடு.
9. எஸ். ஜொல்வின், தரம் 8 டீ, பள்ளிமுனை.
10. எஸ். யூலின்சியானி, தரம்-9, புனித. சவேரியார் பெண்கள் பாடசாலை, மன்னார்.

## மன்னார் மாதோட்ட ...9ம் பக்கத் தொடர்ச்சி

இவர் சமயம், மொழி, பிரதேசம் சார்ந்த பல கட்டுரைகளை எழுதியுள்ளார். வெளியிட்ட நூல் *சுண்டிக்குளிப் புலவா* அச்சேறியுள்ளது. மணநூல் அச்சாகவில்லை. காலத்துக்குக் காலம் எழுதிய கட்டுரைகள் சத்தியவேத பாதுகாவலன், வீரகேசரி, கலைமகள் ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அவை யாவும் தேடித் தொகுக்கப்பட வேண்டியவைகளே. கோவை, உலா, கலம்பகம், தாழிசை, சிந்து, கண்ணி போன்ற வடிவங்கள் கொண்ட சமயம் சார்ந்த ஆக்கங்களையும் எழுதியுள்ளார். அத்துடன் மாதோட்டப் புலவர்களின் ஆக்கங்களுக்கு இணையாக திருவிவிலியக் கதையொன்றினைக் கருப்பொருளாகக் கொண்டு '*பார்வளன்*' என்னும் ஈரிரவில் நடிக்கும் நாடகம் பிச்சைகுளம் கிராமத்தில் கவிஞரால் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகும். நாடகத்தின் மங்களம்பாடி முடிந்த கையுடன் வரண்டு கிடந்த அப்பிரதேசம் மழை பொழிந்து, பயிர் செழித்து, நல்விளைச்சலைப் பெற்ற பெருமைக்குரியது பார்வளன் நாடகமாகும்.

கவிஞர் மொத்தம் போல் அவர்களின் தமிழ்ப் பணியில், சிகரமாக விளங்குவது, மன்னார் மாதோட்டப் பிரதேசத்தில் (1700 – 1982) அன்னார் ஆயுட்காலம் வரைக்கும் புலவர்களாலும், அறிஞர்களாலும் உருப்பெற்ற ஆக்கங்கள் அனைத்தையும் சேகரித்து ஆவணப்படுத்தியிருப்பதாகும். இதை அரும்பெரும் சாதனையாகவே கொள்ளத் தோன்றுகிறது.

இப்பெரிய இமாலயச் சாதனைகளைக்கூட சமயம் சார்ந்த புனித ஸ்தலங்களும், அவற்றின் பொறுப்பாளர்களும் கண்டு கொள்ளவில்லையே என்னும் ஆதங்கம் உறுத்துகின்றது. மேற்கூறிய ஆவணங்களை ஆராயும்போது, இப்பிரதேசத்தின் தமிழ், கிறிஸ்தவ பரம்பலும், வாழ்தலும், பக்தியும், பாக்களும் எவ்வளவு போற்றப்பட வேண்டியது என்னும் வியப்பை ஏற்படுத்துகின்றது.

இருபதாம் நூற்றாண்டு வரைக்கும் தொடர்ந்து வந்த இனிமேலும் தொடரும் மன்னார் பிரதேச கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்துக்கு கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் அரும்பணி ஆற்றியுள்ளார். அப்பணியானது, கவிதை, தமிழ், மருத்துவம், நாடகம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனப் பரந்து விரிந்து சிந்திக் கிடக்கின்றன.

இவை அனைத்தும் ஆய்வுசெய்யப்பட்டு அச்சேற்றப்பட வேண்டியவையாகும். அதைவிட அவரால் சேகரிக்கப்பட்ட பிரதேசத்தின் 300 ஆண்டுகளுக்கும் மேலாக யாக்கப்பட்ட இலக்கியங்கள் ஒன்றேனும் அழிந்துவிடாமல், காக்க வேண்டிய கடப்பாடு சமுதாயம் சார்ந்ததாகின்றது. இவைகள் அனைத்தும் உயிர்ப்புள்ள இலக்கியங்களாக உருப்பெற வேண்டுமானால், உயர்கல்வி பெற்றோர், உயர்கல்வி நிறுவனங்கள், இப்பிரதேசத்தில் உருவாகி உள்வாங்க வேண்டும்■

## நமது காணிக்கைகள் ... 2ம் பக்கத் தொடர்

"எப்பவோ வைத்த நேர்த்தி, இன்னும் நேர்த்திக்கடன் முடிக்கவில்லை. அதை முடித்தால்தான் இனிமேல் ஆண்டவரிடம் வேறு வேண்டுதல்களை முன்வைக்க முடியும், அடுத்த தேவைக்காக செபிக்க முடியும்" எனத் தவறாக நினைப்போரும் உண்டு.

வைத்த நேர்த்தி இன்னும் முடிக்கவில்லை. அதனால்தான் இப்படியெல்லாம் கஷ்டம் வருகிறது. ஒரே வாதை, வருத்தமாக இருக்குது என தப்பபிப்பிராயம் கொண்டு, கடவுளைப் பிழையாக விளங்கிக்கொண்டிருப்போரும் உண்டு. ஆண்டவரோடு நாம் பேரம் பேசி, வியாபாரம் செய்ய முடியாது, அது கூடாது. அவர் அன்பு அளப்பெரியது. அது நிபந்தனை விதிக்காத அன்பு. அது விலை கொடுத்து வாங்க முடியாத அன்பு. ஆண்டவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகின்ற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகின்றவர்.

வீடுகளுக்குச் சென்று இரப்போர் (பிச்சை கேட்போர்) பல வகையினர். சிலர் உழைத்துண்ண மனம் இல்லாதவர்கள். வேறு சிலர் உழைத்துண்ண முடியாதவர்கள். இன்னும் சிலர் கிடைக்கின்ற உதவியை சரியான முறையில் பயன்படுத்துவோர். மற்றும் சிலர் கிடைக்கின்றதை வீணடிப்போர். அவர்களை நாம் எந்த அளவு கோல் கொண்டு அறிந்துகொள்வது?

அது ஒரு புறம் இருக்க, முடிந்தவரைக்கும் அவர்களுக்கு உதவியளித்தல் நல்லது. பணமாகவோ, பொருளாகவோ, உணவாகவோ, அவர்களின் துன்பம் தீர்க்க முயலும்போதெல்லாம் நாம் ஆண்டவருக்கே செய்கின்றோம்.

ஆனாலும் சில தருணங்களில் பலர் அடுத்தடுத்து உதவிகேட்டுவரும்போது அலுத்துக்கொள்ளுகிறோம். உதவி செய்ய மறுக்கின்றோம். சிலர் கோபம் கொண்டு கடும் சொல்லும் கூறிவிடுகின்றோம். சில தருணங்களில் நாளாந்த சீவியத்தின் அவசரத்தில், ஆத்திரத்தில், கோபத்தில் இருக்கின்ற வேளைகளில் யாராவது உதவிகேட்டு வந்தால் அவர்கள்மேல் எரிந்து விழுந்து விரட்டியடிக்கின்றோம். ஏழைகளாய் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் நம்மிடம் ஏச்சும் பேச்சும் வாங்குகின்றார்கள். உண்மையில் நமக்கு அந்தத் தருணத்தில் உதவிசெய்வது இயலாத காரியமாக இருந்தால் இன்னுமொரு நாளில் உதவிக்கு வரும்படி கூறி அனுப்புதல் நாம் யாவரும் செய்யக்கூடிய காரியமே.

வீட்டிலாயினும் கோயிலிலாயினும் குழந்தைகள் இருந்தால் அவர்கள் கையால் தானமளிப்பது அல்லது காணிக்கையிடுவது இரட்டைப்பயன்பாடுடையது.

அதனால் குழந்தைகளும் ஈகைக் குணத்தைக் கற்றுக்கொள்வார்கள். உதவி கேட்டு வருவோர் சில சமயங்களில் அவலட்சணமாக, குழந்தைகளுக்கு பயமூட்டும் தோற்றமுடையவர்களாக இருந்துவிடுவதும் உண்டு. நாம் அவர்கள் மட்டில் குழந்தைகளுக்குண்டான பய உணர்வைப் போக்கவேண்டும்.

சிலர் 'பிச்சைக்காரக் கிழவனை ஞாபகம் காட்டி குழந்தைகளுக்கு உணவூட்டுவார்கள். இவ்வாறான செயற்பாடுகள் ஏழை எளியவர் மட்டில் குழந்தைகளை வெறுப்பும், அருவருப்பும் கொள்ள வைக்கின்றன. இது குழந்தையின் சமய, சமூக உள வளர்ச்சியில் தாக்கத்தை உண்டாக்கவும் கூடும்.

கடந்த இரு தசாப்த்தங்களாக நாம் உதவிகளை, நிவாரணங்களை எதிர்பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இந்த அரசியல் பொருளாதாரத் தாக்கம் எம் சமூகத்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்கிவிட்டதோ என எண்ணத் தோன்றுமளவிற்கு நிலமை உருவாகி உள்ளது.

வாங்கி வாங்கி பழகிப்போய் சில தருணங்களில் கொடுப்பதற்கு பின்னடிக்கின்ற மனநிலை உருவாகிவிட்டது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. பெறுவதற்குக் காட்டுகின்ற ஆர்வத்தை தருவதில் காட்டுதல் குறைந்து விட்டது.

யாரோ கொடுத்ததனால்தான் நமக்குக் கிடைக்கின்றது. ஆகவே நாமும் கொடுத்தல் குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். வெளிநாட்டுக் காசு ஒன்றும் மரத்தில் காய்ப்பது கிடையாது. மாறாக யாரோ வியர்வை சிந்தி உழைத்ததுதான். உழைத்ததில் மற்றவருக்கென்று பகிர்ந்து கொடுத்ததுதான்.

இன்னும் சிலர் "தனக்கு மிஞ்சியதுதான் தானம்" என விதண்டாவாதம் செய்வார்கள். மனிதன் என்றைக்காவது "இது போதும்" என நிறைவுகொண்டு, நிறுத்தியது கிடையாது. மேலதிகமாக இருக்கும்போது கொடுத்தால் பரிசேயத்தனம். இருப்பதைக் கொடுப்பது உண்மைத்தானம்.

தன் பிள்ளையைப் பட்டினி போட்டு, ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் அது நடைமுறைச் சாத்தியப்பாடானதல்ல. எதையும் மிகைப்படுத்தாமல் பொருத்தமான கூற்றுக்களுக்கு பொருத்தமான வியாக்கியானம் தந்து நிறைவாகக் கொடுப்போம். கொடுப்போருக்குக் குறைவில்லை. நிறைவாகக் கொடுப்பவன் நிறைவாகப் பெற்றுக்கொள்கின்றான்.■

# குடும்பக் குவலயம்




## அதிகரித்து வரும் மது பாவனையும் அழிந்து வரும் குடும்பங்களும்

இன்று தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் மது பாவனை என்பது கற்பனை செய்ய முடியாதளவிற்கு வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இன்னும் பல்வேறுபட்ட பொதுநலக் குழுவினரும் முனைந்தும்கூட இம்மது பாவனை என்ற செடி முளைத்து ஆழவேர் விட்டு அகன்று வளர்ந்து வருகின்றது.

இதனை உணர்த்தும் பல்வேறு சம்பவங்கள் ஆங்காங்கே பரந்த அளவில் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக அண்மையில் இலங்கைத் திருச்சபையின் தாய் நிலமாகக் கருதப்படும் மடுத் - திருப்பதியின் தலை வாசல் கிராமமான பெரிய பண்டிவிரிச்சானில் இடம் பெற்ற அதிர்ச்சி - யூட்டும் சம்பவம் அனைவரையுமே திகைக்க வைத்தது.

மடுக் கல்வி வலயத்தின் கணித ஆசிரிய ஆலோசகரும், மன்னார் உதவி சாரண இயக்குனரும் மக்களின் செல்வாக்கைப் பெற்றவருமான (திரு. யூலியன் எமாட் அவர்கள் அவருடைய தந்தையாராலேயே நேருக்கு நேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை) அந்த ஊர் மக்களையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இவற்றுக்கு எல்லாம் பின்னணிக் காரணம் பயங்கரவாதமோ, வன்முறையோ அல்ல. மாறாக அதிகரித்து வரும் மதுபோதையின் எல்லை கடந்த தீமைகளாகும்.

*எஸ். பி. டினேஸ் குமார், பெரிய பண்டிவிரிச்சான், மடு.*

இதுபோன்ற நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சம்பவங்கள், இன்று தமிழர் தாயகப் பகுதிகளில் மதவெறியாகவும், இனவெறியாகவும் மாறி, அனைத்துக் கிராமங்களிலும் அடிக்கடி வன்முறைகளாக தலைவிரித்து ஆடுகின்றன.

இந்த ஆட்டம் நிலநடுக்கமாக மாறி வடபுலத்தில் மட்டுமன்றி தென் இலங்கையிலும் பெரும் திகைப்பையும், அதிர்ச்சியூட்டும் பல படுகொலைகளையும், பாதகச் செயல்களையும், சுமந்து பரந்த அளவில் விரிந்து வருகின்றது. எனவேதான் அதிகரித்த இந்த போதைகளினால் ஏற்படும் பல விளைவுகளை மக்கள் தங்கள் மனங்களில் உணர்ந்தும் நேரடியாக கண்டும்கூட அவற்றில் இருந்து விடுபட தயக்கம் காட்டி வருகின்றனர்.

மன்னாரைப் பொறுத்தவரை தீவுப்பகுதிகள், இந்தியாவில் இருந்து கடத்திவரப்படும் போதைப்பொருட்களாலும், கிராமப் பகுதிகள் வடிசாராயம் எனப்படும் ஒருவகை போதைப்பொருளாலும் கடும் தாக்கத்திற்கு உள்ளாகி வருவது மிகுந்த வருத்தத்திற்குரியது.

அதிகரித்து வரும் இப்போதைப்பொருட்களினால் குடும்பங்கள் சிதைவுறுகின்றன. சிறுவர்களின் வாழ்வும் பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. இவையெல்லாம் கண்மூடித்தனமான, கொலை கொள்ளை, சூது, கற்பழிப்பு போன்ற கொடிய செயல்களுக்கு இட்டுச் செல்கின்றன. இந்நிலைமைகளை மக்கள் தம் கண்களால் கண்டும்கூட தாம் அதில் இருந்து விடுபட - பலரை விடுவிக்க ஏனோ தயக்கம் காட்டி வருகின்றனர். ஆகவேதான் இந்நிலை தொடருமாயின் நாடும் வீடும் குட்டிச் சுவர் ஆவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையே தோன்றும்.

ஆகவே ஏற்பட்டு வரும் இழப்புகள், போதையின் அழிவுகள், அதன் பாதிப்புகள் பற்றி சிந்தித்துக்கொண்டு இருப்பதும், கொலை, கொள்ளை, மோசடி, கற்பழிப்புக்கு காரணமாக இருந்தவர்களை தண்டிப்பதிலும், சிறைக்கம்பி எண்ணவைப்பதிலும் எம் கவனத்தைச் செலுத்தாது எதிர்காலம் பற்றி ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

இந்தப் போதைப்பொருள் ஓர் ஆணிவேரை மட்டுமல்ல பல பக்கவேர்களையும் கொண்டு பரந்து காணப்படுகின்றது. எனவே ஒரே தடவையில் தறிக்காவிட்டாலும் பக்கவேர்களை ஒவ்வொன்றாகச் சரித்து அதன் ஊடாக இவ்விசப்பூண்டை வேரோடு அழிக்க அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும்.

இதற்கு ஆயுதமோ, வன்முறையோ, பிராயச்சித்தம் ஆகிவிடாது. ஒற்றுமை என்ற உன்னத பண்பே போதுமானது. அது எப்படி என்றால் ஒவ்வொரு கிராம இளைஞர்களும் ஒரு சக்தியாகத் திரளவேண்டும்.

உண்மையாகவே, கத்தோலிக்க தாய்த்திருச்சபை தன் கொடியில் படரவிட்டு இருக்கும் இளைஞர் படையே இதற்குப் போதுமானது. இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு என்பது ஓடும் வாகனத்துக்கு பெற்றோல் போன்றது.

ஆகவே கிராம எழுச்சியின் ஊடாகவே தமிழர் தாயகப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள மதுபோதை மற்றும் ஏனைய போதைவஸ்துக்களை அறவே அழிக்கமுடியும்■

## சிந்தனைத் துளிகள்

- எங்கிருந்து நாம் ஓடுகின்றோம்? எதனை நோக்கி ஓடுகின்றோம்? என்பதையெல்லாம் தம் இறப்புக்கு முன்னே எல்லா மனிதரும் அறிந்துகொள்ள வேண்டும்.
- இவ்வுலகில் நாம் வாழ்கிறோமோ இறக்கிறோமோ என்பதைவிட எதற்காக வாழ்கிறோம்? எதற்காகச் சாகிறோம்? என்பதே முக்கியமானது.
- வாழ்க்கையின் நீளத்தை முடிவுசெய்யும் வலிமை உனக்கு இல்லை. வாழ்வின் ஆழத்தை, உயரத்தை, அகலத்தை வடிவமைக்கும் வலிமை உனக்கு உண்டு.

*யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்.*

# மருத்துவப் பொழிவு

## நோயற்ற வாழ்வுக்கு உதவும் நெல்லிக்கனி

இயற்கை மனிதனுக்கு அளித்துள்ள மிக அற்புதமான கனிகளுள நெல்லிக் கனியும் ஒன்றாகும். தமிழில் இதனை *நெல்லிக்காய்* என்று அழைத்தாலும், விஞ்ஞானிகள் பழ வரிசையில்தான் இதைச் சேர்த்துள்ளனர். அறநெல்லிக்காயைவிட சற்று அடத்தியான பச்சை நிறத்தில் கோடுகளுடன் குட்டி எலுமிச்சம் பழ அளவில் இருக்கும் பெரிய நெல்லிக்காயில்தான் மருத்துவக் குணங்கள் அதிகம் உள்ளன. இதற்கு *நாட்டு நெல்லிக்காய்* என்றும் பெயர் உண்டு.

பழங்களிலேயே அதிக அளவு விற்றமின் 'சி' உள்ள பழம் இதுதான். 100 கிராம் நெல்லிக்கனியில் 600 மில்லிகிராம் அளவு வைட்டமின் 'சி' இருக்கிறது. கல்சியம் 50 மி.கி. பரஸ்பரஸ் 21 மி.கி, இரும்புச் சத்து, விட்டமின் பி, மாவுச் சத்து 14வீதம் உள்ளன.

நெல்லிக் காயையும், கனியையும் எப்படிப் பதப்படுத்தினாலும் அதில் இருக்கிற விட்டமின் 'சி' அழியாது. இது இக்கனியின் சிறப்பம்சமாகும். உடல் நலத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான எல்லாவிதமான அமிலங்களும் அடங்கிய சிறந்த கனி நெல்லிக்கனிதான் என்று இந்திய மருத்துவ மேதையான கஸ்ருதா சான்று தருகிறார்.

இதயக் கோளாறுகளையும் இப்பழம் குணமாக்குகிறது. நெல்லியை தேவாமிர்தம் என்றால் அது மிகையல்ல. உடலின் எல்லா அவயங்களிலும் கலந்து அந்தந்த உறுப்புக்களில் காணப்படும் கோளாறுகளைச் சரிசெய்து நீண்ட நாட்கள் இளமைத் தோற்றத்துடன் வாழ வழி அமைத்துத் தருகிறது. 'நெல்லிக்காய் லேகியம்' உடலுக்கு மிக நல்லது. நெல்லிக் கனியின் சதை சிறு துவர்ப்பும், கசப்பும், புளிப்பும், இனிப்பும் கலந்து இருக்கும். இக்கனியை அப்படியே சாப்பிடப் பிடிக்காதவர்கள், அவித்தும் சாப்பிடலாம். அவித்தால், உப்புச் சேர்த்துக்கொள்ளலாம்.



**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!**

நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை தரும் உணவுகளில் நாவற் பழத்திற்கு அடுத்து நெல்லியே இடம்பெறுகிறது. ஒரு கப் பாகற்காய் சாறுடன் ஒரு தேக்கரண்டி நெல்லிக்கனி சாறையும் காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் நீரிழிவுக்காரர்களின் இரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும்.

இதைத் தொடர்ந்து இரண்டு மாதங்கள் இந்த முறைப்படி கலந்து அருந்தி வரவேண்டும். கண்பார்வை தெளிவாகத் தெரிய நெல்லிக்கனி சாறுடன் ஒரு தேக்கரண்டி தேனையும் சேர்த்து காலையும், மாலையும் அருந்தி வரவேண்டும். இப்படி ஏழு நாட்கள் அருந்திய பிறகு, ஒருவேளை மட்டும் அருந்தி வந்தால் போதும். உலர்ந்த நெல்லிக்கனியைத் தூள் செய்து வைத்துக்கொண்டால் தினமும் பயன்படுத்தலாம். எலுமிச்சம்பழ சர்பத்துடன் ஒரு தேக்கரண்டி அளவு இந்தப் பவுடரைச் சேர்த்து அருந்த, சீதள பேதி, வயிற்றுக் கடுப்பு முதலியவை உடனே குணமாகும்.

சொறி, சிரங்கு உள்ளவர்கள் ஒரு தேக்கரண்டி உலர்ந்த நெல்லிக்கனித் தூளுடன் அதே அளவு சர்க்கரையையும் சேர்த்து பாலுடன் அருந்த வேண்டும். தினமும் இதைத் தொடர வேண்டும். இதில் பாலின் அளவு அரை கப் மட்டும் இருத்தல் நலம்.

நெல்லிக்கனிச் சாறு கீல் வாதத்தைக் குணமாக்குகிறது. கீல் வாதத்திற்கு மேல் பூச்சாகத் தேய்க்க, நெல்லிக்காயிலிருந்து தயாரிக்கப்படும் தைலம் உபயோகப்படுகிறது. முடி கொட்டிப் போவதையும், நரைப்பதையும் தடுக்கும் எல்லா விதமான சிறப்புத் தைலங்களின் முக்கிய மூலப் பொருள் நெல்லிக்கனிதான்.

நெல்லிக்கனி சாப்பிடுவதால் இதயம் வலுவாகிறது. நரம்புகள் பலவீனம் அடைவது தடுக்கப்படுகிறது. அடிக்கடி கோபப்படுகிறவர்களுக்கும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நெல்லிக்கனி அருமையான மருந்து. மூளையையும் இது குளிர்மைப்படுத்திவிடுகிறது■

# கல்லறையிலிருந்து கருவறைக்கோர் கடிதம்

கடவுளின் படைப்பாற்றலில் பங்கெடுக்க வாய்ப்பு கிடைக்கப்பெற்ற எனை ஈன்ற கருவறையே! காலத்தின் தேவையிது.. உன்னை நான் கண்ணீரோடு இங்கே நினைவுகூர்வது ஐயிரண்டு திங்கள் நீயெனை சிறை வைத்தாய் என்பதற்காகவே. நான் பாதுகாப்பாய் இருக்கிறேன் என்று நீ மகிழ்வுற்றாய். ஆனால்....

உன்னிலே ஏற்பட்ட மாற்றங்கள்... உன்னைச் சுற்றி வளைத்த போராட்டங்கள்.. உன் கருவறையில் இருந்தபோதே என்னைத் தீண்டத் தொடங்கியதை நீ அறியாய். உன்னிரத்தம் கலந்து, சதை பிடித்து பத்து மாதத்தில் வெளிவந்த என்னைச் சீராட்டினாய், பாலூட்டினாய், கடுமையும், வைராக்கியமும் சேர்த்தே ஊட்டினாய். இதை நீ அப்போது அறியவில்லை.

இப்போது மட்டுமென்ன?.. உன்னுணர்வில் வளர்ந்துவிட்ட என்னில் நீ எதிர்பார்த்தது எவ்வளவோ! பாலப்பருவத்தில் எனக்குள் ஏற்பட்ட உனது எதிர்பார்ப்புக்கள், பெரும் சுமைகளாகி இன்றும் என்னை அழுத்திக்கொண்டிருப்பது உனது புலமைக்கு எட்டாததுதான்.

நீதான் என்ன செய்ய முடியும்?... ஆனால்.... உனைச் சூழ்ந்த எண்ணக் கருக்கள் அத்தனையும், கருமேகங்களாக என்னைப் பற்றிப்பிடித்தது எந்தவிதத்தில் நியாயம்? உனது கருவறையை அத்திவாரமாகக் கொண்ட ஒரே காரணத்தால் - எனது கட்டடம் ஆட்டம் கண்டுவிட்டது. ஒவ்வொரு படிக்கற்களும் கடக்க முடியாத பெரும் பாறைகளாகி விட்ட கோரம் என் வாழ்வில்...

ஓ ... எனையீன்ற கருவறையே!... உயிரோடும், உறவுகளோடும் இன்று நான் நடத்தும் போராட்டம் அன்றே எனக்குத் தெரிந்திருந்தால் உன்னையே எனது கல்லறையாக்கிக் கொண்டிருப்பேன். வேதனையின் வடிவம் பெற்ற எழுத்துக்களாயினும் - இவை, நான் உருக்கொண்ட கருவறைபோல் இருக்கின்ற, இருக்கப்போகின்ற எத்தனையோ கருவறைகளுக்கு இது ஓர் அன்பான அழைப்பு.

உங்கள் கருக்களுக்கு உயிரையும் உண்மையையும் ஊட்டுங்கள். வாழ்வு வாழ்வதற்கெனும் நம்பிக்கையையும், சவால்களின்போது முகம் கொடுக்கும் பக்க பலத்தையும், சாகும்வரை உரமளிக்கும் தனிமையெனும் கொடுமைக்குள் சிக்கிவிடாதிருக்க உறவுகளை, உணர்வுகளை சரிப்படுத்தி விடுங்கள். சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட நீங்களே முதலில் வாழ்ந்துகாட்டி விடுங்கள். உங்கள் குடும்ப உறவை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இல்லையேல்... உங்கள் கருவறைகளே அவர்களுக்கு கல்லறைகளாய் அமையட்டும்.

ஓ!.. பாக்கியமான கருவறையே!... என்னை உயிரோடு கல்லறைக்குள் அடக்கம் செய்யக் கொடுத்து வைத்திருக்கிறாய். நீ என்னில் விதைத்துவிட்ட அத்தனையும் - இன்று விருட்சமானதால், அவை வளரவோ – வெட்டி வீழ்த்தப்படவோ இடம் இல்லாததால் இன்று நான் படும் அவஸ்தையிருக்கிறதே....!

எனினும் உனக்கு நன்றி.. பலகோடி நன்றி.

என் பாவப் பிறப்பிற்கும், வாழ்விற்கும், என் வேதனை நிறைந்த வாழ்வும் கண்ணீரும் பரிகாரமாக நீ வழி வகுத்துவிட்டாய். அதனால் உனக்காக... உன்னைப் படைத்துவிட்டதற்காக படைத்தவனுக்கு முதற்கோடி நன்றிகள். நான் சிந்தும் கண்ணீர் நீ விதைத்த விதைகளை அழித்துவிடும் வெள்ளமாகட்டும்.

நீ எனக்கென்றே கட்டிவிட்ட கல்லறைக்குள் வளரவும் முடியாமல், மடியவும் முடியாமல் முடங்கிக் போயிருக்கிறேன். இந்தக் கல்லறைகூட எனக்குப் பாதுகாப்புத்தரும் என்ற நம்பிக்கை துளிகூட இல்லை. அவ்வப்போது பல கற்கள் என் தலைமேல் .... அதுவும் உன் கை வன்மையே.. நீ வாழ வேண்டும் என்று வாழ்த்துவேன். உன் சாதனைக்கோர் சபாஷ்1.. ஆனால் ஓர் வேண்டுகோள்... என்னைப் போன்ற கருக்களை மட்டும் பிரசவிக்க வேண்டாம் என்பேன்.

*இவண் : கல்லறையிலிருந்து நீ ஈன்ற 'கரு'*

*தொகுத்துத் தருவது*

**- ரே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்.**

## பிஸ்கட் புடிங்

### தேவையான பொருட்கள்



பிஸ்கட் - 250 கிறாம்
மாஜரீன் - 250 கிறாம்
சீனி - 250 கிறாம்
முட்டை - 2
பால் - 1/2 கப்
வெனிலா - 1 தேக்கரண்டி
கொக்கோ பவுடர் - அளவாக
முந்திரிகைப் பருப்பு - அளவாக.

### செய்முறை :

மாஜரீனையும் சீனியையும் நன்றாக அடிக்கவும். முட்டையையும் சிறிது பாலையும் சேர்த்து அடிக்கவும். வனிலாவையும் கொக்கோ பவுடரையும் சேர்க்கவும். விரும்பினால் கலவையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு கொக்கோ பவுடரும் மற்றைய பகுதிக்கு விரும்பிய நிறத்தைச் சேர்க்கலாம். பின் ஒரு பாத்திரத்தின் அடியில் பிஸ்கட்டைப் பரவலாக அடுக்கி (கிறீம் இல்லாத பிஸ்கட் உகந்தது) அதன்மேல் சிறிது பாலைப் பரவலாக ஊற்றி அதற்கு மேல் கிறீம் கலவையை ஊற்றிப் பரவி விடவும். பின் திரும்பவும் பிஸ்கட்டை அடுக்கி பாலை விட்டுக் கிறீம் கலவையை ஊற்றிப் பரவிவிடவும். பின் திரும்பவும் பிஸ்கட்டை அடுக்கிப் பாலை விட்டு கிறீம் கலவையை ஊற்றிப் பரவவும். இவ்வாறே மாறி மாறிக் கலவை முடியும்வரை செய்து அதன் மேலே ஒடித்த முந்திரிகைப் பருப்பை தூவிக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். சில மணி நேரத்திற்குப் பின் பரிமாறலாம்.

# பெரியப்பா பதில்கள்





கே: பெரியப்பா, சிலருடைய சுடு சொற்களைத் தாங்கவே முடியவில்லையே? *அருட்செல்வன், வவுனியா.*

ப: உண்மைதான், அதனால்தான் பாம்புக்கு பல்லில் விஷம் மனிதனுக்கு சொல்லில் விஷம் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள் போலும்.

கே: தத்துவத் தமிழின் வித்தகரே பெரியப்பா, சிரிக்கவும் சிந்திக்கவும்கூடிய தத்துவம் ஒன்று சொல்லுங்களேன்? *செந்தூரன், எமில்நகர், மன்னார்.*

ப: ஐயோ என்னைப் புளுகாதைங்கோ.... , தத்துவமா..? ஒன்றென்ன பத்தும் சொல்லுவேன். ஆனால் இப்போதைக்கு இரண்டு. நீங்கள் தேடிவந்து என்னை அடிக்கக் கூடாது. சரியோ?

I. பத்து எறும்பு ஒரு யானையைக் கடிக்க முடியும். ஆனால் ஒரு யானை பத்து எறும்பைக் கடிக்க முடியாது.

II. கலண்டரில் தினமும் திகதி கிழிக்கலாம். ஆனால் அந்தத் திகதியில் நீங்கள் என்ன 'கிழித்தீர்கள்' என்பதுதான் முக்கியம்.

கே. : ஒவ்வொரு நாள் முடிவிலும் என்னுடைய ஆயுளில் ஒரு நாள் குறைகின்றதே என்று கவலைப்படுகிறேன் - எனக்கு என்ன சொல்கிறீர்கள்? (எனக்கு இப்போது 50 தாண்டிவிட்டது) *சின்னராசா, பண்டிவிரிச்சான்.*

ப. தோமஸ் அல்வா எடிசன் என்ற புகழ்பூத்த விஞ்ஞானி சொன்னதைத்தான் உங்களுக்கும் சொல்கிறேன். "என்னுடைய வயதை நான் வாழ்ந்த ஆண்டுகளைக்கொண்டு அளவிட விரும்பவில்லை. நான் செய்துமுடித்தவற்றைக் கொண்டே என் ஆயுளைக் கணக்கிடுகிறேன்." இப்ப சொல்லுங்கள் .... உங்களுக்கு எத்தனை வயது?

கே: சிலர் எப்போதும் மற்றவர்களில்தான் குறை கண்டு பிடிக்கிறார்கள். தம்மைப்பற்றி யோசிப்பதில்லையே பெரியப்பா? நிலக்ஷினி, பெரியகமம், மன்னார்.

ப: உண்மைதான். இந்தச் சம்பவத்தைப் பாருங்கள்.

தன் மனைவிக்கு காது சரியாக கேட்கவில்லையே என்று ஒருவனுக்கு சந்தேகம். அதை அவளிடம் கேட்பதற்கும் தயக்கம். அதனால் தன் குடும்ப டொக்டரிடம் ஆலோசனை கேட்கச் சென்றான், டொக்டர் ஒரு எளிய சோதனையை செய்து பார்க்கச் சொன்னார்.

"முதலில் இருபதடி தூரத்திலிருந்து பேசிப் பாருங்கள். பிறகு பதினைந்தடி, பிறகு பத்தடி, பிறகு ஐந்தடி, இப்படி தூரத்தைக் குறைத்துக்கொண்டே வந்து பேசுங்கள். எவ்வளவு தூரத்திலிருந்து காது கேட்கவில்லை என்று தெரிந்தால் அதற்கேற்றவாறு சிகிச்சை செய்யலாம்" என்றார் டொக்டர்.

வீடு திரும்பிய அவன், வீட்டு வாசலில் நின்றவாறே சமையலறையிலிருந்த மனைவியிடம் "என்ன சமையல் இன்றைக்கு?" என்று கேட்டான். மனைவியிடமிருந்து பதிலில்லை. வீட்டு முன்னறையிலிருந்து கேட்டான். அப்போதும் பதிலில்லை. இன்னும் கொஞ்சம் உள்ளே வந்து அதே கேள்வியைக் கேட்டான். அப்போதும் பதிலில்லை. "சரிதான், மனைவிக்கு காது கேட்கவில்லை. கிட்டப்போய் பேசுவோம். அப்போதாவது கேட்கிறதா பார்ப்போம்" என்று சமயலறைக்குள் போய் அதே கேள்வியைக் கேட்டான். அப்போதும் பதில் இல்லை. மனைவி கண்களில் கோபம்! "வாசலில் இருந்தே கேக்குறீங்க, நானும் சாம்பாரும் உருளைக் கிழங்கு பொரியலும்னு அஞ்சு தடவையா சொல்றேன். காதில விழலைய்யா?" என்றாள் மனைவி



கே.: பெரியப்பா, 'இடது கைப் பழக்கம் ஒரு குறை' என்று எனது நண்பன் வாதிடுகின்றான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? *- மதன், மட்டக்களப்பு*

ப : டெண்டுல்கர் இடது கைப்பழக்கம் உள்ளவர். ஆனால் வலக்கையினால்தான் பட்டிங் செய்கிறார். லியனாடோ டாவின்சி 'மோனாலிசா' ஓவியத்தை இடது கையினால்தான் வரைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இடது கைப் பழக்கம் ஒரு குறையல்ல.

கே: 'தமிழ் வாழ்க, தமிழ் வளர்க' என்றெல்லாம் கோசம் போடுகின்றார்களே, எனது தாய் மொழி தமிழுக்கு நான் என்ன நன்மை செய்யலாம்? *- வினோ, மட்டக்களப்பு*

ப: நன்மை செய்யலாமே! தமிழை சரியாக உச்சரிக்கவும், பேசவும், எழுதவும் முயற்சித்தால் அதுதான் தமிழுக்கு செய்யும் முதல் தரமான நன்மை. சிலருக்கு ண, ன பிரச்சினை, சிலருக்கு ற, ர பிரச்சினை.

கே: பெரியப்பா, தமிழ்த் திரைப்படங்களில் ஏன் குரூப் டாண்ஸ் அதிகம் வருகிறது? *நித்யானந்தன், நானாட்டான்.*

ப: எல்லாம் கூட்டத்தில் கோவிந்தா விளையாட்டுத்தான். தனி டான்ஸ் என்றால் அபிநயம் வேண்டும். நம் நடிகைகள் பலருக்கு அபிநயம் வராது. என்ன செய்வது? அதுதான் கூட்டத்தில் கோவிந்தா போடுகிறார்களாக்கும்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 07 - 1921



உதிர்வு 07 - 06 - 2003

### அமரர் சந்தான் செபமாலை
### (இளைப்பாறிய குள அதிகாரி)
### கண்டல்

"ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன் ஒரு நாளும் நான் ஏமாற்றமடைய விடாதேயும்"

பொறுமையும், அமைதியும் வாழ்வின் இலக்கணமாய் கொண்டு பாசத்துடன் ஒழுக்கத்தைக் கற்பித்து வளர்த்திட்ட அன்புத் தெய்வமே, எம் பார்வைபட்ட இடமெல்லாம் உம் பாதம் பட்ட நினைவுகள் மறக்க முடியவில்லையே.

*உம் பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 07.06.2006 அன்று புதன்கிழமை காலை 5.45 மணிக்கு மன்னார் புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 02 - 11 - 1949



உதிர்வு 11 - 06 - 2004

### திரு. சூசை கபிரியேல் (J.P)

அன்பின் திருவுருவாய்,
பொறுமையில் பூமித்தாயாய்,
அறிவில் நல் ஆசானாய்,
எம் மத்தியில் வாழ்ந்து சென்ற எம்
ஒளிச்சுடரே அப்பா!
அருள் நிறை மரியின் அருளும்
ஆசீரும் பலவேண்டி, ஆண்டவன்
பாதம் நித்தமும் பணிந்து, நித்திய
சாந்தியை நித்திய தேவன் தங்களுக்கு
ஈர்ந்திட வேண்டுகின்றோம்.

*இவரது பிரிவினால் துயருறும் மனைவி, பிள்ளைகள்.*

## 6ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 03 - 1936



உதிர்வு 05 - 06 - 2000

### நீ. சந்தியாப்பிள்ளை
### (ஓய்வு பெற்ற அதிபர்)
### ஒலிமடு, நானாட்டான்.

அன்பினை ஆறாக அள்ளி வழங்கிய அருமைப் பப்பாவே, ஆண்டுகள் ஆறு ஆனாலும் உங்கள் அன்பு முகம் எம் மனக்குகைக்குள் நீங்கா வண்ணமே உள்ளது. பாசமே உருவான உங்கள் பண்பால் ஈர்க்கப்பட்ட நாங்கள் பரிதவிக்கின்றோம் உங்கள் அன்புக்காக! எப்போது இனி அந்த அன்பு கிடைக்கும்? அறியாமை என்னும் இருள் அகற்றி அன்பு ஆசானாய், நல் அதிபராய் திகழ்ந்தது மட்டுமின்றி வழிகாட்டும் நல்ல ஆயனாகவும் எம்மை வழிநடத்தினீர்களே, இடை நடுவில் விண்ணுலகை மகிழ்விக்க பறந்து விட்டீர்களே! உயிர் உள்ளவரை உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காய் வேண்டி நிற்போம்.

*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 04 - 09 - 1928



உதிர்வு 11 - 05 - 2006

### திரு.செபமாலை அறுக்காஞ்சி
### (அல்பிரெட் - பெரியகமம், மன்னார்)

"நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டுத் தந்தையிடம் செல்கிறேன்". எம் வாழ்க்கைப் பயணத்தில் எம்மோடு கலந்துவிட்ட எம் அன்புருவே ஐயா! நாங்கள் வளமோடு வாழ உம் சக்தியெல்லாம் எமக்காக அர்ப்பணித்ததை எம் நெஞ்சம்தான் மறக்குமா? 'ஐயா' என்றழைக்கும் அன்பு வார்த்தைகள் எம் நெஞ்சமதை வாட்டுகின்றதே! 'மக்களே' எனக்கூறும் இனிய வார்த்தைகள் மௌனமாக மறைந்ததன் காரணம்தான் என்னவோ?

உயிர் உள்ளவரை உம் நினைவில் வாழும,

*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

இவர் யாழ் குருநகரைப் பிறப்பிடமாகவும், யாழ் நாவாந்துறையை வசிப்பிடமாகவும், தற்போது மன்னாரில் வசித்தவருமாவார்.

*தகவல்: மகன் அ. செலஸ்ரீன்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 05 - 12 - 1936



உதிர்வு 01 - 05 - 2006

### திருமதி. மேரி புலோறன்ஸ்
### (தலைமன்னார் பியர்)

அன்புக்கு ஓர் அன்னையாக, பாசத்தின் கவசமாக, நேசத்தின் உறைவிடமாக, இடர்கள் பல தாங்கி தூய மரியாளின் விசுவாசியாய், பொறுமையின் இருப்பிடமாய் வாழ்ந்து நாம் நினையாத நேரம் இறைவனடி சென்ற அம்மா!

சொந்தங்கள் உறவுகள் தேவை என்று எம் மண்ணில் கால்பதித்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றது அம்மா! பிரிந்த நாம் இணைந்தோம் என நிம்மதி அடைந்த நாம் இப்போ உம் இழப்பை ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றோம்.

என்றும் எம்முடன் காலமெல்லாம் எம் எண்ணங்களிலும், நினைவுகளிலும் வாழ்கின்றீர்.

அன்பான தாயே, உங்கள் பிரிவால் இதயம் கசிந்து உருகுகின்றோம். உங்கள் ஆன்மா இறைவனின் பாதத்தில் இன்புற்றிருக்க இறைவனை வேண்டுகின்றோம். ***இவரின் பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரன் பேத்திகள்.***

## 31ம் நாள் நினைவு

மலர்வு 25 - 08 - 1972



உதிர்வு 28 - 04 - 2006

### குணரட்ணம் கோல்டன் (ஞானம்)
### (கள்ளிகட்டைக் காடு)

அன்பின் அகல் விளக்காய், பாசத்தின் பண்பாளனாய் குடும்பத்தின் குல மகனாய், உறவுகளின் உன்னதனாய் உறவுகள் கொண்ட குடும்பச் சக்கரத்தில் அச்சாணியாக அயராது உழைத்தீர் விழுது விட்ட ஆலமரம் வேரோடு சரிந்ததுவே,

மாமலை ஒன்று மண்மீது சாய்ந்ததுவே பெற்ற தாய் பரிதவிக்க அருமை மனைவி தவித்து நிற்க அன்புக் குழந்தைகள் ஏங்கி அழ பாசச் சகோதரர் கதிகலங்கி நிற்க கொடியவர்கள் உன் உயிரைக் கொள்ளைகொண்டு சென்றனரோ. காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா! இறைவனின் சந்நிதியில் உங்கள் ஆன்மா இன்புற்றிருக்க இறைஞ்சுகின்றோம். **பிரிவால் துயருறும் அன்புத்தாய், மனைவி, குழந்தைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.** தகவல்: சகோதரி குணரட்ணம் கமிலா, கள்ளிகட்டைக்காடு.

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 - 04 - 1950



உதிர்வு 28 - 06 - 2003

### சந்தியோகு யேசுதாசன்
### (நிர்மலா இரும்பு உதிரிப்பாக விற்பனை நிலைய உரிமையாளர்)
### முருங்கன்

மூன்றாண்டு கடந்துமென்ன
உம் நினைவு என்றும் வற்றாது.
உறவுடன் கலந்து நாளும்
பாச வலையில் தவிக்கின்றோம்.
எம்மை ஆளாக்கி வாழ வைத்து
விண்ணுலகம் சென்றனையோ?
உம் மதி வதனம் என்றும்
எம் நெஞ்சைவிட்டு மாறாது.
உம் ஆன்ம சாந்திக்காய் தினமும்
இறைவனை வேண்டுகிறோம்.

*உம் பிரிவால் வாடும் - மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 21வது உலக இளைஞர் ...

10ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்த வருடம் 2007ல் நாம் யோவான் நற்செய்தியிலிருந்து "நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" (13:34) என்னும் வார்த்தைகளை எமது தியானத்திற்கு எடுப்போம். அன்பின் ஆவியானவரும், தெய்வீக அன்பை எமக்குள்ளே உட்புகுத்தி, எமது சகோதரர், சகோதரிகளின் உலக, ஆன்மீக தேவைகளுக்கு விழிப்புள்ளவர்களாயிருக்க எம்மைத் தூண்டியெழுப்புபவருமான பரிசுத்த ஆவியைப் பற்றி இன்னும் அதிகமதிகம் கண்டறிவோம்.

எனது இளம் நண்பர்களே! இப்பொழுது தொடக்கம் இறைவார்த்தைக்குத் தொடர்ச்சியாகச் செவிமடுக்கும் சூழலில், பரிசுத்த ஆவியை, பொறுமையினதும் சாட்சியத்தினதும் ஆவியை அழையுங்கள். அவ்வாறாயின் நீங்கள் உலக முடிவுவரைகூட எவ்வித அச்சமுமின்றி நற்செய்தியைப் பறைசாற்றக்கூடியவர்களாயிருப்பீர்கள்.

அப்போஸ்தலர் பெந்தக்கோஸ்து தினத்திற்காக செனாக்கொலுவில் காத்துக்கொண்டிருந்தபோது அன்னை மரியாள் அவர்களுடனிருந்தாள். அவளே உங்களது அன்னையாகவும், வழிகாட்டியாகவும் இருப்பாளாக. நான் செபத்தில் உங்களுடன் இணைந்திருப்பதுடன், எனது முழு இதயத்துடன் உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது ஆசீரை அளிக்கின்றேன்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 50

## 1 சாமுவேல் - அதிகாரம் 11 - 20

உங்கள் விடைகளை 10. 07. 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | * | * | | | | | 03 | | |
| | 04 | | | 05 | | | | | | |
| 06 | | | * | | | 07 | * | | | |
| | * | | | | 08 | | | | 09 | |
| | | | | 10 | | | | | | * |
| | | 11 | * | | | 12 | | | | |
| | | | 13 | | | | | * | | |
| | | | | | | | | | | |
| | 14 | | | | * | | | 15 | | |
| 16 | | | | | * | | 17 | | | 18 |

### இடமிருந்து வலம்

1. மக்கள் அனைவரும் கில்காலுக்குச் சென்று அங்கே ஆண்டவர் திருமுன் சவுலை அரசராக்கி ....................ப் பலிகளைச் செலுத்தினார்கள்.
4. நீரோடையிலிருந்து வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்தெடுத்து இடையனுக்குரிய தம் பையில் ...............க் கொண்டார்.
5. இவன் ...................... யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை.
6. அங்கே தம் சகோதரர்களைக் .................. நலம் விசாரித்தார்.
10. அவர் ............ இடமெல்லாம் அழிவை விளைவித்தார்.
12. நீ வெளியில் ................. சமயத்தில் நான் என் தந்தையின் அருகில் இருந்துகொண்டு உன்னைப்பற்றி அவரிடம் பேச்சுக் கொடுப்பேன். (4ம் 5ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
14. ஈசாய் ஆளனுப்பிய அவனை .................. வந்தார். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
15. எனக்கும் சாவுக்கும் .............. அடி தூரம்தான் உள்ளது.
16. என் கையிலிருந்த கோலின் .................... கொஞ்சம் தேன் எடுத்துச் சுவைத்தேன்.

### மேலிருந்து கீழ்

1. ஏனெனில் ஆண்டவர் கட்டளையின்படி நீர் ......................
2. ஆண்டவரின் வார்த்தையை நான் .................... விட்டேன்.
3. கீழ்ப்படிதல் ...................... விடச் சிறந்தது.
8. ஏனெனில் அவன் ................ நான் உணவருந்த மாட்டேன்.
9. மக்கள் எல்லாரும் மற்றும் சவுலின் அலுவலர்களும் இதைப் பெரிதும் .................
10. ஆண்டவரும் உம்மை இஸ்ரயேலின் அரசராகத் ............. செய்தார்.
11. இன்றே ஆண்டவர் உன்னை என் ................ ஒப்புவிப்பார்.
12. ஆதலால் மீக்கால் தாவீதைப் பலகணி வழியாக ............... விடவே அவரும் அங்கிருந்து ஓடித் தப்பித்துக்கொண்டார்.
13. தாவீது தம் பையில் கை.............. ஒரு கல்லை எடுத்தார்.

### வலமிருந்து இடம்

2. இப்பொழுது ஆண்டவர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யவிருக்கும் மாபெரும் .................... நின்று பாருங்கள்.
3. மேலும் ஈசாயையும், அவர் புதல்வரையும் தூய்மைப் ......... .................ப் பலியிட வருமாறு அழைத்தார்.
7. தாவீது தம் .................க் கையில் எடுத்துக்கொண்டார்.
8. சாமுவேல் மனம் ............... இரவெல்லாம் ஆண்டவரிடம் மன்றாடினார்.
9. சவுல் குருவிடம் "உன் கையை ............க் கொள்" என்றார்.
10. சவுல் வீரர்களைத் .................... அவர்களைத் தெலாமியில் கணக்கெடுத்தார்.
18. தாவீது .................... முன்னின்று நடத்தினார்.

### கீழிருந்து மேல்

4. ஏனெனில் ................ வேடிக்கை பார்க்கத்தான் நீ இங்கு வந்துள்ளாய்.
9. பயனற்ற, ................. இயலாத சிலைகளை நாடிச் செல்ல வேண்டாம்.
10. ஆண்டவர் முன்பும் அவர் ............... செய்தவர் முன்பும் என்மீது குற்றம் சாட்ட முடியுமா?
14. தாவீது சவுலிடம் வந்தவுடன் ........... ....ப் பணியில் சேர்ந்து விட்டார்.
15. நீ ..................... நான் எய்கிற அம்புகளை எடுத்துவா.
16. மக்கள் காட்டினுள் ............... போது தேன் ஒழுகிக் கொண்டிருந்தது.
17. நாளை இதே நேரத்தில் அல்லது மூன்றாம் நாளில் என் தந்தையின் ................. அறிவேன்.
18. அவருடைய தந்தை ...................த் திரும்பிப் போக இசைவு அளிக்கவில்லை.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.49ற்கான முடிவுகளை, 2006ம் ஆண்டு ஜூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## உங்கள் கவனத்திற்கு!

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்க வேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை தெளிவாக அறியத்தருகின்றோம். நீங்காத நினைவுப் பகுதியில் இடம்பெறும் மரண அறிவித்தலுக்கான கட்டணமாக ரூபா 1500 அறவிடப்படும்.

- பதிப்பாசிரியர் -

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## மன்னா அபிமானிகளே!

இறந்து போன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக புதிய வருடத்தில் இருந்து ரூபா 1500 அறவிடப்படும்.

மன்னாவின் பக்கங்களை நாம் அதிகரிக்கின்ற போதும், மன்னாவின் விலையை அதிகரிக்கவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள்.

எனவே இந்த மேலதிக செலவை மேற்கூறிய விளம்பரங்கள் மூலம் ஈடுசெய்ய விரும்புகின்றோம். எனவே மன்னா அபிமானிகள் எம்மோடு ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம்.

- மன்னா நிர்வாகம்.

## அனைத்துத் தொடர்புகளுக்கும்



**பதிப்பாசிரியர்,**
**மன்னா**
**திருமறைப்பணி நிலையம்,**
**புனித செபஸ்ரியார் வீதி**
**மன்னார்.**



**The Editor,**
**MANNA**
**Pastoral Centre,**
**St. Sebestian's Street**
**Mannar, Sri Lanka.**

தொலைபேசி. இல. 023 - 2232377

# பொன்விழா வாழ்த்து



**திரு. திருமதி. ஜெ.**
**அந்தோனிப்பிள்ளை சரோஜா**
**தம்பதியர் (முதலியார்குளம்)**

**13.06.1956**

இல்லறம் என்னும் நல்லறம் தன்னில் இனிய
ஐம்பதாண்டினை நிறைவு செய்யும்
எம் அன்புப் பெற்றோரே!
இன்றுபோல் என்றும் வாழ்வாங்கு வாழ்ந்திட
இறைவன் திருவருளை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

**உங்கள் அன்புப் பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார்**
**உறவினர், நண்பர்கள்.**

*தகவல்: ஆனந்தராஜா வினோத்.*

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 48ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*

அ. யுவதினா,
தலைமன்னார் கிராமம்,
தலைமன்னார்.

*இரண்டாம் பரிசு*

ஆர்.ஜெனோவா மேரி,
இல. 21/2
றொஹோம்டன் தோட்டம்,
அப்புத்தளை.

*மூன்றாம் பரிசு*

திருமதி.பேரின்பநாயகம்,
"வசந்தம்"
ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 183 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 159 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.48ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. வி. ரமிலா, துடரிக்குளம் வீதி, செட்டிகுளம், வவுனியா.
2. செ. மரிய தர்சினி, கண்டல், அடம்பன்.
3. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
4. லீ. டெய்சி, புனித செபஸ்ரியார் கோவில் வீதி, பெற்றா, மன்னார்.
5. அ. மெரின் லக்ஷலா, சாளம்பன், கல்மடு, வவுனியா.
6. எம். றீற்றா, இல . 33, புனித லூசியா வீதி, கொழும்பு - 13.
7. ச. யூடிற்றா (யூடி) அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
8. ஆ. றதனா, இல. 07, மடுக்கோவில், மடு.
9. ஏ. றஞ்சித் யூஜின் பீரிஸ், டோமினிக் வீதி, முத்தரிப்புத்துறை.
8. றெ. ஜோர்ஜ் ஸ்ரீவின்சன், கங்காணி தீவு, நானாட்டான்.
9. எஸ். செலஸ்ரினா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
10. பீ. ஒகஸ்ரினா, இல. 25/1, ராணி மில் வீதி, இறம்பைக்குளம்.வவு.
11. ஆ. லக்ஸனா, இல. 7, மடுக்கோவில், மடு.
12. லா. கிறேஸ் ஜொஸ்பின், யூனிற் - 5 (29), வாரிக்குட்டியூர், வவு.
13. ந. ஜெகப்பிரியன், புதுக்கமம், உயிலங்குளம்.
14. ஆர். றெஜினோல்ட், பனங்கட்டு கொட்டு கிழக்கு, மன்னார்.
15. கே. சுபலெட்சுமி, இல. 173. மடுக்கரை, நானாட்டான்.
16. என். கார்த்திகா, பனங்கட்டு கொட்டு கிழக்கு, மன்னார்.
17. அ. மேரி அன்ரனியா (தர்சினி), முத்தரிப்புத்துறை.
18. பி. யாக்லின் பறுனாந்து, தரம் - 11, 8ம் வட்டாரம், பேசாலை.
19. ம. விக்ரர் சாள்ஸ், குமானாயங்குளம். அடம்பன்
20. ய. இ. ஷால்பன், சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வட., யாழ்.
21.அ.ஜேம்ஸ் மில்லர், சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக், யாழ்..
22. சகாயதாசன் கிறிஸ்ரின், தரம் -10, படகுதுறை, இலுப்பக்கடவை.
23. தே. யேசு பிரிட்டன், பள்ளக்கமம், முருங்கன்.
24.அ.ஜெ.ஆன் சியாந்தனா, தரம்-8, மன்.புனித.சவே.பெண்.பாட, மன்.
25. ஜெ. றேபனா, தரம் - 9, அந்தோனியார் புரம்.
26. பி. பெனில், தோட்டவெளி, மன்னார்.
27. பி. மேரி பஸ்ரீனா, நெடுங்கண்டல், அடம்பன்.
28.பே. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
29. செ.வளன் நியூமன் துரம், மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.
30. திருமதி. அகத்தா குரூஸ், சின்னக்கடை, மன்னார்.
31. ஐடா பற்றிக், இல . 146, சின்னக்கடை, மன்னார்.
32. ஆர். திருச்செல்வி, புனித யூதாததேயு ஆலயம், பசறை.
33. பே. நிலுக்சன் பிகிறாடோ, பள்ளிமுனை.
34. எம். கீர்த்தி ரில்மினி, கோயில் வீதி, உயிலங்குளம்.
35. எம். ஆன் மதுஷிக்கா, சிறுக்கண்டல், முருங்கன்.
36. ம. நிர்மல ரூபினி (ஜென்சி), சுண்டுக்குளி, முருங்கன்.
37. யோ. அன்ரனி டிலைக்ஷன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
38. ம.ய.பிரபாகர், பறப்பாங்கண்டல் பெரிய குளம், உயிலங்குளம்.
39. ஆ. டயாளினி, மாதிரிகிராமம், வங்காலை.
40. எம். பிலிப் பெர்ணடேற், முருங்கன் பிட்டி, முருங்கன்.
41. அ. கத்தறினாள், தன்னார்வப் பணியாளர், பெரியமுறிப்பு, முரு.
42. திருமதி. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
43. ஆ. சந்தான், கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
44. அ. மரிய குமாரி, சென் ஜேம்ஸ் வீதி, விடத்தல்தீவு.
45. திருமதி.றொகான் வயலட், புனித யூதாததேயு, திருத்தலம், பசறை.
46. ஏ. நிறோஷா பீரிஸ், அரிப்பு, சிலாபத்துறை.
47. அ. ஜெயந்தி, வாழ்க்கைப் பெற்றான் கண்டல், முருங்கன்.
48. மரிசால் லின்ரா, பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல்.
49. அ. கரோலின் கிர்த்திகா, 70 பேராலய வீதி, திருகோணமலை.
50. ஜெ. ஏ. பிறிற்றோ, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.

## ஆக்கங்களை அனுப்புவோரின் கவனத்திற்கு!

நீங்கள் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம். ஒரே கவருக்குள் வைத்தும் அனுப்பலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரே தாளில் எழுதப்படாமல் தனித்தனித் தாளில் எழுதப்பட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு ஆக்கத்தையும் அதற்குரிய கோப்புகளுக்குள் (File) வைக்க முடியும். ஒரே தாளில் 3 விடயங்களை எழுதினால் (உதாரணத்திற்கு பெரியப்பா பதில், நகைச்சுவை, கவிதை) அந்த தாளை - பேப்பரை எந்தக் கோப்புக்குள் வைப்பது என்ற சிக்கல் எழுகின்றது. எனவே எழுத்தாளர்கள் தனித்தனி தாளில் எழுதி (விரும்பினால் ஒரே கவருக்குள் சேர்த்து வைத்து) அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பாசிரியர்

மன்னா

# குருத்துவம் தனிப்பட்ட ஆதாயத்திற்காக அல்ல!

## திருத்தந்தை 16ம் பெனடிக்ற் வலியுறுத்துகிறார்

"குருத்துவம் என்னும் திருவருட்சாதனம் தனிப்பட்ட ஒரு நபரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாழ்வு முறையாகக்கூடாது" என்று திருத்தந்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கையானா என்ற நாட்டிலிருந்து தன்னைச் சந்திக்க வந்த ஆயர்களிடம் பேசிய திருத்தந்தை "குருத்துவம் அல்லது துறவறம் மற்றவர்களுக்கான தற்கையளிப்பே. மேலும் குருத்துவம் பெறும் நபர்கள் திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்துவுடன் இணைந்த வாழ்வு வாழவும், தங்களது இறை மக்களாகிய சகோதர சகோதரிகளுக்குத் தங்களையே கையளிக்கவும் அழைக்கப்பட்டுள்ளனர்" என்று கூறினார். "இறைதிட்டத்தின்படி குருத்துவத்தை ஏற்பவர்கள் ஒருபோதும் அதனால் தங்களின் சமூக அந்தஸ்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள முயல மாட்டார்கள். குருத்துவத்திற்கு நல்ல உறுப்பினர்களை தேர்வு செய்ய முறையான குருத்துவப் பயிற்சி அளித்து உண்மையான குருக்களை உருவாக்குவது ஆயர்களின் முக்கியமான பணியாகும்" என்றார் திருத்தந்தை.



## அமெரிக்க அதிபர் புஷ்ஷின் மனைவி, மகள் திருத்தந்தையைச் சந்தித்தனர்

கடந்த பெப்ருவரி 2 ஆம் திகதி, வத்திக்கான் வந்த அமெரிக்க அதிபரின் மனைவி லாரா புஷ் மற்றும் அவரது மகள் பார்பரா திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ரைச் சந்தித்தனர். திருத்தந்தை அவர்களுடன் தனியாகச் சந்திப்பு மேற்கொண்டு, அவர்களை வத்திக்கான் மாளிகையில் பல இடங்களுக்கும், குறிப்பாக வத்திக்கான் நூலகத்திற்கும் அழைத்துச் சென்று காண்பித்தார். இந்த வத்திக்கான் பயணம் சாதாரணமானது என்றும், திருத்தந்தையை மரியாதை மற்றும் பாசத்தின் நிமித்தமே பார்த்தோம் என்றும் லாரா புஷ் கூறியுள்ளார்.

## திருமலை மட்டுநகர் மறைமாவட்ட
## ரஜீவன் அடிகளாருக்கு 'ரைம்' சஞ்சிகை கௌரவம்

திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்தைச் சார்ந்த திருக்கோவில் பங்குத்தந்தை சேவியர் இருதயராஜ் ரஜீவன் அடிகளார் "ரைம்' என்ற அமெரிக்க சஞ்சிகையால் கௌரவிக்கப்பட்டுள்ளார். ஆபத்து வேளையின்போது அபயமளிப்பதில் முன்னின்று உழைப்பவர்களில் ஒருவராக 2005ஆம் ஆண்டில் ரஜீவன் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின்போது அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் மகத்தான பணியாற்றியமைக்காக 2005ஆம் ஆண்டின் கதாநாயகர்களில் ஒருவராக அமெரிக்க "ரைம்" சஞ்சிகையினால் தெரிவுசெய்யப்பட்டு இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். சுனாமி அனர்த்தத்தின்போது குற்றுயிராகக் கிடந்த 70 பேரை அருட்தந்தை காப்பாற்றியிருந்தார். அத்துடன் 200 உடல்களை மீட்டதுடன் 750 உடல்களை அடக்கம் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வேறு நாடுகளில் இருந்தும் மேலும் நான்கு பேர் கடந்த ஆண்டின் கதாநாயகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

## வத்திக்கான் ஊழியர்களின் 10 குழந்தைகளுக்கு திருத்தந்தை திருமுழுக்களித்தார்

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் வழக்கத்தைத் தொடர்ந்து, திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் 10 குழந்தைகளுக்கு ஜனவரி 8ஆம் திகதி திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனத்தை வழங்கினார். இவர்கள் வத்திக்கானில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திருமுழுக்குத் திருப்பலி வத்திக்கான் சிஸ்டைன் சிற்றாலயத்தில் நடைபெற்றது. இந்தச் சிற்றாலயத்தில்தான் திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் நிகழ்ச்சி நடைபெறும். இங்குதான் இன்றைய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படும் திருப்பலிக்கும், திருமுழுக்குத் திருப்பலிக்கும் நிறைய வேறுபாடு உள்ளதை திருத்தந்தை, "தேர்தல் திருப்பலியில் இறுக்கம் இருந்தது. ஆனால், இந்தத் திருப்பலியில் குழந்தைகளின் அலறல்கள் இருந்தது." என்று கூறினார். குழந்தைகளின் அழுகை அலறல்களை இன்னிசையாக ரசித்த திருத்தந்தை குழந்தைகளின் தாய்மார்கள் அழுகையை அடக்க முயற்சித்ததையும் கவனித்தார். திருமுழுக்குப் பெறும் குழந்தைகளின் குட்டி அண்ணன், அக்காமார்களின் காணிக்கைப் பவனியில் பங்கெடுத்தபோது திருத்தந்தை புன்முறுவலுடன் காணப்பட்டார்.

## மறைந்த திருத்தந்தையை சுட்ட கைதி
## விடுதலையாகி மீண்டும் கைது

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 1981 இல் தமது பொதுப் பேட்டியின்போது, துருக்கியைச் சார்ந்த தீவிரவாதி முகமது அலி அகா என்பவனால் சுடப்பட்டு பலத்த காயமடைந்தார். பல மாதங்கள் சிகிச்சைக்குப்பின், குணமடைந்தார். குற்றவாளி அகா சிறையில் அடைக்கப்பட்டான். அவனைச் சிறையில் சந்தித்து திருத்தந்தை மன்னிப்பு வழங்கினார். ஆனால், சட்டம் தன் பணியைத் தொடர சிறையிலிருந்தான்.

அகாவின் தாய், "ஆண்டுதோறும் துருக்கியிலிருந்து உரோமைக்கு வந்து என் மகனை சிறையில் சந்திப்பது கடினமாக உள்ளது. எனது மகனை துருக்கி சிறைக்கு மாற்றுங்கள்" என்று வேண்டியதால், அவன் துருக்கிக்கு மாற்றப்பட வத்திக்கான் 19 ஆண்டுகளுக்குப்பின், ஒப்புதல் வழங்கியது. அகாவின் சிறைக்காலம் கடந்த ஜனவரி 12 ஆம் திகதியுடன் 25 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி, தன் மகனை விடுதலை செய்யும்படி, அவனது தாய் வேண்டினார். அதன்படி ஜனவரி 12 ஆம் திகதி, வத்திக்கான் ஒப்புதலுடன் துருக்கி அரசு அகாவை விடுதலை செய்தது. ஆனால் அகா ஏற்கனவே செய்த கொலை வழக்கிற்காக மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.



1981ம் ஆம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி துருக்கி நாட்டு பய்ங்கரவாதி முகமது அலி அகாவினால் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் சுடப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெறுகிறார். வலது பக்க மூலையில் அலி அகா.

## பற்றிமா அன்னையின் காட்சி பெற்ற
## அருட்சகோதரி லூசியாவின் பூதவுடல் போர்த்துக்கல் பத்திமாபதிக்கு இடமாற்றம்



*கடந்த பெப்ரவரி மாதம் 19ம் திகதி பத்திமா அன்னையின் காட்சி பெற்றவர்களில் மூன்றாவது நபராகிய அருட்சகோதரி லூசியாவின் பூதவுடல் அவரது சொந்த இடமாகிய போர்த்துக்கல் நாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டு காட்சிபெற்ற முன்னைய இரண்டு சிறுவர்களோடு சேர்த்து அடக்கம் செய்யப்பட்டது. கடந்த மே மாதம் 13ந் திகதி அன்று பத்திமா அன்னை காட்சி கொடுத்த 89வது ஆண்டு நிறைவுநாள் ஆகும். போர்த்துக்கல் நாட்டின் பத்திமா நகரத்திற்கு இவ்வாண்டு மே 13ல் மிகப்பெரும் யாத்திரிகர் கூட்டம் வந்திருந்தது. இதற்குக் காரணம் பத்திமா அன்னையின் காட்சி பெற்ற மூன்றுபேரின் பூதவுடல்களும் தற்போது ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருப்பதேயாகும்.*

## அருள் ஆச்சிரமத்தில் தியான இல்லம்

யாழ்ப்பாணத்தில் உள்ள அருள் ஆச்சிரமத்தில் பொது நிலையினருக்கான தியான இல்லம் கடந்த 25.03.2006 அன்று யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் ஜே. நீக்கிலஸ் அடிகளாரால் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது.

தியான யோக வாழ்வின் அனுபவங்களை மக்களோடு பகிர்ந்துகொள்வதன் வழியாக மக்களும் செபமாலைத் தாசர்களின் செபவழிபாடுகள், ஆராதனைகளில் பங்குகொண்டு இறை அனுபவ வாழ்வை வாழ்ந்து இறைவனின் அருளை என்றும் பெற்று வாழ வேண்டும் என தந்தை தோமஸ் அடிகளார் விரும்பினார் என நீக்கிலஸ் அடிகளார் சுட்டிக்காட்டினார்.

தற்போது தோலகட்டி ஆச்சிரமத்தின் கிளை மடமாகிய யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் வண. தோமஸ் அடிகளாரின் தியான இல்லம் புதிதாக அமைக்கப்பட்டு மாதம்தோறும் 3ஆம் சனிக்கிழமைகளில் பொதுத்தியானம் காலை 9 மணியிலிருந்து மதியம் 1 மணிவரை நடைபெறுகின்றது.

## செபமாலை தாசர் சபைக்கு நான்கு தியாக்கோன்கள்

செபமாலைத்தாசர் சபையில் நான்கு அருட்சகோதரர்கள் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் யோசப் செல்வன், யாழ்ப்பாண்ம் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் மரியநாயகம் அருள்தாஸ், யாழ்ப்பாணம் வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தை சேர்ந்த அருட்சகோதரர் இயூஜின் றெஜினோல்ட், யாழ்ப்பாணம் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் மரியதாஸ் லியோனிஸ் ஆகியேரே இவர்கள் ஆவர்.

ஏப்ரல் மாதம் 27ம் திகதி கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் வியானி பெனான்டோ ஆண்டகை அவர்களால் கண்டி அம்பிட்டியாவில் அமைந்துள்ள செபமாலைத்தாசர் கல்வியக சிற்றாலயத்தில் இவர்கள் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். இத்திருத்தொண்டர்களின் திருப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## செபமாலைத்தாசர் துறவற சபையின் அதி உயர் தலைவராக பொறுப்பேற்கும்
## ஸ்ரீபன் அடிகளாரின் பணி வாழ்வு – ஓர் பார்வை

யாழ் மாவட்டத்திலுள்ள கடல் அலைகள் தாலாட்டும் சிற்றூராம் நாவாந்துறையை சேர்ந்த ஸ்ரீபன் அடிகளார் இறைபக்தியும், நற்பண்புகளும் நிறைந்த திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வனாக 05-07-1952இல் பிறந்தார். சிறுவயதிலிருந்தே மரியன்னையின் தாசனாக பக்தியிலும், பண்பிலும் செப, தபத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கினார்.

இக்காலங்களில்தான் இவருக்கு இறையழைப்பின் விதை அவரின் இதயத்தில் விதைக்கப்பட்டது. இறையழைப்பின் மேன்மையை உணர்ந்தவராய், தோலகட்டியில் செப, தபங்கள் மூலம் இறை மகிமைக்காக வாழ்ந்து வந்த செபமாலைத்தாசர் துறவற சபையில் தன்னை இணைத்துக்கொண்டார்.

தனது ஆரம்ப துறவு பயிற்சிகளை இலங்கையில் முடித்துக்கொண்டு ஏனைய உயர் பயிற்சிகளுக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இந்தியாவில் இச்சபை பற்றிய ஆழ்ந்த அறிவையும் அனுபவத்தையும் பெற்று துறவு வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து 1975 பெப்ரவரி மாதம் 2ம்திகதி இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்தார். துறவு வாழ்வினுள் முழுமையாக நுழைந்த அவர் குருத்துவ பயிற்சியினைத் தொடர்ந்தார். மெய்யியல் கல்வியை பெங்களூர் தர்மாரம் கல்லூரியிலும் இறையியல் கல்வியை பெங்களூர் கார்மேலாரம் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். குருத்துவப் பயிற்சியினை நிறைவுசெய்து பெங்களூர் புனித இராயப்பர் கல்லூரியிலே திருத்தொண்டர் பட்டம் பெற்று தனது சொந்த நாடாகிய இலங்கை திரும்பினார். அன்றைய யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் 1980 மே மாதம் முதலாம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது முதல் பணியாக தோலகட்டி செபமாலை மாதா ஆச்சிரமத்தில் அதிபராக அவர் பதவியேற்றார். பின்னர் 1986ம் ஆண்டு இலங்கை செபமாலைத் தாசர்களின் மாகாண அதிபராக நியமிக்கப்பட்டார். அவரது ஒவ்வொரு பணியையும் தூய ஆவியின் ஆற்றலால் திறம்பட ஆற்றினார். இலங்கைவாழ் செபமாலைத் தாசர்களை ஆன்மீக வழியிலும் செப தபத்திலும் சிறந்த முறையில் வழிநடத்தினார்.

1988இல் யாழ் அருள் ஆச்சிரம அதிபராகப் பணியேற்றார். நம் நாட்டில் பணிபுரிந்த அடிகளாருக்கு இந்திய நாட்டிலும் பணிகள் காத்திருந்தன. 1990ம் ஆண்டு மார்ச் 25ம் திகதி இந்தியாவில் திருச்சி மறைமாவட்ட புஷ்பவன ஆச்சிரம அதிபராகவும், நவத்துறவு ஆசிரியராகவும் கடமையாற்றச் சென்றார். அங்கும் இல்லத்தில் வாழ்ந்த துறவிகளை அன்புடனும் சபை வாழ்வின் வழிகாட்டலுடனும் பயிற்றுவித்தார்.

இப்பணிகளுடன் சபை உயர்தலைவரின் ஆலோசகராகவும், துறவறப் பயிற்சி பொறுப்பாளர்ராகவும், இறையழைத்தல் ஊக்குனராகவும் செயற்பட்டார்.

இந்திய மண்ணில் கடமைகளை முழுமனத்துடன் நிறைவேற்றிய தந்தையவர்கள் மீண்டும் தாய்நாடு திரும்பினார். யாழ் அருள் ஆச்சிரமத்தில் 1994ம் ஆண்டு ஜுலை 5ம் திகதி அதிபராக பொறுப்பேற்று மீண்டும் தனது பணியை இலங்கையில் தொடர்ந்தார். யாழ் நகரில் போர்ச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்வுற்ற அருட்தந்தை ஸ்ரீபன் அவர்களும் உடன் துறவு சகோதரர்களும் மாணவர்களும் வன்னி மண்ணிற்கு வந்து சேர்ந்தார்கள்.

இங்கே மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் அவர்களின் துணையுடன் இடமொன்று கிடைக்கப்பெற்று இல்லமொன்று தற்காலிகமாக அமைக்கப்பட்டது. அது நிரந்தரமாக வேண்டும் என்ற ஆசையினால் தூண்டப்பட்ட அடிகளார் பல சவால்களைச் சந்தித்து இறைகரத் துணையோடு செபமாலை ஆச்சிரமம் என்னும் துறவிகள் இல்லமொன்றை 1999ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி அன்று மதவுவைத்த குளத்தில் அமைத்திட வழியானார். அவர் அவ்வில்லத்திலேயே அதிபராகவும் இலங்கை மாகாண செபமாலைத் தாசர் சபை முதல்வராகவும் பணியாற்றினார்.

தற்போது செபமாலைத்தாசர் சபையின் உயர்தலைவராக தனது பணி வாழ்வில் நுழைகின்றார். இறை விசுவாசமும் இறை அன்பும் கொண்ட இவர் மனித நேயம் அதிகம் கொண்டவராக தனது பணி வாழ்வில் திகழ்ந்துள்ளார்.

அருட்பணியாளர் எம். நிர்மலராஜ் (செ.தா.)
றோசறி ஆச்சிரமம், மதவுவைத்தகுளம், வவுனியா.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.